கல்கி


KALKI 6.7.2003 ரூ.6.00



சரணடையாத மீரா!

நெல்லை **IIPE** LAXMI RAMAN

IMPROVEMENT SCHOOL



தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மாநில
ரேங்க் பெற்றுத் தரும் நிறுவனம்.
ஏழு ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான
மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில்
அனுமதி பெற்றுத் தந்த நிறுவனம்...

MEDICAL STATE TOPPERS

2002 - 03
IMPROVEMENT BATCH



எஸ். ஆக்னஸ் சிந்தியா
மாநிலத்தில் 2ம் இடம்

2001 - 02
IMPROVEMENT BATCH



கே. ஹிருதய பாத்திமா
மாநிலத்தில் முதல் இடம்

50 / 50 in BIOLOGY
Entrance - 19 பேர்

226 மாணவர்கள்
90/100-க்கு மேல்

❖ 98.32 க்கு மேல் ⇨ 13 பேர்
❖ 95.69 க்கு மேல் ⇨ 121 பேர்

∴ From us 1/8th of Medical Admn. this year.
In Improvement almost 80% of the students scored
> 90% marks in Medical Entrance...

1999-ம் ஆண்டு :	எஸ். கோமதி	- மருத்துவ மாநில முதல் இடம்
2001-ம் ஆண்டு :	எம். இசைவாணி	- மருத்துவ மாநில 2ம் இடம்
	எம். கார்த்திக் ரங்கநாத்	- பொறியியல் மாநில 2ம் இடம்
2002-ம் ஆண்டு :	கே.ஹிருதய பாத்திமா	- மருத்துவ மாநில முதல் இடம்
	எஸ்.ஏ.கண்ணன்	- பொறியியல் மாநில 4ம் இடம்
2003-ம் ஆண்டு :	எஸ். ஆக்னஸ் சிந்தியா	- மருத்துவ மாநில 2ம்இடம்

CITY OFFICE

IIPE 42, திருவனந்தபுரம் ரோடு,
(பாளை பஸ் நிலையம் அருகில்), திருநெல்வேலி-2.
✆ (0462) 2561171, 2561172, 2561173, 2521619

IIPE LAXMI RAMAN IMPROVEMENT SCHOOL,
Laxmi Raman Nagar, UthamaPandianKulam,
TUTICORIN ROAD, TIRUNELVELI - 627 351.

HOSTEL *for* BOYS & GIRLS

Your Only solution to get into a Professional College...

'எனக்கு யாரும் தடை போட முடியாது!'

காங்கிரஸ் கோஷ்டிப் பூசல், புதிய பரிமாணம் பெற்றிருக்கிறது. "இளங்கோவனைத் தூக்க வேண்டும்" என்ற கோஷம் பலமாக ஒலிக்கிறது. இளங்கோவனைச் சந்தித்து "கட்சி நலனுக்காக நீங்கள் ஏன் ராஜினாமா செய்யக் கூடாது?" என்று கேட்டபோது மனிதர் பாய்ந்துவிட்டார் :

"காங்கிரஸ் கட்சியில் கோஷ்டி மோதலை ஊக்குவித்து, கட்சியின் இமேஜை உடைக்க நினைக்கிறார் ஜெயலலிதா. அதற்குச் சில காங்கிரஸ் பிரமுகர்கள் துணை போகிறார்கள் என்றுதான் சொன்னேன். இந்தப் பிரமுகர்கள் எப்போதும் ஆளும் கட்சியை அண்டிப் பிழைப்பவர்கள். பலவிதமான சலுகைகளை அரசிடம் எதிர்பார்த்து நிற்பவர்கள். இவர்கள் அ.தி.மு.க. பிரமுகர்களை எப்படிச் சந்திக்கிறார்கள். எங்கு சந்திக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். காலம் வரும்போது அவர்களது முகமூடி கிழித்தெறியப்படும். என்னையும் சோ.பா.வையும் வரும் பாராளுமன்றத் தேர்தல் வரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்று மேலிடம் சொன்ன பிறகு, அந்தக் கும்பலுக்கு நடுக்கம் வந்துவிட்டது. "இரட்டைத் தலைமை கூடாது. இளங் கோவனை நீக்குங்கள்" என்று குரல் கொடுக்கிறார்கள். இளங்கோவனை நீக்கிவிட்டால் ஜெயலலிதாவை விமர்சிக்கும் ஒரு காங்கிரஸ் குரல் அடங்கிவிடுமல்லவா!"



கூட்டணி பற்றியெல்லாம் பேச உங்களுக்கு உரிமை கிடையாது என்றும் விமர்சிக்கப்படுகிறதே!

சோனியா காந்தியைத் தனிப்பட்ட முறையில் ஜெயலலிதா பல முறை விமர்சித்த பின், அவரது கட்சியுடன் கூட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை. இதைச் சொல்வதில் எந்த தவறுமில்லை. கட்டுப்பாடும் மீறவில்லை. அ.தி.மு.க.வுக்கு ஜெயலலிதா தலைவராக இருக்கும் வரை அந்தக் கட்சியோடு ஒட்டும் இல்லை, உறவும் இல்லை. இந்த விஷயத்தில் மேலிடம் மிக உறுதியாகவே இருக்கிறது. அதன் மன நிலையை அறிந்து தான் நான் பேசுகிறேன். காங்கிரஸுக்கு எது நல்லதோ அல்லது உகந்ததோ, அதைத்தான் நான் சொல்லுவேன். என் பேச்சுக்குத் தடைபோட யாருக்கும் உரிமையில்லை, கட்சித் தலைவர் சோனியா காந்தியைத் தவிர.

இரட்டைத் தலைமை, கோஷ்டிப் பூசலை வளர்த்து கட்சி வளர்ச்சிக்கு ஒரு தடையாக இருப்பதாகச் சொல்கிறார்களே!

நானும் பெரியவர் சோ.பா.வும் இணைந்து செயல்படுவதால், துவக்கத்தில்

சில உரசல்கள், குழப்பங்கள் இருந்தது உண்மைதான். அதற்கும்கூட சோ.பா. அவர்கள் காரணமல்ல. அவரைத் தங்கள் இஷ்டத்துக்கு இயக்க நினைத்தவர்கள்தான் காரணம். இப்போது எங்களுக்குள் எந்த பிரச்னையும் இல்லை. காமராஜருடன் பழகி அரசியலில் ஒரு மூத்த தலைவராக இருக்கும் சோ.பா.வுடன் இணைந்து பணியாற்றுவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

திராவிடக் கட்சிகளின்மேல் மக்களுக்கு விரக்தி ஏற்பட்டு வரும் நிலையில், காங்கிரஸ் பிரமுகர்களின் கோஷ்டிப் பூசல், மக்கள் நம்பிக்கையைத் தகர்ப்பதாக இருக்கிறதே!

காங்கிரஸ் கட்சி ஒரு கூட்டுக் குடும்பம் போலத்தான். ஒரு கூட்டுக் குடும்பத்தில் என்னென்ன முணுமுணுப்புகள், மோதல்கள் இருக்கிறதோ, அவை காங்கிரஸ் கட்சியிலும் உண்டு. இது ஒரு பெரிய ஜனநாயக இயக்கம். நிறைய கருத்துச் சுதந்திரம் உண்டு. ஆனால்

ஒரு சிறிய கும்பல் என்னைச் சொல்வதால், நான் ராஜானாமா செய்ய வேண்டிய அவசியமில்லை.

காங்கிரஸை வழிநடத்தச் செல்ல மக்கள் நம்பிக்கையைப் பெற்ற சோனியா இருப்பதால், இந்த கோஷ்டிப் பிரச்னைகள் தேர்தல் வெற்றிகளைப் பாதிக்காது.

நீங்கள் பதவி விலகும் பட்சத்தில் தமிழகக் காங்கிரஸில் ஒற்றுமை உண்டாகும் என்ற நிலை வருமானால், கட்சி நன்மைக்காக ஏன் நீங்கள் ராஜினாமா செய்யக்கூடாது?

ஒரு சிறிய கும்பல் என்னை ராஜினாமா செய்யச் சொல்வதால், நான் ராஜானாமா செய்ய வேண்டிய அவசியமில்லை. மேலிடம் அனுமதிக்கும் வரை பதவியில் நீடிப்பேன். காங்கிரஸில் கீழ் மட்டத்திலிருந்து, அடிபட்டு, உதை பட்டு, மேலே வந்திருக்கிறேன். சிலரைப்போல, எடுத்தவுடன் தலைவராகவோ, ராஜ்ய சபை உறுப்பினராகவோ அரசியலில் பிரவேசிக்கவில்லை. இவ்வளவு பொறுப்புகளைக் கொடுத்தும் திருப்தி அடையாத அவர்கள், விட்டால் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைமைப் பொறுப்பைக் கூடக் கேட்பார்கள். இத்தனைக்கும், ஒரு முனிசிபால் வார்டு தேர்தலைக் கூட சந்திக்க தைரியமில்லாதவர்கள் அவர்கள்.

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **ராஜன்**

—— -இளங்கோவன் பேட்டி!

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : **62 யு.எஸ். டாலர்**
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அனுப்பிய சமரசத் தீர்வுத் திட்டம் வருகிற ஜூலை ஆறாம் தேதி முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியத்தால் பரிசீலிக்கப்பட இருக்கிறது. அதன் பின் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் அது ஏற்புடையதாக இருக்குமானால், விவகாரம் மத்திய அரசிடம் செல்லும். மத்திய அரசு அலகாபாத் நீதிமன்றத்தில் முறைப்படி மனு தாக்கல் செய்து, அங்கு நிலுவையில் இருக்கும் ஐந்து வழக்குகளும் வாபஸ் பெறப்பட்ட பின், சமரசத் திட்டம் அமலாக்கப்படுமாம்.

ஜெயேந்திரர் கொடுத்த சமரசத் திட்டம் குறித்துப் பலவித ஊகங்கள். தேசிய அளவில் இன்று பத்திரிகையாளர்கள், காஞ்சிபுரத்தை நோக்கிப் படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். "எல்லோருக்குமே என் ஆசிர்வாதம் உண்டு" என்று மட்டும் சொல்லும் ஜெயேந்திரர், தமது சமரசத் திட்டத்தைப் பற்றி மூச்சு விடுவதில்லை.

"சமரசத் திட்டம் என்பது ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களில் தயாரிக்கப்பட்டதல்ல... பெரியவரின் இதயத்தில் பல நாட்களாக, அடைபட்டு நின்ற பிரச்னைதான் அயோத்தி. "மக்கள் அடித்துக் கொண்டு சாகும் போது, யாருடைய க்ஷேமத்திற்காக நாங்கள் பிரார்த்தனை செய்வது?" என்ற கேள்வியே ஜெயேந்திரர் முன்னர் விஸ்வரூபமெடுத்து, பிரச்னைக்குத் தீர்வு காணத் தூண்டியது" என்கிறார்கள் மடத்துக்கு நெருங்கியவர்கள்.

"இப்போது தலைவர்கள் மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டார்கள். அரசியல் தலைவர்கள் என்றாலே ஊழல் செய்யக் கூடியவர்கள், சுயநலவாதிகள் என்ற அழுத்தமான நம்பிக்கை உண்டாகி விட்டது. இவர்களால் அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியாது என்பதால்தான், ஜெயேந்திரர் பிரச்னையைக் கையில் எடுத்தார்" என்கிறார் மடத்து அணுக்கத் தொண்டர் ஒருவர்.

சமீபத்தில் தில்லியில் நடந்த பீடாரோகண ஜெயந்தி விழாவில்கூட "அரசியல்வாதிகள்



இந்தப் பிரச்னையை விட்டு விட்டு, விலகி விட வேண்டும்" என்று ஜெயேந்திரர் சொன்னது இந்த அடிப்படையில்தானாம். 'ராமஜன்ம பூமி' என்பது இந்துக்களின் நம்பிக்கையை அடிப்படையாகக்



வரலாற்றில் இடம் பிடிக்கிறார்

ஜெயேந்திரர்!

கொண்ட இடம். அந்த நம்பிக்கைக்கு அங்கீகாரம் கொடுக்க மற்றொரு தரப்பினர் ஒப்புக்கொண் டால், நல்லிணக்கம் உச்சியைத் தொடும். ஆனால் அதில் பிரச்னை ஏற்படும் போது, இரு தரப்பாரும் பேசித் தீர்த்துக் கொள்வதுதான் உசிதமான காரியம். நீதிமன்றத் தீர்ப்பு வந்தால் கூட ஒரு தரப்பாருக்கு அது பாதகமாக இருக்க லாம். அதனால் மோதல்கள் வரக் கூடும். எனவே பேச்சு வார்த்தை மூலம் வருவதே நல்ல தீர்வாக இருக்க முடியும் என்பதே ஜெயேந்திரர் எண்ண ஓட்டமென்று சொல்கிறார்கள்.



வேறெந்த ஆன்மிகத் தலைவர்களையும் விட அயோத்தியில் நிலவும் சூழலை நன்கு அறிந்தவர் ஜெயேந்திரர். சங்கர மடத்தின் சார்பாக இயங்கும் 'காஞ்சி அயோத்தியா அறக்கட்டளை' அயோத்தியில் பல சமூக சேவைகளைச் செய்து வருகிறது. இந்த அறக்கட்டளையில் உள்ள அறங்காவலர்கள் இருவர், அயோத்தியைச் சேர்ந்த முஸ்லிம்கள். எனவே உள்ளூர் முஸ்லிம்களின் உண்மையான உணர்வுகள் ஜெயேந்திரருக்குத் தெரியும்.

அரசியல் ரீதியாக பா.ஜ.க.வும் ஜெயேந்திரரின் சமரசத் தீர்ப்பை வரவேற்கிறது. இதன் மூலம் அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு வருமானால், 'எங்கள் ஆட்சியில்தான் பிரச்னை ஓய்ந்தது' என்று கூறி, வரும் பாராளுமன்றத் தேர்தலில் வாக்கு கேட்கலாம். அப்படித் தீர்வு எதுவும் வராவிட்டாலும்கூட 'ராமர் கோயிலைக் கட்டியே தீருவோம்' என்று சொல்லி மீண்டும் பிரசாரம் செய்யலாம்!

'கோர்ட் சம்மதத்தின் பேரில்தான் ஜெயேந்திரர் சமரச முயற்சியில் ஈடுபட வேண்டும்' என்கிறது காங்கிரஸ்! பல சிவில் வழக்குகளில் கோர்ட்டுக்கு வெளியே செட்டில்மெண்ட் செய்துகொண்டு, பின்னர் கோர்ட்டை நாடுவது போல இந்தப் பிரச்னையிலும் செய்யலாமே' என்கிறார்கள் ஜெயேந்திரருக்கு வேண்டியவர்கள். அயோத்திப் பிரச்னைக்கு இரு தரப்பாரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் தீர்வு வருமானால், அது அரசியல் ரீதியாக, காங்கிரஸுக்கு ஆதாயமாக இருக்காது என்கிறார்கள்.

ஜெயேந்திரரின் இரண்டு பக்க சமரசத் தீர்வு என்னவாக இருக்க முடியும் என்பதுதான் நாடு முழுக்கப் பேச்சாக இருக்கிறது. "வரலாற்றுச் சிறப்பு மிக்க கோட்டைகள், மசூதிகள், தொல் பொருள் துறையின் பாதுகாப்பில் இருக்கின்றன. அங்கெல்லாம் தொழுகை நடப்பதில்லை. பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் கட்ட முஸ்லிம்கள் ஒப்புக் கொள்ளும் நிலையில், இந்த நூறு மசூதிகளிலும் முஸ்லிம்கள் தொழுகை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்பதும், அதே சமயம் அயோத்தியில் சுமார் பத்துக் கோடி செலவில் வேறொரு இடத்தில் புதிய மசூதி கட்ட நிலம் தரப்படும்" என்பதும் சமரசத் திட்டத்தின் ஒரு பகுதி என்று கசிந்து வரும் செய்திகள் சொல்கின்றன.

ஜெயேந்திரரின் சமரசத் திட்டம் முற்போக்கு எண்ணம் கொண்ட முஸ்லிம்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெறும் என்கிறது மடத்து வட்டாரம். அயோத்தியில் புதிய மசூதி கட்டுவதற்குப் பிரச்னைக்குரிய இடத்திலிருந்து மிகத் தூரத்தில் நிலம் ஒதுக்குவதற்குப் பதிலாக, ராமர் கோயிலுக்குப் பக்கத்திலேயே இடம் ஒதுக்கினால், ஒரு கௌரவமான தீர்வாக இருக்கும் என்பது முஸ்லிம் பழைமைவாதத் தலைவர்களின் எதிர்பார்ப்பு.

ஆறாம் தேதிக்குப் பிறகு ஜெயேந்திரர் இது சம்பந்தமாக முஸ்லிம் தலைவர்களுடன் பேசி, இறுதி முடிவு எடுக்க டில்லி செல்லலாம் என்கிறார்கள். ஜெயேந்திரரின் முயற்சிப்படி அயோத்திப் பிரச்னைக்குத் தீர்வு கிடைத்தால், அவர் வரலாற்றில் இடம் பிடிப்பார் என்றும் சொல்கிறார்கள்.

- ப்ரியன்

சந்தாதாரர் காட்டிலே பரிசு மழை!



கல்கி பத்திரிகைக்கு ஆறு மாதச் சந்தா ரூ.165 கட்டினால் போதும். ரூ.20 பெறுமானமுள்ள 'வாழ்க நலமுடன்' கல்கி சிறப்பு மலர் **இலவசம்!**

அல்லது,

ஒன்றரை ஆண்டுச் சந்தா ரூ.495 கட்டினாலோ, ரூ.80 பெறுமானமுள்ள கல்கி தீபாவளி மலர், ரூ.20 மதிப்புள்ள 'வாழ்க நலமுடன்' சிறப்பு மருத்துவ மலர் ஆகிய இரண்டுமே **இலவசம்!!**

'வாழ்க நலமுடன்' மருத்துவ மலரும், 2003 - கல்கி தீபாவளி மலரும் விலை மதிக்க முடியாத அளவில் மகிழ்ச்சியும் பயனும் தரக் கூடியவை. இந்தப் பொக்கிஷங்கள் இரண்டும் குறைந்த எண்ணிக்கையிலேயே சந்தாதாரருக்காக ஒதுக்கப்படுகின்றன.

எனவே ஏமாற்றத்தைத் தவிர்க்க உடனடியாகச் செயல்படுங்கள்.

ஏற்கெனவே எமது நேரடி சந்தாதாரராக இருப்போரும் ஓராண்டு அல்லது ஒன்றரை ஆண்டுக்கு சந்தாத் தொகை அனுப்பி, தங்கள் சந்தாவை நீடிக்கச் செய்து பரிசுகளைப் பெறலாம். சந்தா எண்ணைத் தவறாமல் குறிப்பிடவும்.

முழு விலாசத்தைத் தெளிவாக எழுதவும். **முடிவு தேதி ஜூலை 12, 2003.**

'வாழ்க நலமுடன்' சிறப்பு மருத்துவ மலர், ஜூலை 20 கல்கி இதழுடன் சேர்த்து வெளியிடப் பெறுவதால், இத் திட்டத்தின் முடிவு தேதியை ஒத்திப் போடுவதற்கில்லை. 'கல்கி' என்ற பெயருக்கு சந்தாத் தொகையை **D.D, M.O.** *அல்லது* **Cheque** *மூலம் அனுப்பலாம். வெளியூர்* **Cheques** *ஏற்கப்படமாட்டா.*

அரிய வாய்ப்பு!
தவற விடாதீர்கள்!!

கல்கி சந்தாத் தொகை அனுப்ப வேண்டிய முகவரி :
சர்க்குலேஷன் மானேஜர், கல்கி காரியாலயம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 097.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

அகிம்சையின் இரைச்சல்!

வன்முறை பெரும்பாலும் இரைச்சலுடன் வருகிறது. அகிம்சை மௌனத்தில் நிகழ்கிறது.

ஆனால் இப்போது அகிம்சையாளர்களும் சப்தம் செய்தால்தான், வன்முறை ஓயும் என்ற காலம் வந்திருக்கிறது. அகிம்சையைப் புறக்கணிக்க வேண்டும் என்ற செய்தி உறுதியாகவும், தெளிவாகவும் வர வேண்டியிருக்கிறது. இளம் வயது முதல் இந்த மனப் பயிற்சி வேண்டும்.

இளைஞர்களிடம், இம்சைக்குக் காரணமாக இருப்பது கோபமும், இம்சை செய்வதில் உள்ள ஒருவிதப் பெருமித உணர்வும் தான். வெட்க உணர்வு இல்லை. மக்கள் தங்கள் வன்முறையிலும், கோபத்திலும் பெருமைப்படுகின்றனர். அதுதான் கௌரவம் என்றும், வலுச் சண்டைக்குப் போவது அந்தஸ்தின் அடையாளம் எனவும் அவர்கள் நினைக்கின்றனர்.

வலுச்சண்டைக்குப் போகும் குணம், வெட்கப்பட வேண்டிய ஒன்று எனக் கருதப்படுவதில்லை. இது, வலுச் சண்டையும், வன்முறையும் சமுதாயம் முழுவதும்

என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் மும்பையில் இருக்கிறார். அவருடைய மனைவிக்கு உடல்நலம் குன்றியிருந்தது. சென்னைக்கு வந்த போது, வழக்கம் போல, எங்களை வந்து பார்த்தார். அப்போது எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற ஓர் இடத்தில், 'ஆர்ட் அஃப் லிவிங்' வகுப்புகள் நடந்து கொண்டிருந்தன. அதைக் கேள்விப் பட்டதும், கணவன்-மனைவி என இரண்டு பேருமே அந்தப் பயிற்சியில் சேர்ந்தார்கள்.

அவர்கள் மும்பை



புறப்படுவதற்கு முன் 'இப்போது எப்படி இருக்கிறீர்கள்?' என்று விசாரித்தேன். 'பலன் தெரிகிறது' என்றார். அதற்குப் பிறகு ஒருநாள் மும்பையிலிருந்து நண்பர் என்னைக் கூப்பிட்டு, 'வாழும் கலை' பயிற்சி அவர்களுக்கு மிகுந்த பயன் அளித்ததென்றும், இப்போது மிக மகிழ்ச்சியாக இருப்பதாகவும், சொன்னார். 'நீங்களும் இந்தப் பயிற்சியில் சேர வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

இது நடந்து சுமார் ஒரு வருடத்துக்கு மேல் ஆகிவிட்டது. நானும் என்னுடைய மனைவி ராஜமும், மகன் கிருஷ்ணனும் 'ஆர்ட் ஆஃப் லிவிங்' பயிற்சியில் சேர்ந்தோம். அன்றிலிருந்து இன்றுவரை தினசரி பயிற்சியைச் செய்து வருகிறோம். மூன்று வருடங்களாக என் மனைவிக்கு இருந்த முதுகு வலி குறைந்து, இப்போது பரவாயில்லை. வெளிறிப் போய் இருந்தவன், இப்போது தொடர்ந்து 'ஆர்ட் ஆஃப் லிவிங்' பயிற்சிக்குப் பிறகு, பழையபடி ஆகிவிட்டான். என்னைப் பொறுத்தவரை, வயது ஆனாலும் என்னால் சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது. இந்தப் பயிற்சியினால் மன தைரியம் கூடுவதோடு, பிரச்னைகளை எதிர்கொள்ளும் மன வலு கூடுகிறது. உறக்கத் தூக்குப் பிறகு கிடைக்கும் உற்சாகம் கிடைக்கிறது. இப்போது டென்ஷன், சோர்வு எதுவுமில்லை.

என்னிடம் இசை பயில வருகிற இளைய தலைமுறையினரும் 'வாழும் கலை' பயிற்சியில் சேர்ந்து பயனடைந்து வருவது, எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

நம்முடைய மூச்சில் ஒரு பெரிய உண்மையே ஒளிந்திருக்கிறது என்பதை நான் அறிந்திருக்கவில்லை. பிறந்த கணம் முதல் இறப்புவரை இடைவிடாது நம்முடன் மூச்சு இருக்கிறது. ஆனால் நாம் அதை உணர்ந்திருக்கிறோமா? நம் உடல் ஆரோக்கியத்துக்கும், மன அமைதிக்கும், சீரான உணர்வுகளுக்கும் மூச்சுதான் மூல காரணம். எளிதாக இதைச் சொல்லிவிட்டாலும், எத்தனை பெரிய உண்மை இது!

குருஜி வெளிக் கொண்டு வந்த இந்த எளிய பயிற்சிமுறை, ஒரு வரப்பிரசாதம். இதை நமக்குத் தந்தவர், நம் மகிழ்ச்சியைத் தவிர, நம்மிடமிருந்து வேறு எதையும் எதிர்பார்ப்பதில்லை.

- லால்குடி ஜெயராமன்

அன்பின் ஊற்று-3

வளர்வதற்கு ஊக்கம் தருகிறது. அதனால், மனித தர்மம் குறைகிறது. சில திரைப்படங்களும், தற்கால இசையும் ஏமாற்றம், கோபம், பழி வாங்கும் உணர்வுகளை மேன்மைப் படுத்துகின்றன. இவை நடிகர் நடிக்கும் பாங்கால், குழந்தைகளுக்கு ஒரு முன்மாதிரியாகி விடுகின்றன.

கோபமும் வன்முறையும் குற்ற உணர்வை ஏற்படுத்தும் விஷயங்கள். அவை வெட்கத்துக்குரிய பண்புகள் என்ற வலுவான உணர்வை சிறு வயதிலேயே ஏற்படுத்த வேண்டும். அஹிம்சையின் இரைச்சல் இளம் பருவத்திலிருந்தே ஒலிக்க வேண்டும்.

அன்பு, கருணை, எல்லோரும் நம்மைச் சேர்ந்தவர்கள் எனும் உணர்வு போன்ற மனிதப் பண்புகள் வளர உறுதியாகவும், தெளிவாகவும் ஊக்கம் தருவது அவசியம்.

மக்கள் கோபப் படுவதற்கு வெட்கப்படா விட்டால், அவர்கள் கோபப்படவும், வன்முறையில் இறங்கவும் உரிமை பெற்றதாக உணர்வர். நோயையும், கெட்ட பழக்க வழக்கங்களையும் எதிர்க்க, எதிர்ப்புச்சக்தி தேவை. அது போல, சில சமயங்களில் எதிர்த்து நிற்றலும் நல்லதே.

புத்துணர்ச்சிப் பொட்டலம்!

✉ இன்றைய இளைய தலைமுறையினருக்குப் பணத்தின் அருமை தெரிவதில்லை. எப்படியோ படித்து டிகிரி வாங்கினால் போதும், வேலை கிடைத்து விடும் என்ற மனோபாவம் மிகுந்துள்ளது. அதைப் போக்கும் விதமாய், வாழ்வில் முன்னேற ஏறுநூறு போன்ற தொடர்கள் நிச்சயம் ஒரு திருப்புமுனை.

ஈரோடு-1, ரேவதி ப்ரியன்.

✉ தருமபுரம் சுவாமிநாதன் பேட்டி அருமை! தெரியாத பல அரிய ஆன்மிக விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

சிதம்பரம்-2, ஸ்ரீவித்யா காளிதாஸ்.

✉ தாலியே கட்டாமலும், தாலியே இல்லேன்னாலும் ஊருக்குள்ளார ஒரு தப்புத் தண்டா பண்ணாமல் அத்தனை ஒழுக்கமாக, கட்டுப்பாடாக வாழ்ந்து வரும் தொட்டியபட்டிக் கிராமத்தினர் பாராட்டுக்குரியவர்கள்!

சேலையூர், கே.வி. ராமன்.

✉ வெளித் தோற்றத்தை வைத்து மனிதனை எடை போடாமல், அவனின் மனத்தை வைத்துத்தான் எடை போட வேண்டும் என்ற உண்மையை உணர்த்தியது 'பிரஜை' சிறுகதை.

இராஜபாளையம், வே. ஈஸ்வரன்.

✉ ஆசாரமான குடும்பம், அயல் நாடுகளில் எப்படி வாழ்க்கையை அனுபவிக்கப் போகிறது என்பதைச் சொல்லும் சிதா ரவியின் 'ஆராதனை' ஆரம்பமே அசத்தல்!

ஈரோடு-10, ஆர்.மைதிலி ரமேஷ்.

✉ சுஜாதாவின் புகைப்படத்தைப் பார்த்த பொழுது அவருடைய அழகும், அவருடைய செயல்பாடுகள் பற்றிய கட்டுரையைப் (புதுப்பொலிவு பிஸினஸ்) படித்தபொழுது அவருடைய அறிவும் பளிச்சிடுவதை உணர்ந்தேன்.

மதுரை-1, என். பாலகிருஷ்ணன்.

✉ கண்களில் கனிவைத் தேக்கி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் அட்டைப்படம் சிலிர்க்க வைத்தது. அவரது புத்தம் புதிய தொடர், மூடிய ஜன்னலைத் திறந்தது போல் புத்துணர்ச்சி தருகிறது.

திருச்செங்கோடு-11, டி.ஏ.சி. பிரகாஷ்.



✉ எல்லாத் தரப்புக்கும் பிடித்த 'ஹோம்லி பால் பாயசம்' என்ற உமது 'நள தமயந்தி' விமர்சனமெல்லாம் ஓ.கேதான்! ஆனால்... 'முந்திரிப் பருப்பு' இல்லாத பால்பாயசம் போல், படத்தில் ஏதோ ஒரு குறை தெரிகிறதே சுவாமி!

திருவாரூர், ஆரூர். அரங்கநாதன்.

✉ தலையங்கம் கண்டேன். ஒவ்வொரு சராசரி மனிதனின் வாழ்விலும் ஒரு பிடிப்பாய், பிடிமானமாய்த் திகழ்வது மதம். ஒருவருக்கு ஆன்ம சாந்தியையும், சமாதானத்தையும், நற்பண்புகளையும் அளிக்குமானால் அத்தகைய மதம், எம்மதமாயிருந்தாலும் சம்மதம். மேலும் இதுவே நமது மதச்சார்பற்ற நிலைக்கு எடுத்துக்காட்டு. இத்தகைய உயரிய தத்துவத்தை வெளிப்படுத்தும் வண்ணம் தலையங்கம் அமைந்துள்ளது.

தூத்துக்குடி, ஓ.எஸ். காந்தி.

✉ ஆர்.கே. சுவாமியின் இருபதாண்டுக் கால நண்பர் என்று என்னைப் பற்றிக் கடந்த இதழில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவர் எனது குரு. அவரது தலைமையின் கீழ் இருபத்தைந்து ஆண்டுக் காலம் பணியாற்றினேன்.

சென்னை, ஆர். ராமன்,
இயக்குனர், ஆஸ்பிரேஷன் கம்யூனிகேஷன்ஸ்.

வட்டமேஜை



• மோகன்



• எஸ். புவனேஸ்வரி



• ஆர். கிருத்திகா

கல்வி பெறக் கை கொடுங்கள்; வாழ்க்கை உயர வழி காட்டுங்கள்!

நான் பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறையில் ஆய்வு நிறைஞர் (M.Phil) பட்டம் படித்து வருகிறேன். என் தாய் என்னை, கூலி வேலை செய்து படிக்க வைக்கிறார். என் தந்தை இறந்து விட்டார். என் ஆய்வுப் பணியை முடிக்கப் போதுமான பொருளாதார வசதி இன்றி அவதியுறுகிறேன். ஏழை மாணவர்களுக்காக தாங்கள் வழங்கும் உதவித் தொகையை எதிர்பார்த்து இருக்கிறேன்.

சென்னை - 53. அ. மோகன்
(பார்வையற்றவர்)

நான் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது தந்தையின் ஆண்டு வருமானம் ரூ.12000 மட்டுமே. என்னைப் படிக்க வைக்க மிகவும் சிரமப்படுகிறார். சென்ற ஆண்டு B.E படிக்க தாங்கள் அனுப்பி வைத்த ரூ.1500/- மிகவும் உதவியாக இருந்தது. இப்போது G.C.T காலேஜில் நான்காம் ஆண்டு படித்து வருகிறேன். எனக்கு இந்த ஆண்டும் கல்வி பெற உதவித் தொகை அனுப்பி வைக்குமாறு வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

துறையூர். ஆர். கிருத்திகா.

நான் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவள். என் தந்தையார் வாகன ஓட்டுனராகப் பணியாற்றி வருகிறார். வருமானம் மிகவும் குறைவு. பத்தாம் வகுப்பில் 1100க்கு 974 மதிப்பெண்கள் பெற்றுள்ளேன். பதினோராம் வகுப்பில் செங்கல்பட்டு ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயாவில் படித்து வருகிறேன். தங்கள் பொருளாதார உதவியைக் கோருகிறேன்.

செங்கல்பட்டு. எஸ். புவனேஸ்வரி.

கல்வி பெறுவதற்கு உதவித் தொகை கோரி இது போன்ற விண்ணப்பங்கள் ஆயிரக்கணக்கில் ஆண்டுதோறும் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு வந்து சேர்கின்றன. மனுக்களையும் அவற்றுடன் இணைக்கப்படும் சான்றிதழ்களையும் அறங்காவலர்கள் கவனமுடன் பரிசீலித்து, உதவித் தொகைகள் பெறத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இவ்வாண்டு ரூபாய் இரண்டு லட்சத்துக்கும் அதிகமான அளவில் உதவித் தொகைகள் வழங்கப்பட உள்ளன.


அமரர் கல்கி அவர்களின் நினைவாக நடைபெறும் இந்தப் புனிதப் பணியில் பங்கேற்க விரும்பும் வாசகர்கள், தங்கள் வசதிக்கேற்ப நன்கொடைகள் அனுப்பி வைக்கலாம். ரூ.1000 அல்லது அதற்கு மேற்பட்ட அளவில் பெறப்படும் நன்கொடைகள், மூலதன நிதியில் சேர்க்கப்பட்டு, அரசு அனுமதிக்கும் பத்திரங்களில் முதலீடாகி, அதிலிருந்து கிடைக்கும் வருவாய், உதவித் தொகைகளாக விநியோகமாகிறது. எனவே உங்கள் நன்கொடை நிரந்தரப் பயன் அளிப்பதாக அமைகிறது.

KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு A/c Payee cheque அல்லது DD அல்லது MO அனுப்பலாம். நன்கொடைகளுக்கு 80G பிரிவின் கீழ் வருமான வரிச் சலுகை உண்டு.

விலாசம்:
MANAGING TRUSTEE
KALKI KRISHNAMURTHY
MEMORIAL TRUST
New # 14, Fourth Main Road,
Kasthurba Nagar, Adyar, Chennai 600 020

நன்றி.

கல்கி ராஜேந்திரன்
(நிர்வாக அறங்காவலர்)



சீன ஒப்பந்தம் சாதனையல்ல!

இந்தோ-சீன உறவுகள் பலப்பட்டிருக்கின்றன. இரு நாட்டுப் பிரதமர்களும் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்கள். பிரதமர் வாஜ்பாய், சீன ஜனாதிபதியையும் (ஹூ ஜின்டௌவ்) சந்தித்துக் கை குலுக்கிவிட்டார்.

உலகின் பார்வை இந்தப் புதிய உறவின் மீது திரும்பியிருக்கிறது. பாகிஸ்தானோ, இந்தியாவின் பிறிதொரு அண்டை நாடு இப்படி ஆதரவுக் கரம் நீட்டி வெற்றி கண்டுவிட்டதே என்று சற்றே கலவரப்படுகிறது. சிக்கிம் வழியாகச் சென்று சீனாவுடன் வர்த்தகம் செய்ய, மீண்டும் வழி பிறந்துள்ளதை அம்மாநில முதல்வர் வரவேற்று மகிழ்கிறார்.

இவையனைத்தும் ஆக்கபூர்வமான முன்னேற்றத்தின் அறிகுறிகள்தான். ஆனால், இந்தியா இதுவரை சீனா விஷயத்தில் கடைப்பிடித்து வந்த எச்சரிக்கையும் பாதுகாப்பு ஏற்பாடுகளும் சிறிதும் தளர்ந்துவிடக்கூடாது. முன்னைக் காட்டிலும் அவை பலப்படுத்தப்பட வேண்டும். இதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை.

இந்தோ - சீன ஒப்பந்தத்தின் அம்சங்கள் என்ன என்று ஆராய்ந்து பார்த்தால், ஒன்பது தொழிற்துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைக்க ஒப்புக் கொண்டுள்ளன. கல்வி, கலாசார




கல்கி



2003 ஜூலை 6
சுபானு ஆனி 22
மலர் : 61
இதழ் : 49

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



பரிமாற்றங்களுக்கு வழி வகுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் எந்தெந்தத் துறைகளில் இரு நாடுகளும் ஒத்துழைக்கலாம் என ஆராய, அதிகாரிகளும் பொருளாதார நிபுணர்களும் முனைவார்கள்.


இந்த ஒத்துழைப்பு ஷரத்துகள் நல்லுறவுக்கும் தொழில் - வர்த்தகப் பரிமாற்றத்துக்கும் மிகச் சிறிய முதல்படிதான். இதைக் கண்டு நாம் அதீதமாக மகிழ்ச்சி கொண்டுவிட முடியாது.

இந்தோ - சீன எல்லைப் பிரச்னையில் இந்தியாவுக்குச் சாதகமான ஒரு நிலை பிறந்துள்ளதா என்று பார்த்தால், அதுதான் இல்லை. தற்போதைய நிலையில் உள்ளபடியே தங்கள் எல்லைப் பகுதி வரைபடங்களை இரு நாடுகளும் பரிமாறிக் கொள்ளப் போகின்றன. அவ்வளவுதான் நடக்கப் போகிறது! இதனாலேயே எல்லைப் பிரச்னை தீர்ந்து உறவுகள் பலப்படும் என்கிற ரீதியில் அரசுத் தரப்பில் பிரசாரம் செய்யப்படுவது அபாயகரமானது. சீனா ஆக்கிரமித்த இந்திய எல்லைப் பகுதி இன்னமும் சீனாவசம்தான் இருக்கிறது என்பதை மறப்பதற்கில்லை.

1975ல் சிக்கிம் இந்தியாவுடன் இணைய முடிவெடுத்தபோது, அந்த இணைப்பை சீனா ஏற்கவில்லை. சிக்கிம்மை இந்தியாவின் ஒரு பகுதியாக அங்கீகரிக்க அந்நாடு மறுத்தது. சீனத் தாக்குதலுக்கு அஞ்சியே சிக்கிம் இந்தியாவுடன் இணைந்தது என்பதால், சீனாவின் ஆதங்கமும் ஏமாற்றமும் இன்றளவும் நீடிக்கிறது. இந்தக் கசப்புணர்வின் எதிரொலி யாகத்தான் தற்போதைய பேச்சு வார்த்தைகளிலும் சீனா, சிக்கிம் விஷயத்தில் சிறிதும் விட்டுக் கொடுக்காமலே இருந்திருக்கிறது.

'எங்களைப் பொறுத்தவரையில் சிக்கிம்மின் அங்கீகாரம் என்பது இன்னமும் முடிவு செய்யப்படாத பிரச்னையாகவே நீடிக்கிறது' என்பதே சீனாவின் நிலை.

ஆனால், திபெத் விஷயத்தில் என்ன நடந்திருக்கிறது? சீனா, திபெத் தேசத்தின் மீது



படையெடுத்து ஆக்கிரமித்து, தனது ஆளுகைக்கு அதை உட்படுத்திவிட்டது. தொடக்கத்தில் இந்த அநியாய ஆக்கிரமிப்பை அங்கீகரிக்காத இந்தியா, நாளடைவில் தன் நிலையை மாற்றிக் கொண்டுவிட்டது. திபெத் பகுதி சீனாவைச் சேர்ந்ததே என்று சந்தேகத்துக்கிடமின்றி பகிரங்கமாக அங்கீகரித்திருக்கிறது.

இந்தியா, திபெத்திய அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும். ஆனால், அவர்கள் சீனாவை எதிர்த்துக் குரல் எழுப்பினாலோ, இயக்கம் ஆரம்பித்தாலோ அதற்கு இந்தியா இடம் கொடாது என்று உறுதியளிக்கப்படிருக்கிறது.

ஆக, சீனா நிகழ்த்திய மனித உரிமை மீறலுக்கு நாம் அங்கீகாரம் தரத் தயார். ஆனால், ஒரு சுதந்தர தேசம் (சிக்கிம்) தானே விரும்பி நம் நாட்டின் ஓர் அங்கமானதை சீனா ஏற்கத் தயாராயில்லை!

பலமுனைகளில் இந்தியா வெகு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தருணம் இது : சீன எல்லைப் பாதுகாப்பைப் புதிய கண்ணோட்டத்தில் சீரமைத்து அப்பகுதிகளில் உளவுப் பணிகளை மேம்படுத்தியாக வேண்டும்.

திறந்து விடப்பட்டுள்ள சிக்கிம் வர்த்தகப் பாதை, சீனத் துருப்புகள் அல்லது உளவாளிகளின் நுழைவாயிலாக மாறிவிடாமல் காக்க வேண்டும்.

உலக வர்த்தகத்தில் இன்று சிறப்பான நிலையிலுள்ள சீனா, நமது பலவீனங்களை அறிந்து நம்மை வர்த்தகத்தில் வீழ்த்திவிட அனுமதித்துவிடலாகாது.

இறுதியாக, சீனாவுடன் நம் உறவுகளின் போக்கை எடைபோட்டுவரும் பாகிஸ்தான், அடுத்து எவ்வாறு அடி எடுத்து வைக்கக் கூடும் என்பதையும் கவனமாகக் கணித்து எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

பிரதமரின் சீன விஜயம், மேம்போக்காகப் பார்க்கும்போது வெற்றிகரமானதாக இருக்கலாம். ஆனால், நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்படாவிட்டால் அதன் பின் விளைவுகள் நம்மைத் தோல்வியில் கொண்டு தள்ளிவிடக்கூடிய அபாயம் உண்டு! ●

இன்றைய ஸ்பெஷல்

ஜெயம்

அயிட்டம் நம்பர் 1 - ஸ்டார்ட்டர்

நாயகி, வில்லன் இருவரின் பிள்ளைக் காதலைச் சொல்லும் கவித்துவமான கறுப்பு வெள்ளை தொடக்கக் காட்சிகள், நல்ல படைப்பாய் இருக்கும் போலிருக்கிறது என்ற எதிர்பார்ப்புப் பசியைக் கிளறிவிடும் வெஜிட்டேரியன் சூப்.

அயிட்டம் நம்பர் 2 - சப்பாத்தி குருமா

அலைகள் ஓய்வதில்லை, பன்னீர் புஷ்பங்கள் என என்பதுகளில் கோடம்பாக்கம் சக்கையாய்ப் பிழிந்து துப்பிய 'பொடிசுகளின் கண்டதும் காதல்'தான் கதை. அதாவது, குருமாவில் தொட்டுப் பிய்க்கும் போது ரப்பர் மாதிரி பயமுறுத்தும் பிசுபிசு சப்பாத்தி ரகம்.

அயிட்டம் நம்பர் 3 - பிரியாணிப் பொங்கல்

காதலை மட்டும் நம்பினால், எங்கே கைவிட்டு விடுவார்களோ என்று தரமான தமிழ் ரசனையை சந்தேகித்து, பாலியல் வக்கிரங்கள், தகாத உறவுகள், இரட்டைத் தொனி வசனங்கள், இரத்தக் களறி ஆகிய வற்றை வலுவில் திணித்து, திரைக்கதை சமைத்திருப்பது சிக்கன் பிரியாணியையும், நெய்ப் பொங்கலையும் கலந்து கொடுத்தது போல குமட்டுகிறது.

அயிட்டம் நம்பர் 4 - அமெரிக்க பீட்சா

கூரையைப் பிரித்துக் கொண்டு, கயிற்றின் உதவியோடு காதலியின் அறைக்குள் ஊசலாடும் நாயகனின் சாகசங்கள், 'மிஷன் இம்பாசிபிள்' திருட்டு. வில்லனின் பாத்திரப் படைப்பும், அவர் வரும் போது ஒலிக்கும் பின்னணி இசையும் அப்படியே 'மம்மி'. மதிற்சுவரிலும், குறுகலான சந்துகளிலும் சைக்கிள் சவாரி சாகசம், ஜாக்கிசானின் மார்ஷியல் ஆர்ட் படங்களின் ஈடியச்சான் காப்பி. அப்புறம் ஜங்கிள் ஹண்ட், ப்ளட் ஸ்போர்ட் போன்ற ஹாலிவுட் கமர்ஷியல் குப்பைகளின் எச்சங்களாக விரியும் சீக்வென்சுகள், துரதிர்ஷ்டவசமாய், தமிழர்களுக்கு ஜீரணமாகத் தொடங்கியிருக்கும் பீட்சா.

அறிமுக அயிட்டங்கள் - 3 : சதா-ரவி-கோபிசந்த்

நாயகி சதா, நாயகன் ரவி, வில்லன் கோபிசந்த் மூவருக்குமே பாத்திரங்களோடு



பட்டென்று பொருந்திவிடுகிற தோற்றமும், பாத்திரங்களாக மாறிவிடத் துடிக்கிற அவர்களின் நடிப்பும், நுரைத்துத் ததும்பும் மில்க் ஷேக்.

குளோசிங் அயிட்டம் - ஸ்வீட்(?) பீடா

தமிழ்ப் பேசும் படங்களில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் அடையாளங்களைச் சுத்தமாய்த் துடைத் தெறிய முயற்சிக்கும் 'தம்' வரிசைப் படங்களைப் போல மீண்டுமொரு போதை தடவிய தெலுங்கு பீடா!

- விஷ்வல்தாசன்

● **ஜஸ்ட் பாஸ்**

கர்நாடக இசைக்கு கதக் நடனம்!



* ஷோபனா



* முரளி மோகன்

சினிமாவுக்கு இசையமைக்கப் போனாலும், தங்கள் ஆதாரம் ஹிந்துஸ்தானி இசையும், கர்நாடக இசையும்தான் என்று பிரகடனம் செய்வது மாதிரி இருந்தது ஸ்ரீராம் பரசுராமும், அனுராதா ஸ்ரீராமும் நடத்திய கலை நிகழ்ச்சி.

'கிருபா' தொண்டு நிறுவனத்துக்காக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் துளியூண்டு சுருதி பாக்ஸை முன்னே வைத்து, அவ்வப்போது அதைக் 'கிள்ளி'க் கொண்டு பாடாமல், தம்பூராவின் ரீங்காரம் அலைபாய நிகழ்ச்சியை ஆரம்பித்ததே அமர்க்களமாக இருந்தது.

மாரு பெஹாக் ராகத்தில் ஸ்ரீராம் ஒரு பிடி பிடிக்க, அனுராதா கிட்டத்தட்ட அதே போன்ற நம்மூர் அமிர்தவர்ஷிணியில் தன் குரல் வளத்தைக் காட்ட (ஏ அப்பா, என்ன ரேஞ்சு!), ஸ்ரீராம் இரண்டையும் இணைத்து ஒரு பாலம் போட்டாரே, மனிதருக்குக் கற்பனை மட்டுமல்ல, குரலும் கூப்பிட்ட இடத்துக்கெல்லாம் அனாயாசமாக வருகிறது. அணில் மாதிரி ஒளிந்து உட்கார்ந்து கொண்டு வயலின் வாசித்தார் எம்பார் கண்ணன். அமிர்தவர்ஷிணி ராகம் பாடிவிட்டு, முத்துசாமி தீட்சிதரின் ஆனந்தாமிருதகர்ஷிணி பாட்டைப் பாடாமல்



* ஸ்ரீ ராம்பரசுராம் - அனுராதா ஸ்ரீராம்

இருந்தால் எப்படி? இரண்டு பேருமே போட்டி போட்டிக் கொண்டு, கீர்த்தனையையும் ஸ்வரங்களையும் பாடியதும் மழை பெய்து ஓய்ந்தாற்போல் இருந்தது. அப்புறம் சின்னதாக மிஸ்ர பஹாடியில் ஒரு டும்ரி.

'கலே புஜங், பஸித அங்' என்ற பஜன் சிவனைப்பற்றி. கழுத்தில் கபாலம், தலையில் கங்கை என்ற பாட்டு. ஷோபனாவின் நடனம் மிகை இல்லாமல் இருந்தது. (நடராஜர் என்பதற்காகச் சிலர் போல் கன்னா பின்னா என்று காலைச் சுழட்டி அடிக்காமல்) கச்சிதமாக இருந்தது. ஆனால் 'அகல்யா மோட்சத்தில்' ஷோபனா தன் முழுத் திறனையும் காண்பிக்க நிறைய வாய்ப்புக்கள். அதிலும் நாசுக்கு இருந்தது.



• செல்வகணேஷ்

பஞ்சரத்ன கீர்த்தனைகளில் ஓர் 'ஆரபி' ரத்னமான 'சாதிஞ்சனே'யில் மட்டும், தியாகராஜர் ராமரை ஒரு புறம் உட்கார வைத்துவிட்டு, கிருஷ்ணரைப் பற்றிப் பாடியிருக்கிறார். ஹிந்துஸ்தானி இசைக்கு ஷோபனா பரதநாட்டியம் ஆடினார் என்றால், கர்நாடக இசைக்கு, கதக் நடனம்! அறிவித்தபோது மனசு தக் தக் என்றது. ஆனால் முரளி மோகன் (ஜெய்ப்பூர் கரானா, லக்னோ கரானா - இரண்டு பாணிகளையும் கற்றவராம்) நிறையவே அபிநயம் பிடித்து, கொஞ்சமாகப் பாதச் சலங்கையைக் கொஞ்சவிட்டார். ('தியாகராஜரை அவருக்கு எப்படி விளக்கினீர்கள் ஸ்ரீராம்?' என்று விசாரித்தோம். இங்கிலீஷில் சாகித்தியத்தை விளக்கி, கிட்டத்தட்ட ஒரு மொழி பெயர்ப்பு வகுப்பே நடத்தினாராம்!)

அப்புறம் மராட்டிய நாட்ய சங்கீத் : 'சங்கரா' ராகமாம். நம் ஹம்சத்வனி சாயலில் இருந்தது. பாகேஸ்ரீயிலும், ரீதிகௌளையிலும் ஒரு 'தரானா' தில்லானா.

• பிக்ரம் கோஷ்



எல்லா ஐட்டங்களையுமே நீட்டி போரடிக்காமல், கனகச்சிதமாக அமைத்தது ஒரு ப்ளஸ் பாயின்ட் என்றால், மேடையை அலங்காரம் என்ற பெயரில் அலங்கோலம் பண்ணாமல், எளிமையாக ஒரே ஒரு மயிற்பீலி ஓவியமும், வண்ணப் பூச் செடிக் கொத்தும் வைத்து, ரமணி ஒதுங்கிக் கொண்டது நேர்த்தியாக இருந்தது.

"புதிதாக ஏதாவது முயற்சி செய்து பாருங்கள்'' என்று இந்த நிகழ்ச்சிக்காக சுவாமி தயானந்த சரசுவதி, ஸ்ரீராம் தம்பதியிடம் கேட்டுக் கொண்டாராம். புதுமையாக இருக்க வேண்டும் என்பதற்காக ரொம்பவும் எல்லை தாண்டிவிடவில்லை. ஃப்யூஷன் போன்ற 'க்ராஸ் பார்டர் டெர்ரரிச'மும் தவிர்க்கப் பட்டிருக்கிறது. இதமாகவும், மிதமாகவும் இருந்தது.

பிக்ரம் கோஷ் மிகப் பெரிய கலைஞர். அவர் தபலாவில் வெளுத்து வாங்கியது பெரிதல்ல. அவரையே தூக்கிச் சாப்பிடுகிற மாதிரி சொல்கட்டும் சொல்லி, கஞ்சிராவும் வாசித்தாரே இளைஞர் செல்வ கணேஷ், என்ன கற்பனை, என்ன துல்லியம்! அப்பா 'விக்கு' விநாயக்ராம் போலவே இப்போது இன்டர்நேஷனல் வட்டத்தில் போய்விட்ட செல்வ கணேஷ், கஞ்சிராவில் ஒரு கிராமி அவார்டு வாங்கினால் அது அதிசயமே இல்லை. யாராவது நாதசுரத்துக்கு ஒரு புறம் தவிலும், இன்னொரு புறம் கஞ்சிராவும் போட்டுக் கொள்ளத் துணிந்தால், அஞ்சாமல் அழைக்கலாம் செல்வ கணேஷை!

- சாருகேசி

படங்கள் : வெங்கடேஷ்



தைராய்டு குறைபாடுகளுக்குத் தேவையான தெய்வீக மூலிகைகளும் & இயற்கை சிகிச்சை முறைகளும்



நம் உடலில் பல வகையான சுரப்பிகள் (Glands) உள்ளன. இவைகள் சுரக்கும் திரவங்கள் (Hormones) நம் உடலின் சீரான இயக்கத்திற்கும், வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் மிகவும் முக்கியமானவை. நம் உடலில் உள்ள ஒவ்வொரு சுரப்பியும் உடலின் குறிப்பிட்ட உறுப்பின் (Organs) வளர்ச்சிக்கு உதவுகின்றன. உடலில் நாளமுள்ள சுரப்பி, நாளமில்லா சுரப்பி (Duct Gland - Ductless Gland) என இரண்டு விதமான சுரப்பிகள் உள்ளன. நாளமுள்ள சுரப்பி என்பது தான் சுரக்கின்ற திரவங்களை குழாய்கள் மூலம் இரத்தத்தில் கலக்க செய்வது, நாளமில்லா சுரப்பி என்பது தான் சுரக்கின்ற திரவங்கள் (Hormones) நேரடியாக இரத்தத்தில் கலக்கச் செய்து, அவை செயலாற்றும் உறுப்புகளுக்கு அனுப்புகின்றன. ஒரு சில காரணங்களால் சுரக்கின்ற ஹார்மோன்கள் கூடுதலாகவோ, குறைவாகவோ சுரந்தால் அவை சார்ந்த உடல் உறுப்பினை பாதிப்புக்குள்ளாகிறது. நாளமில்லா சுரப்பிகளில் தைராய்டு சுரப்பி பற்றியும், இது பாதிப்புக்குள்ளாகும்போது உடலில் தோன்றும் பாதிப்புகள் பற்றியும், அதனை நீக்கும் இயற்கை வழிமுறைகள் பற்றியும் அறிந்துக் கொள்வோம்.

தைராய்டு சுரப்பி கழுத்துப் பகுதியில் குரல் வளையின் இரு பக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக அமைந்துள்ளது. இதன் எடை சுமார் 20 முதல் 30 கிராம் இருக்கும். இவை இரண்டு பகுதிகளாக உள்ளன (Lobes). தைராய்டு சுரப்பியில் சுரக்கும் ஹார்மோனின் பெயர் தைராக்ஸின் என்பதாகும்.

ஏதேனும் சில காரணங்களால் தைராய்டு சுரப்பிகளில் பாதிப்புகள் தோன்றும்போது மூன்று விதமான குறைபாடுகள் தோன்றுகின்றன. (1) தைராய்டு சுரப்பி அதிகமாக தைராக்ஸினை சுரப்பது (Hyper Thyroidism), (2) குறைவாக தைராய்டு சுரப்பி சுரப்பது (Hypo Thyrodism), (3) தைராய்டு பருத்து காணப்படுவது (Goitre) என்பதாகும்.

ஹைபர்தைராய்டிசம் : தைராக்ஸின் ஹார்மோன் அதிகமாக சுரப்பதால் தைராய்டு சுரப்பி வீங்கி பருத்து காணப்படுவதே ஹைபர் தைராய்டிசம் என்பதாகும். இந்த தைராக்ஸின் அளவு இரத்தத்தில் அதிகமாக கலந்தால் உடல் படபடப்பு, நெஞ்சுப்படப்படப்பு, அதிகமான இதய துடிப்பு, உடல் சோர்வு, தலைவலி, உடல் எடை குறைதல், அதிகமான பசி, வயிற்றுப் போக்கு, உடல் சூடு போன்ற அறிகுறிகள் இருக்கும். பெண்களுக்கு மாதவிடாயில் மாற்றம், விரல்களில் நடுக்கம் போன்றன இருக்கும்.

ஹைபோதைராய்டிசம் : தைராக்ஸின் அளவு இரத்தில் குறைவாக இருந்தால் இதற்கு ஹைபோதைராய்டு என்று பெயர். குழந்தைக்கு பிறப்பிலேயே இவ்வாறு இருந்தால் ஏற்படும் நோய்க்கு கிரிடினிசம் என்றும், பெரியவர்களுக்கு இரத்தத்தில் குறைவாக இருந்தால் ஏற்படும் நோய்க்கு மிக்ஸிடிமா என்று பெயர். குழந்தைகளுக்கு வளர்ச்சி தடைபடுதல், மன நிலை குன்றி இருத்தல், தோல் உலர்ந்து, மென்மையற்று, வீங்கி தடித்து காணப்படும். பால் சுரப்பிகளின் (Sexual Organs) வளர்ச்சியின்மை, போன்ற அறிகுறிகளும், பெரியவர்களுக்கு தோலில் முடி உலர்ந்து, சொரசொரப்பாகி உதிர்தல், முகம் எவ்வித உணர்ச்சிகளும் அற்று வீங்கி காணப்படுதல், சோர்வு, உடல் எடை அதிகமாதல், அடிக்கடி சளி பிடித்தல், உடலின் வெப்ப நிலை குறைவு, நாடி துடிப்பு குறைவு போன்ற அறிகுறிகள் தோன்றும்.

தைராய்டு நோயாளிகளுக்கு தேவையான தெய்வீக மூலிகைகள் : வேப்பிலை, வில்வம், துளசி, அத்தி, அருகம்புல், நெல்லி, நாவல், கீழாநெல்லி, கடுக்காய், தான்றிக்காய், மாவிலை போன்றவைகளை பறித்து வெயிலில் உலர்த்தி பொடி செய்து சம அளவில் ஒன்றாக கலந்து ஒரு பாட்டலில் வைத்துக் கொள்ள வேண்டும். பின் இதில் இருந்து இரண்டு ஸ்பூன் தூள் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து உணவுக்கு ஒரு மணி நேரம் முன்பாக தினம் காலை, இரவு ஆகிய இரண்டு வேளையும் உட்கொள்ளவும். இம் மூலிகைகளால் தைராய்டு சுரப்பி நோய்களால் பாதிப்படையாமல் பாதுகாக்கப்படுகின்றன. பின் இவைகளில் உள்ள சக்திகள் தைராய்டு சுரப்பியை இயல்பான அளவு சுரப்பு நீர்களை சுரக்க உதவுகின்றன.

தைராய்டு நோயாளிகள் பின்பற்ற வேண்டிய உணவு முறைகள் : இந்நோயாளிகள் தினம் காலை, ஒரு வேளை பச்சையாக சாப்பிடும் பழங்கள், காய்கள், பழஜூஸ், வெஜிடபிள் சாலட் போன்றவைகளை தேவையான அளவு காலை உணவாக சாப்பிட வேண்டும். இவைகளில் அந்தந்த காலங்களில் கிடைக்கும் காய்கள், பழங்கள் உண்பது சிறந்த பயன் அளிக்கும். தேன், இளநீர், பதனீர், கரும்புசாறு போன்றவையும் பயன்படுத்தலாம். பகல் வேளை உணவில் சமைத்த உணவு 50% அளவும், 50% அளவு சமைக்காத காய்கள், கீரைகள் இருக்கும்படியாக சாப்பிடுவது நல்லது. மாலை வேளைகளில் வெஜிடபிள் சூப், பட்டாணி சுண்டல், சத்துமாவு கஞ்சி, சுக்கு காப்பி போன்றவைகளில் ஏதேனும் ஒன்று தேவையான அளவு உட்கொள்ளவும். இரவு உணவை - ராகி, கோதுமை, மக்கா சோளம் போன்ற தானியங்களில் தயார் செய்த உணவாக தோசை, இடியாப்பம், ரொட்டி போன்றவைகளாக உண்பது நல்லது அயோடின் உள்ள உணவுகள் என்று இதுவரை தெளிவாக அறிய முடியவில்லை. எனவே உணவில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு சரிவிகித உணவை உட்கொண்டாலே தினசரி தேவையான அயோடினை பெற்றுக் கொள்ள முடியும். இவ்வாறு உணவை உட்கொள்வது உடலில் உள்ள எல்லா சுரப்பிகளும் இயல்பான அளவில் சுரப்பு நீர்களை சுரக்க உதவும்.

உடற் பயிற்சிகள் : கழுத்துப் பகுதியில் தான் இந்த சுரப்பி உள்ளது. எனவே இதனை தூண்டும் வகையில் நாம் செய்யும் உடற்பயிற்சி இருக்க வேண்டும். மேலும் கழுத்து மசாஜ், நீர் சிகிச்சை (Hydro Theraphy) மண் சிகிச்சை யோகாசனம் போன்றன செய்தால் விரைவான பலன் பெறலாம். மேலும் இது பற்றிய விரிவான விவரம் அறிய கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.



தெய்வீக மூலிகை வைத்தியர்கள்

Chennai Cell : 98410 45138 Vellore Cell : 98423 69696

தலைமை முகவரி : **Dr.M.குருபரன் & Dr.M.சபாபதி, Dr.M.சிவசக்தி,** S/o **Dr.C.K.மாணிக்கவாசகம்**

P.B.No:30, No.3, திருநாத முதலி நகர், (காலேஜ் எதிரில்), திருப்பத்தூர் (N.A.A.)-635 601 ✆ 04179-220469, 222769

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, (பிரின்ஸ் மேனர் பக்கத்தில்) கெல்லீஸ், சென்னை - 10

இரு முகவரிகளிலும் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1, மாலை 5 to 7 ✆ 28424285, 28427638

7 & 8ந் தேதி - மும்பை : காலை 9 to இரவு 8 மணி வரை The South Indian Concerns Ltd., 401, Telang Road, Matunga, (CR), Ph : 24011589, 24093979

9ந் தேதி - பெங்களூர் : காலை 11 to மாலை 1 மணி வரை, ஹோட்டல் பிரசிடென்ட் (கல்பனா தியேட்டர் அருகில்) செப்பேடையா ரோடு : ✆ 080-2266374, 2873013

20 & 21ந் தேதி - புதுடெல்லி : காலை 9 to இரவு 8 மணி வரை South Indian Hotel, 10211, Padam Singh Road, Ajmal Khan Road, Karol Bagh, : 25717126, 25723651

ஆராதனை

சீதா ரவி

சொக்கலிங்கம் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார் - எக்ஸ்ட்ரா லார்ஜ் பம்பரம்! அவரைச் சொடுக்கி விட்ட சாட்டையான ஸ்ரீமன் நாராயணப் பெருமாளே அவர் சுறுசுறுப்பைக் கண்டு மிரளும்படி ஆயிற்று. கோயில் வாசலில் ஆரம்பித்து கருவறை வரையிலும் கவனிக்கப்பட வேண்டிய சின்னதும் பெரிதுமான காரியங்கள் துல்லியமாய் எழுநூற்றுப் பன்னிரண்டு இருந்தன. அவ்வளவையும் பட்டியலிட்டுப் பங்கு பிரித்துக் கொடுத்து, ராபர்ட்ஸன் நகரின் அமெரிக்கவாழ் இந்திய ஆஸ்திகப் பெருமக்கள் அத்தனை பேரும் புண்ணியத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்திருந்தார் சொக்கலிங்கம். அந்த எழுநூற்றுப் பன்னிரண்டு காரியங்களையும் அவரவர்கள் செய்தார்களா என்று குறைந்தபட்சம் மூன்று முறை விசாரிப்பதும், செய்யாவிடில் மாற்று ஏற்பாடு பண்ணுவதுமாக கடந்த ஒரு மாத காலம் ஜிவ்வென்று பறந்து கொண்டிருக்கிறது. காந்திமதியும் அவருக்கு ஈடு கொடுத்து ஒரு சூப்பர் சைஸ் சிட்டுக்குருவி போல் பறந்து, திரிந்து பெருமாள் ஸேவைக்கு உதவிக் கொண்டிருக்கிறாள். இத்தனை நாட்களாக நவநீதாவைப் பற்றி பட்ட கவலையெல்லாம்கூட வெயிலைக் கண்ட பனி போல் விலகிப் போயிருக்கிறது என்றால், அதுவும் அந்த ஸ்ரீமன் நாராயணன் அருள்தான். ப்ருத்வி வெகு அழகாக நிலைமையைச் சீராக்கியிருந்தான்.



பெரெனியல் ஸிஸ்டம்ஸ் முதன்மை அதிகாரி என்று தமக்குப் பெத்த பெயர் இருக்கலாம்... சகட்டுமேனிக்கு ஸாஃப்ட்வேர் தீர்வுகளைத் தயாரித்து, விற்று அமெரிக்க முதலாளிகள் டாலர்களை அள்ளுவதற்கு தாம் உதவலாம். ஆனால் வீட்டில் ஒரு காதல் பிரச்னை என்றால் சமாளிக்கத் துப்புக் கிடையாது; பெற்ற மகளைத் தட்டிக் கேட்டுக் கட்டிப் போட வக்கு கிடையாது.

- இவ்வாறெல்லாம் காந்திமதி தம்மைக் கரித்துக் கொட்டுவதாக துர்ச்சொப்பனங்கள் வர ஆரம்பித்த வேளையில்தான், ப்ருத்வி ஆபத்பாந்தவனாக, அனாதரக்ஷகனாகக் கை கொடுத்தான்.

'கண்டேன் சீதையை' என்பது போல் அவன், "நவநீதாகிட்டே பேசுங்க..." என்றதும்தான் கீழைத்தஞ்சையின் குமணங்குடி கிராமம் வரை போயிருந்த சொக்கலிங்கத்தின் உயிர் ராபர்ட்


ஸனுக்கு மீண்டு வந்தது.

வீட்டின் உள்ளேயும் வெளியேயும் புயல் வீசிய அன்றைய தினத்தில் தமது செல்வ மகள் அந்த செம்பட்டைத் தலையனுடன் அவன் நண்பர்கள் வீட்டுக்குப் போயிருக்கிறாள். அவளைத் தேடிப் பிடித்து ப்ருத்வி தான் நல்ல புத்தி சொல்லி அழைத்து வந்திருக்கிறான். அவரும் தம் பங்குக்கு அவளிடம் பேசியிருக்கிறார்.

"இதோ பார் நவநீதா... அமெரிக்கா ஒரு அற்புத தேசம்... ஆனா அது எலக்ட்ரிசிடி மாதிரி... கட்டுக் கோப்பாகவும், எச்சரிக்கையாவும் அதை நாம் பயன்படுத்திக்கணும். ரொம்ப இடங் கொடுத்தா நம்மையே தீய்ச்சுக் கருக்கிடும்..."

அவர் உருவகத்தை உள்வாங்கிக் கொண்டு யதார்த்தங்களை விண்டு வைத்தாள் காந்திமதி: "தாத்தா குமணங்குடி பெருமாள் கோயிலுக்குத் தர்மகர்த்தாவா இருந்தவர். ஏதாவது சிக்கல் வந்தா ஊருக்கே பஞ்சாயத்துப் பண்ணி வைப்பார். சாதி விட்டுச் சாதியில் சம்பந்தம் பண்ணிக்கறதுகூட நம்ம வழக்கத்துல கிடையாது. நாடு விட்டு நாடு தாவுறதாவது..! ஜெர்ரி பிரவுன் நன்றாகச் சம்பாதிக்கிற நல்ல பிள்ளையா இருக்கலாம். அதுக்காக, நெருப்பைத் தூக்கி வந்து மடியிலே கட்டிக்க முடியுமா...? மாமிஸ உணவு சமைக்கிறது எவ்வளவு கொடூரம்...? யோசிச்சிருக்கியா...? முப்பது வருஷமாய் இங்கே இருந்தாலும் நாம் எல்லோருமே மரக்கறிதான் சாப்பிடறோம். உன் அப்பாவும் அண்ணாவும் விஸ்கின்னா என்னன்னு கேட்பாங்க... நீ போகிற வீடு நேர் விரோதமா இருக்கும். பொண்ணையும் மாப்பிள்ளையையும் வீட்டிலே கொண்டு வைச்சுக் கொண்டாடணும்னு எந்த அப்பா அம்மாவுக்கும் ஆசை இருக்கும். நித்ய பூஜை நடக்கிற இந்த வீட்டுக்கு அந்தப் பையனை எப்படி அழைப்பார்களாம்...?"

இந்தக் கட்டத்தில் கரகரவென்று நவநீதாவின் கையைப் பிடித்து பேஸ்மெண்டுக்கு அழைத்துப் போனாள் காந்திமதி. அந்தப் பாதாள அறையில், ஹிந்து தெய்வங்கள்



அத்தனைப் பேரும் படமாகவோ, சித்திர மாகவோ, சிலை வடிவிலோ அணிவகுத்து நெரிசலைப் பொருட்படுத்தாது அருள் பாலித்துக் கொண்டிருந்தனர். ராணி முத்து காலெண்டரில் எக்ஸ்ட்ராவாக ஒரு முருகன் சிரித்தான். பளபளத்த வெள்ளிக் கிண்ணங்களில் சந்தனம் - குங்குமம் - திருநீறு, பன்னீர் என்று பூஜை திரவியங்கள். மின்சார பல்புகள் பொருத்திய பித்தளை விளக்குகள், தீப மங்கள ஜோதி சிந்த, ரிஷிகளும், பாபாக்களும், சமகாலச் சாமியார்களும் சுவர்களை நிறைத்தனர்.



யார் அந்த மனிதர்?

ஹாலிவுட் உலகத்தில் இடம் பிடித்த இந்தியர்கள் சிலரது பெயர்கள் கட்டங்களில் உள்ளன (அவர்கள் யார் என்பதை உணர்த்த அவர்கள்

கூடுதல் மதிப்போடு அந்தப் பாதாள பூஜையறைக்கு இறக்குமதியாகியிருந்த இந்திய ஆன்மிகத்தைக் கொள்ளிக் கண்களிலிருந்து பாதுகாத்து நின்றார் கண் திருஷ்டி கணபதி!

அத்தனை பேர் சாட்சியாகவும் நவநீதாவிடம் கேட்டுக் கொண்டாள் காந்திமதி...

"வேண்டாம் நவநீதா... அந்தப் பையன் தொடர்பை இன்னியோட விட்டுடு.... பேச்சு, மூச்சு எதுவும் வேண்டாம்... ஒரேயடியா கட் பண்ணாதான் உண்டு..."

காந்திமதி சற்றும் எதிர்பாராத விதமாக ஒன்று நடந்தது.

"சரிம்மா, அப்படியே பண்ணிடறேன்..." என்றாள் நவநீதா.

'இன்னும் ஒரு மாசத்துக்கு மட்டும்...' என்று தர்மபுத்திரர் பாணியில் அவள் மூச்சடக்கி முணுமுணுத்தது காந்திமதியின் காதில் விழாது போகவே, கண்ணீர் உகுத்தபடி தன் செல்வமகளின் கன்னத்தை வழித்து திருஷ்டி கழித்தாள் அந்த அன்புத் தாய்!

அண்ணாவின் வேண்டுகோள்படி நவநீதா 'விரதம்' காத்த ஒரு மாத காலம் முடிவுற்றிருக்கிறது. இன்றைய தினம் அவளை வெளியே செல்லவிடாமல் பெருமாள் திருவாராதனம் கோயிலுக்குள் கட்டிப் போட்டிருக்கிறது. திருவோண நட்சத்திரத்தன்று நடக்க வேண்டிய ஆராதனை; ஆனால் அமெரிக்க ஆஸ்திக அன்பர்களின் சௌகரியம் கருதி, அதையொட்டிய இரண்டாவது வார ஞாயிறன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'கடமைகளைப் புறக்கணிக்காதே' என்று கண்ணனே சொல்லியிருக்கிறான். ஆதலால் அலுவலக தினத்தில் அமையும் திருவோண திருவைபவத்தைத் தள்ளி வைத்தால் தப்பில்லை, பெருமாள் கருணைக் கடல், திருவாதிரையைக் கூட திருவோணமாய் ஏற்பான்.

கண்ணாடி பதித்த கதவுகளுக்குப் பின்னால் மின் கணப்பில் பெருமாள் சர்வ அலங்காரங்களுடன் ஜொலித்தார்.

வாசலுக்கும் சன்னிதிக்கும் நூற்றியெட்டு தடவை ஓடியும் களைத்துப் போகாமல், சொக்கலிங்கம் சிரித்துக் கொண்டிருந்தார். காந்திமதியின் கண்கள் ஜெயாவைத் தேடின. கணேஷ் சுப்ரமண்யம் குடும்பத்தை அவன்தான் அறிமுகம் செய்ய வேண்டும். தென்பட்ட புது முகங்களில் தனது வருங்கால மருமகப் பிள்ளை யாராய் இருக்கும் என்று அவள் தேட, நவநீதா அரக்குப் பட்டுச் சேலையைத் தோளிலிருந்து நழுவி விடாமல் நிறுத்திக் கொள்ள அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தாள்.

"நவநீதா..." - அழைத்தது ஜெயாவின் குரல் என்று உணர்ந்ததும், காந்திமதியின் முதுகுத்தண்டு நிமிர்ந்து கழுத்துப் பக்க தசைகள் புடைத்துக் கொண்டன. அவசரமாக மகளின் கையைப் பிடித்திழுத்து சேலைத் தலைப்பை ரவிக்கையோடு சேர்த்து, பின்

பணியாற்றிய படங்களின் பெயர்களும் கீழே தரப்பட்டுள்ளன) ஒவ்வொரு பெயரிலும் உள்ள எழுத்துக்களும் அடுத்தடுத்த கட்டத்தில், எந்தத் திசையிலும் இருக்கக்கூடும். மீதமுள்ள எழுத்துக்களை ஒழுங்குபடுத்தினால், இதேபோல் ஹாலிவுட்டுக்கும் இந்தியாவுக்கும் பாலமாக உள்ள மற்றொருவரின் பெயர் கிடைக்கும். அவர் யார் என்று கண்டுபிடியுங்கள்.

1. காந்தி,
2. சலாம் பாம்பே
3. எலிசபெத்
4. சிக்ஸ்த் சென்ஸ்

மி	சே	க	ர்	க	பூ
பா	ஜ	ஜ்	நை	ட்	ர்
னு	ம	னோ	த	ஷ்	அ
அ	ஜ்	வி	ர்	யா	ர்
த்	ய்	ன்	ள	ம	ய
த	யா	ரா	மீ	ரா	நா

- ஜி.எஸ்.எஸ்.

விடைகள்.
1. பானு அத்தையா 2. மீரா நாயர்
3. சேகர் கபூர் 4. மனோஜ் நைட் சியாமளன்
பாலம் - விஜய் அமிர்தராஜ்

பொருத்தினாள்.

"காந்திமதி! இவங்கதான் சுப்ரமண்யம், சசிகலா சுப்ரமண்யம்... இது அவங்க மகன் கணேஷ்..."

நினைத்த கணத்தில் தோன்றும் பெருமாளைப் போலவே அந்த முக்கியமான தருணத்தில் ப்ருத்வியுடன் அங்கு ஆஜரானார் சொக்கலிங்கம்.

"இவதான் எங்க பொண்ணு நவநீதா... இது ப்ருத்வி..."

"ஓ...ஓ...ஓகே..." என்ற கணேஷ் சுப்ரமண்யம், சட்டைப் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து கழுத்தைத் துடைத்துக் கொண்டான்.

அவன் முகத்தில் தோன்றிய பரவசமும் படபடப்பும் நவநீதாவுக்கு எச்சரிக்கை விடுத்தன.

"இதெல்லாம் என்ன? இந்த அப்பாவியை என் கழுத்தில் கட்ட சதி நடக்கிறதா...?" என்பதாகப் பெற்றோரை ஒரு பார்வை பார்த்தாள் நவநீதா.

அந்தக் குறுவாள் பார்வையை ஒரு கேடயப் பார்வையால் மடக்கித் தணித்தான் ப்ருத்வி. "எல்லாம் நான் பார்த்துக்கறேன்..." என்று அவள் காதோடு சொல்லி, கையை ஓர் அழுத்து அழுத்தினான்.

அண்ணன் அளித்த பலத்தில் நாடகத்தில் முழு மூச்சுடன் இறங்கி வசனம் பேசினாள் நவநீதா:

"ஹாய்! ஹௌ ஆர் யூ...?"

"குட். தேங்க் யூ..." என்றான் கணேஷ்.

"நைஸ் ஷர்ட்..." என்று அவன் அணிந்திருந்த தும்பைப் பூ வெள்ளைச் சட்டையைப் பார்த்து அவள் சொல்ல, ஏதோ காதல் கவிதையைக் கேட்ட களிப்பில் காது நுனி வரை முகம் சிவந்தான் கணேஷ் சுப்ரமண்யம்.

அந்தக் காட்சியைக் கண்டு, பெருமாளே கல்யாணத்துக்கு உத்தரவு கொடுத்தது போல் சொக்கலிங்கம் தம்பதி பரவசப்பட, அதே கணத்தில் "ஹாய் நவ்நீடா..." என்று அமெரிக்கக் குரல் கேட்டது.

யாரிது?.... ஜெர்... ஜெர்ரி... ஜெர்ரி பிரவுனேதான்! பச்சைக் கரை வேட்டியும் அரக்கு நிறத்தில் குர்தாவும் அணிந்து... செம்பட்டைத் தலை படிய வாரப்பட்டிருந்தது.

"ஜெர்ரி! ஹௌ குட் டு ஸீ யூ..." சேலைத் தலைப்பு பட்டொளி வீசிப் பறக்க, இரு கரங்களையும் நீட்டி அவனை ஆலிங்கனம் செய்து கொண்டாள் நவநீதா.

சொக்கலிங்கம் தம்பதி திகைப்பில் சமைந்து நிற்க, சுப்ரமண்யம் தம்பதி செய்வதறியாது தவிக்க, கணேஷ் விழிகள் விரிய அக்காட்சியைப் பார்த்து திகைத்தான். திறந்து திறந்து மூடிய அவன் வாயிலிருந்து விசித்திரமான ஒலிகள் மட்டுமே வெளிப்பட்டன.

இங்கிதமறியாத கோயில் மணி அந்த சமயம் பார்த்து அடிக்கவும், "தீபாராதனை நடக்கறது... கன்னத்தில் போட்டுக்கங்க..." என்றான் ப்ருத்வி.

(தொடரும்)

'இப்படிக்குத் தென்றல்', 'கீதாஞ்சலி' தொடர்களைத் தொடர்ந்து 'ரோஜா'வை 'ஜெயா'வில் உலாவ விட்டிருக்கிறார் ஏவி.எம்.கே. ஷண்முகம்.

"அம்மா, அப்பா, சித்தி, அத்தைன்னு உறவு முறைப் பெயர்களையே செண்டிமெண்டா வைக்கிற நேரத்துலே, நீங்க ரோஜான்னு வச்சிருக்கீங்களே" என்று கேட்டால், "அந்த விவகாரமே வேண்டாம்னுதான் இப்படி வச்சிருக்கோம். எங்க தொடர்ல வர்ற கேரக்டர் பெயர் ரோஜா. கண்ணீர் வரவழைக்கிற டி.வி சீரியல்களுக்கு மத்தியிலே இது ஒரு வித்தியாசமான காதல் கதை. கூடவே சஸ்பென்ஸ். சினிமாவுல பயன்படுத்துற பல புதிய டெக்னிக்குகளை இதுல பயன்படுத்தியிருக்கோம். வித்தியாசத்தை நிச்சயமா உணருவீங்க" என்கிறார்.



• ரோஜாவில் ரஞ்சிதா

ஆண்களை அழ வைக்கப் போகிறோம்!

விஜய் டி.வி.யின் 'லொள்ளு சபா'வில் ஏகப்பட்ட லொள்ளு. 'முதலில் அரசியல் கிண்டலை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த சபாவில் இப்போது விவேக் ஸ்டைல் சினிமா கிண்டல்.

"நல்லா சக்ஸஸ் ஆன, சீரியஸான படங்களை அப்படியே உல்டா பண்ணி, கொஞ்சம் கிண்டல் சேர்த்தா, மக்கள் அதைப் புரிஞ்சுக்கிட்டு ரசிக்கிறாங்க. அதனாலதான் இப்படிப் பண்றோம். இது யாரையும் கிண்டல் பண்ற மாதிரி இல்லை" என்கிறார் இந்நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் ராம்பாலா.



• 'எங்க குடும்பம்' அரிராஜன்



• வீரபாண்டியன்

சந்தானம், சுவாமிநாதன், மனோகர், ஈஸ்டர் என்ற நால்வர் அணிதான் இந்நிகழ்ச்சியின் கலாய்த்தல் பாய்ஸ்!

ஒவ்வொரு வாரமும் கப்பு, குவார்ட்டர்ங்கற வார்த்தையை அனாவசியமா நுழைச்சுட நீங்களே, அதான் பேஜராக்கிதுப்பா!

கர்நாடக சங்கீத மேடைகளில் பார்த்த அனுராதா கிருஷ்ணமூர்த்தி 'சஹானா'வில் தலை காட்ட ஆரம்பித்துவிட்டார்.

"கச்சேரியை விட்டுட்டு நடிக்க வந்துட்டீங்களே" என்றால் 'ஐயையோ என்ன வார்த்தை சொல்லிட்டீங்க!



• அனுராதா கிருஷ்ணமூர்த்தி



• பிரதிபா ஹரி

கச்சேரிதான் என் முதல் சாய்ஸ். இது சங்கீதம் தொடர்பான தொடர்ங் கறதாலதான் நடிக்கவே ஒப்புக்கிட்டேன். முதல்ல ரொம்பத் தயக்கமா இருந் தது. என்னோட கணவர்தான் தைரியம் கொடுத்தார். பத்து நாள் ஷூட்டிங்குக்காக இலங்கைக்குப் போயிட்டு வந்தோம். கே.பி. சார் நல்லா நடிப்பு சொல்லிக் கொடுத்தார். ஜாலியா இருந்தது" என்கிறார்.

சினிமா வாய்ப்பும் வந்திருக்குமே?

சன் டீ.வி. வீரபாண்டியன் காமராஜர் பற்றி ஒரு புத்தகத்தைத் தொகுத்துக் கொண் டிருக்கிறார்.

"என் அப்பா காமராஜர்கூட இருந்தவர். காமராஜரைப் பற்றி இதுவரை வெளி வராத பல தகவல்களைச் சொல்லியிருக்கார். இந்த விஷயங்களையெல்லாம் தொகுக்கலா மேன்னு ஆரம்பிச்சேன். அப்பா இறந்து போன பிறகு காமராஜரோட நெருங்கிப் பழகின, பலரைச் சந்திச்சேன். இப்போ நிறை யப் பேர் உயிரோட இல்லை. அந்த விஷயங் களைத் தொகுத்துப் பார்த்தா, ஐந்நூறு பக்கங்களுக்கு மேல போகுது. கொஞ்சம் குறைச்சு விரைவில் வெளியிட இருக் கிறேன்" என்கிறார்.

"**இ**வ்வளவு நாளும் ஆபீஸ் போனா மற்ற காம்பயர்களைப் பாத்து ஹாய் சொல்ற தோட சரி, அவ்வளவா பழகினதில்ல. கன்யாகுமரிக்கு டீ.வி. சார்பா டிரெயின் ட்ரிப் போனதில் எல்லா காம்பயர்களோடயும் நல்லாப் பழக முடிஞ்சது. எல்லாருக்கும் அவங்கவங்க இனிஷியல் போட்ட கீ செயின் பரிசளித் தேன். நட்பு வட்டம் இப்போ பெரிசாயிட்டு துன்னு வச்சுக்கோங் களேன்" என்று நெக்குரு கிப் போகிறார், 'யார்?' பிரதிபா ஹரி.

ராஜ் டீவிக்காக 'எங்க குடும்பம்' தொடரை இயக்கும் மங்கை அரிராஜன்




• கலாய்த்தல் பாய்ஸ்


"ஆண்களை அழ வைக்க முழு முயற்சி எடுத்திருக்கிறோம்" என்கிறார். "இப்போதெல்லாம் ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்ததும், ஆண்களும் வேறு வழியில்லாமல் சீரியல் பார்க்கப் பழகிக் கிட்டிருக்காங்க. அதனாலதான் ஆண் களின் கண்ணீர் மீது குறி வைத்திருக் கிறோம். ஆண்கள் அழுதால் பெண் களும் அழுவாங்க. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்" என்கிறார் ஹரி. பார்த்துப் பண்ணுங்க சார்! தமிழ்க் குடும்பங்கள்ள சிரிப்பையே மறந்துடப் போறாங்க!

- ஏக்ஜி













புக் ஷெல்ஃப்

சாபம் - சுந்தர பாண்டியன்

ஊருக்கும் பேருக்கும் எல்லோரும் காட்டுவது ஒரு முகம் தான் என்றாலும், உள்ளுக்குள் அனைவருக்குமே பல முகங்கள் புதை பொருளாய் இருக்கின்றன. கடந்து போன, கசந்து போன, நெகிழ்ந்து போன அனுபவ நாட்களில் உள்ளே சிக்கலாகி, இறுகிக் கிடக்கும் ஒவ்வொரு முகத்தையும் ஒவ்வொரு சிறுகதையாக இழை பிரித்து, வாசிப்புக்கு இதமாகச் சொல்லும் தொகுப்பு.

காவ்யா, 14, முதல் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், சென்னை-24. விலை. ரூ.45.

முதல் மனுசி - இளம்பிறை

எதிரியாயிருந்தே நட்பைத் தொடரும், பலவீனத்தையறிந்தே பயன் கொள்ள நினைக்கும், பாசாங்குகளிலேயே வாழும் உலக நடப்பில், அகத்தையும் புறத்தையும் பாதித்தவற்றை பட்டவர்த்தனமான சொற்களால் கவிதைகளாய் வடித்த தொகுப்பு. சிரிப்பும் நெருப்பும், தணலும் நிழலும் ஒன்றாய்ச் சேர்த்த படைப்பு.

ஸ்நேகா, 348, டிடிகே சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14. விலை ரூ.75.

காஷ்மீர் பிரச்னை : முழு விவரங்களும் தீர்வுக்கான யோசனைகளும் - நிகரியவாதி

நரேந்தர் சேஹல் எழுதிய 'இந்திய அரசியல் தலைவர்கள் செய்த தவறுகளின் நினைவுச் சின்னம்' நூலை ஆதாரமாகக் கொண்டு காஷ்மீர்ப் பிரச்னையை முழுவதுமாக விளக்கும் நூல்.

மணிமேகலை பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை - 17. விலை ரூ.55.

சிறுவர் இலக்கியம் - முனைவர்கள் தி. நடராசன், இரா. மோகன், தூ. சேது பாண்டியன், இ. முத்தையா.

சாதாரண இலக்கியத்தைவிட சிறார்க்கான இலக்கியம் படைப்பது அரிது. வில்லையும் சொல்லையும் வாட்டம் பார்த்தே வளைக்க வேண்டுமென்பது போல, பக்குவப்படுத்த வேண்டிய நிலமென்பதால் பார்த்துப் பார்த்துத்தான் படைக்க வேண்டும். அப்படிப் படைக்கப் பெற்ற பலதரப்பட்ட பயனுள்ள கட்டுரைகளின் தொகுப்பு.

தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை. விலை ரூ.75.

தந்த்ரா - பாகம் - 1 : ஓஷோ

தமிழகத்தில் 12ம் நூற்றாண்டு வரை பழக்கத்திலிருந்த கௌல மார்க்கம் என்னும் உபாசனை முறையின் ஆதாரங்களைக் கொண்டு, வாமாசார யோக முறைகளின் உதவியால் முக்தி பெறும் வழிகளைக் கூறும் நூல். அதீத மனோ பலமும், புலன்களின் கட்டுப் பாடும் கொண்டவர்கள் மட்டுமே அப்யசிக்கத் தக்கது.


கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17 விலை ரூ.250/-

கவியோகி சுத்தானந்த பாரதியின் எழுத்துக்கள் - உ. சீநிவாசராகவன்

பெரும்பான்மையானோருக்கு வெறும் கவி என்றே தெரிந்த சுத்தானந்த பாரதி மறுபுறத்தில் எழுத்தாளர், நாடகாசிரியர், கட்டுரையாளர், இசைப் புலவர், மொழி பெயர்ப்பாளர், ஆன்மிகவாதி, யோகி, என எத்தனை முகங்கள் கொண்டிருந்தாரென்பதைக் கூறும் மதிப்பீட்டு நூல்.

வானதி பதிப்பகம், 13. தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 17 விலை ரூ.35/-

- விஷ்வக்



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
எமது புதிய கிளை நிறுவனம் : எண். 7, 30வது தெரு, தில்லைகங்கா நகர்,
நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 180 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (180 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்

நிறுவனர்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்

A. ராஜாபக்கிரிசாமி MSc., MEd.,

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இந்த நூற்றாண்டில் இந்து மதம் 13

இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரும் அவலங்களுள் ஒன்று நடைபெற்ற ஆண்டு 1972. வியட்காங்கின் மீது வீசப்பட்ட 'நாபாம்' குண்டுகளால் வீடுகள் பற்றியெரிய, உயிர்கள் அழிய, தெருக்களில் விளையாடிக் கொண்டிருந்த அறியாப் பிள்ளைகள் திடீர் அனாதைகளாகி நின்ற விபரீதம் நடந்த ஆண்டு.

உடையெல்லாம் எரிந்துபோக, தோலும் தசையும் நெருப்புக்கு இரையாக, வேதனை தாங்காமல் அலறிக் கொண்டே ஓடி வந்தாள் ஒரு சிறுமி. 'கிம்' என்கிற அந்தச் சிறுமி, தீனமாகத் துடித்துக் கதறிய காட்சியின் புகைப்படமே, பல்லோரின் கண்களில் கண்ணீரை வரவழைத்தது. உலகத்தோரின் முகச்சுளிப்பும், சொந்த நாட்டுக்காரர்களின் முணுமுணுப்பும் அமெரிக்க அதிபர் நிக்சன் தன் படைகளைப் பின்னழைப்பதற்குக் காரணமாயின.

போர் மேகங்கள் மறைந்தன; குண்டு மழைகள் நின்றன. ஆனால், கிம் பட்ட வேதனைகள் தொடர்ந்தன. எத்தனை தவிப்பு; எத்தனை அறுவைச் சிகிச்சை. தொட்ட இடத்திலெல்லாம் தோலும் சதையும் வழண்டுபோக... வலியும் நோவுமே கிம்மின் வாழ்க்கையானது. சம்பவம் நடந்து முப்பது ஆண்டுகள் முடிந்து விட்ட பின்னரும், அந்த கோரப் புகைப்படமே பார்க்கும் எல்லோரின் முதுகுத் தண்டுகளையும் சில்லிட வைக்கிறதென்றால், கிம் அநுபவித்த கொடுமை எவ்வளவு?

தன் அநுபவங்கள் தந்த ஆத்மஞானத்தோடு கிம், சமீபத்தில் உலகத்தோருக்கு ஒரு வேண்டுகோள் வைத்தார். 'தான் பெற்ற துன்பம், பெறக்கூடாது பிறர்' என்னும் எண்ணத்தில், யாருக்கும் இனி இதுபோல் நேரக் கூடாது என்னும் பரிதவிப்பில், எல்லோரையும் நட்போடும் அமைதியோடும் வாழக் கோரினார். ஆழ்ந்த நோவு தன் தசையை இழுக்கும்போதும் அமைதியாகப் புன்னகைக்கும் கிம், மன்னிக்குந் தன்மையின் மனித உருவானார்.

மன்னிக்குந்தன்மை தெய்வீகமானதா? இல்லை. மன்னிக்குந்தன்மையே மானுடத் தன்மை.

ஒரு பழைய கேள்வியை மீண்டும் கேட்டுக் கொள்வோம். இராமாவதாரம் எதற்காக? மீண்டும் பழசோ பழைய பதில்தான். இராவண வதத்திற்காக. ஆனால் நடந்தது என்ன? இராமனும் இராவணனும் யுத்த களத்தில் எதிரும்புதிருமாக நிற்கிறார்கள். இராவணன் கையிலிருந்த அனைத்து ஆயுதங்களும் கீழே விழுந்தாகிவிட்டன. வெறுங்கையனாக நிற்கிற பகைவன் மீது போர் நடத்த ரகுகுலத்திலகனுக்கு விருப்பமில்லை. இராமனின் பிரபலமான வாக்கியம் அப்போது மொழியப்பட்டதுதான். "இன்று போய் நாளை வா.", நிராயுதபாணி என்பதால் மட்டுந்தான் இராவணன் மீது அம்பு தொடுக்கவில்லையா இராமன்? நிராயுதபாணி மீது ஆயுதம் எய்வது யுத்த தர்மம் இல்லையென்றாலும், அது ஒன்று



டாக்டர் சுதா சேஷய்யன்

தான் இராமனின் நிலைக்குக் காரணமா என்பதையும் சிந்திக்க வேண்டும். ஒரு வேளை இராவணன் அப்போதும் திருந்து வதற்குத் தயாராக இருந்திருந்தால்... இராம னிடம் மன்னிப்பு கிடைத்திருக்கும். இது கும்பகர்ணனுக்குத் தெரிந்தது. இந்திரசித் தனுக்குத் தெரிந்தது. இருவருமே தங்கள் தங்களின் கடைசி நாட்களில் இராவண னுக்கு புத்தி சொன்னார்கள். தன் ஜென்மப் பகைவனைக்கூட, யாருக்காக அவதாரம் எடுக்கப்பட்டதோ, அவனைக்கூட, இராம னின் பெருந்தன்மை மன்னிக்கத் தயாராக விருந்தது.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க் கையை முறைப்படி நடத்துவதற்கு, இராமன் ஒரு முன்மாதிரி. இராமாயணம் என்னும் பெயருக்கே, (இராம+அயனம்) 'இராமனின் பாதை' என்று பொருள். இராமன் போட்ட பாதையிலேயே, மாற் றானையும் மன்னிக்கும் மனப்பான்மையே மகத்தானது.

ரகு குலத்திலகத்திடம் மாத்திரம் அன்று;

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்



யதுகுலத் திலகமாம், கிருஷ்ணனிடமும் இந்தக் குணத்தைக் காண முடியும். கிருஷ் ணனை வர்ணித்த ஆண்டாள் நாச்சியார், ''ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர'' என்றாள். இப்படி ஒளித்து வளர்ந்ததையும் பொறுக் காதவனாகப் பல தீங்குகள் செய்த கம் சனைத்தான் கிருஷ்ணன் வதம் செய்தார். கம்சனிடம் கிருஷ்ணனுக்குப் பயமா என்ன? பின் ஏன் ஒளித்து வளர வேண்டும்? ஆண்டாள் சொன்னதற்கு என்ன பொருள்? வட மதுரையில் நட்டநடு நிசியில் பிறந்த கண்ணன், இரவோடு இரவாக யமுனை வழிவிட, நந்தகோபன் மகனாக வளரப் போனவர், பதினோரு ஆண்டுகள் மதுரை யின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. கம்சன் பலப்பல அரக்கர்களை அனுப் பினான்; ஒருவன் மரமாய் நிற்பான்; ஒருவன் கன்றுக்குட்டியாய் நிற்பான்; ஒருவன் வண்டியாய் உருளுவான்; ஒருவன் பாம்பாய் நீளுவான். அத்தனை பேரையும் அழித்துச் சிரித்தது அந்தக் குட்டிக் குழந்தை. இதெல் லாம் போதாதென்று, தங்கத் தேரோடு அக்ரூரரை அனுப்பிக் கிருஷ்ணனை அழைத்து வரச் சொன்னான் கம்சன். அப் போது மதுரைக்கு வந்த நீலமேக ச்யாமள

வண்ணன் அதன்பின்தான் கம்சனை வதம் செய்தார்.

ஏன் பதினோரு ஆண்டுகள் ஒளிந்து வாழ்ந்தார்? கிருஷ்ணன் தனக்காக ஒளியவில்லை. ஒருவேளை கம்சன் திருந்துவானோ, என்னும் நப்பாசையில் தன்னை ஒளித்துக்கொண்டார். தான் அருகில் இருந்தால், தன்னைப் பற்றியே நினைத்து கம்சன் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பான் என்று எண்ணினார் போலும்! ஆணவத்தைச் சற்றேனும் அடக்கி, அவன் எப்படியாவது திருந்துவதற்கு வழிவகை தர வேண்டும் என்பதற்காகத் தன்னை மறைத்துக் கொண்டார். தான் ஒளிந்து கொண்டாவது, கம்சனை ஒளிவிட வைக்க பரந்தாமன் நினைத்திருக்க வேண்டும்.

இந்தச் சம்பவங்கள், 'மன்னிப்பதற்கு தெய்வம் தயார்' என்பதைச் சுட்டுபவை மாத்திரமல்ல. மனிதச் சட்டை போர்த்துக் கொண்டு, மனிதனாகவே வாழ்ந்து காட்டிய போது, மன்னிக்கும் தன்மையையே மனிதத்துவத்தின் கொள்கையாகவும் ஆக்கினார் இறைவன்.

வடமொழியில் ஒரு பழமொழி உண்டு. நகைகளைப் பற்றியதொரு நன்மொழி. மனிதனுக்கு எது அணிகலன்? வேறெதுவாக இருக்க முடியும்? மனிதனை அடையாளம் காட்டக் கூடியதான உருவம் (ரூபம்), மனிதனின் ஆபரணம். அந்த உருவத்துக்கு எது அணிகலன்? அழகான மனிதனையும் அலங்கரிப்பது குணம். சரி. குணமிருந்தால் மட்டும் போதுமா? அதற்கும் எது அணிகலன்? குணத்தையும் மிளிரவைப்பது ஞானம். அது சரி. ஞானத்திற்கும் எது அணிகலன்? ரூப சௌந்தர்யம், குண சௌந்தர்யம், ஞான சௌந்தர்யம் ஆகிய யாவற்றையும் பிரகாசிக்க வைப்பது ஒன்றே ஒன்றுதான். அது? அதுதான், மன்னிக்கும் தன்மை (க்ஷமா).

"நரஸ்யாபரணம் ரூபம்
ரூபஸ்யாபரணம் குணம்
குணஸ்யாபரணம் ஞானம்
ஞானஸ்யாபரணம் க்ஷமா."

எந்த மனிதன், மன்னிக்கக் கற்று வைத்திருக்கிறானோ, அவனே மனிதனாக இருக்கத் தகுதி படைத்தவனாகிறான்.

நமக்கு நன்கு பரிச்சயமான இராமாயணத்திலேயே ஒரு அற்புதத் திருக்காட்சி உண்டு. இராவண வதமெல்லாம் முடிந்த பின்னால், அக்னிப்பிரவேசமும் முடிந்த பின்னால், நிகழ்ந்திருக்கக்கூடிய நிகழ்ச்சி. இராமனை ஆசீர்வதிக்க தேவலோகத்திலிருந்து வந்தார் தசரதர். அப்போதும், ஏதேனும் இரண்டு வரங்கள் கேட்கச் சொல்லி இராமனிடம் சொன்னார். இராமன் கேட்ட வரங்கள் என்ன தெரியுமா?


தந்தை வரம் கேட்கச் சொன்னதும் இராமனுக்குப் பழைய நினைவுகள் நெருடத் தொடங்கின. கைகேயி மீதான கோபத்தில், இராமன் கானகம் போக வேண்டும் என்று அவள் வற்புறுத்திய ஆத்திரத்தில், மரணத்துக்கு முன்னதாக தசரதர் சூளுரைத்தார்; கைகேயி தன் மனைவியில்லை என்றும், பரதன் தன் மகனில்லை என்றும் வசிஷ்டரிடம் குறிப்பிட்டார். இப்போது இராமனுடைய உள்ளத்தில் உறுத்தல், உறுத்தலை உணர்வாக்கி, உணர்வை வார்த்தையாக்கி, இராமன் கேட்ட வரங்கள் இவைதாம்: 'தீயள் எனத் துறந்த தெய்வமும் மகனும்

மனிதனாக்கும்

ஒரு துறவி இருந்தார். மூலிகைகளைக் கொண்டு ஏழைகளுக்கு வைத்தியம் செய்வார். யாரும் பொருள் கொடுத்தால் அதனை ஏழை எளியவர்களுக்குச் செலவிடுவார். காட்டுப் பகுதிகளில் பயணம் செய்து நோயாளிகளைப் பார்க்க வசதியாக பணக்காரர் ஒருவர், ஒரு குதிரை காணிக்கையாகக் கொடுத்திருந்தார்.

ஒருநாள் இரவு இருட்டில் வந்துகொண்டிருந்தார் துறவி. யாரோ ஒருவன், நடக்க முடியாமல் தடுமாறிக் கொண்டே வழியில் வந்தான். அவனைக் குதிரையில் உட்கார வைத்து தள்ளிக் கொண்டே தான் இறங்கி நடந்தார் துறவி. சிறிது தூரம் போனதும், நன்கு நிமிர்ந்து உட்கார்ந்தான் அந்தப் புதியவன். போர்வையைத் தூக்கிப் போட்டான். குதிரையை விரட்ட ஆரம்பிப்பதற்கு முன், திரும்பி நோக்கித் துறவியிடம் சொன்னான்: "பார்த்தீர்களா? உங்களை ஏமாற்றிவிட்டேன். இப்போது நான் பறந்து விடுவேன். நீங்கள் இருட்டில் இங்கேயே கிடக்க வேண்டியதுதான்" துறவி அவனை நிமிர்ந்து பார்த்தார். மெல்லச் சொன்னார்: "நீ போ. ஆனால் தயவு செய்து, இதனை வெளியில் வேறு யாரிடமும் சொல்லாதே." வியந்து கேட்டான். "ஏன்? வெளியில் சொன்னால் உங்களுக்கு அவமானமா?" "இல்லையப்பா. இது தெரிந்தால், இனிமேல் ஏழைகளுக்கும், உடல் நலிவுற்றவர்களுக்கும் யாரும் உதவி

மகத்துவம்!



செய்ய மாட்டார்கள்." கண் கொட்டாமல் நோக்கிய அவன் கீழே குதித்து அவர் காலில் விழுந்தான். "ஐயா, என்னை மன்னித்து விடுங்கள்" துறவி கூறினார். "உன்னை மனிதனாக்கும் மகத்துவத்தை எனக்குக் கொடுத்தாயே, நன்றி."

மன்னிக்கப்பட்டவரை விட மன்னிப்பவர் அதிகப் பெருமை அடைகிறார்.

தவறு செய்வது மானுட இயல்பு என்றால், மன்னிப்பதும் மானுட இயல்பே! எந்த மனிதனும் தனியாக வாழ்ந்துவிட முடியாது. கூட்டு வாழ்க்கையும், சமூகச் செயல்பாடுகளுமே மானுட இனத்தின் வளர்ச்சிகளுக்கும் மேம்பாடுகளுக்கும் ஆதாரம். சின்னச் சின்னத் தவறுகளுக்கெல்லாம் கொடி பிடித்து கூப்பாடு போட்டு கொண்டிருந்தால் ஒருவருக்கொருவர் பகைமை வளருமே தவிர ஒற்றுமை காணுதல் இயலாது. இன்னும் சொல்லப் போனால், ஒருவர் செய்வது தவறே இல்லையென்றாலும், இன்னொருவரின் பார்வையிலிருந்து அது தவறாகக் கூடத் தென்பட்டுவிடலாம். எனவே, மன்னிக்கும் மனோபாவம் முக்கியம்.

ஒருமுறை நாரதருக்கு ஒரு சாபம். நரகத்தில் தண்டனை அநுபவிக்க வேண்டுமென்று சாபம். சாபம் கொடுத்தவர் சாட்சாத் மஹாவிஷ்ணு. வருத்தத்தில் இருந்த நாரதர் ஒரு சூட்சுமம் செய்தார். விஷ்ணுவிடம் போய் நரகத்திற்கு வழி கேட்டார். விஷ்ணுவும் விளக்குவதற்காக, தரையில் வரைபடம் போட்டு, எது சொர்க்கம், எது நரகம் என்று வழி காட்டினார். நரகம் என்று வரைபடத்தில் காட்டப்பட்ட இடத்தில் விழுந்து புரண்டு அழுது துடித்தார் நாரதர். கண்ணீரோடு எழுந்தவரைக் கேள்விக்குறியுடன் கண்ட விஷ்ணுவுக்கு விடை பகர்ந்தார் நாரதர். "பகவானே! இந்த அகிலமும் அண்டசராசரமும் தங்களின் படைப்பன்றோ! இந்த வரைபடமும் தங்களின் படைப்பே! எனவே நரகத்தில் புரண்டேன்; அப்போது நிஜமான நரகதில் என்ன துன்பம் அநுபவித்திருப்பேனோ அதை அநுபவித்துவிட்டேன்."

ஒருகணம் யோசித்து நின்ற பகவான் பேசினார். "நாரதா! நீ நரகம் போயிருந்தால், அது உனக்கு தண்டனை. ஆனால் அதேசமயம், உன்னை நரகம் அனுப்பியதற்காக எனக்கு பாவம் வந்திருக்கும். என்னைப் பாவத்திலிருந்து காப்பாற்றி, படத்தின் மூலம் பாடம் தந்துவிட்டாய்!

தாயும் தம்பியும் ஆம் வரம் தாரீர்'. கைகேயியை தெய்வம் எனக் குறிப்பிட்டு, அவளும் அவள் மகனும் தனக்கு மீட்டும் தாயும் தம்பியும் ஆக வேண்டும் எனக் கேட்டால், என்ன பொருள்? பதினான்காண்டுகள் தான் கானகம் போக நேர்ந்தது கைகேயியின் வரத்தால் என்னும் கோபம், இராமன் நெஞ்சில் இல்லை என்பதற்கு இதனினும் ஆதாரம் தேவையோ?

"கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்
கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும்
நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும்
தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்து
அருள்வாய் கச்சி ஏகம்பனே!"

என்று வேண்டுவார் பட்டினத்தடிகள்,

"ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம்
காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு" என்பார் வள்ளுவர். 'பிறர் குறைகளைப் பெரிது படுத்துகிறோம், பல சந்தர்ப்பங்களில் நாமும் தவறுகள் செய்கிறோம்' என சிந்திக்கத் தொடங்கும்போது, அடுத்தவர்களை மன்னிக்கும் பாங்கும் வளர்ந்துவிடும். 'நாங்கள் உன் குழந்தைகள்; எங்களை மன்னித்துவிடு' என்று ஆண்டவனிடம் வேண்டுவது பக்தி. 'எல்லோரும் ஆண்டவனின் குழந்தைகள்; எனவே தவறுகளை மன்னித்து விடுவோம்' என்று ஒற்றுமை வளர்ப்பது மனித நேயம்.

மதம் என்பதே மனிதநேயத்திற்காக என்னும் கோட்பாட்டில் கருத்துறுதி கொண்ட சனாதன தர்மம், தெய்வங்களையெல்லாம் மனிதச் சட்டை போட்டு அவதரிக்கவிட்டது மட்டுமல்லாமல், அவர்களை க்ஷமா(மன்னிக்கும் குணம்)வின் சேமிப்புக் கூடங்களாகவும் சித்திரித்தது.

(தொடரும்)



காட்டினா, ஒரு காலத்துல ஓ.கே. இப்போதைய ரசிகர்கள் புத்திசாலிகள். அவங்களுக்கு, எல்லாம் தெரிஞ்சிருக்கு. இப்பப் போய் அந்த மாதிரிக் காட்டினா தியேட்டர்ல சிரிப்புச் சப்தம்தான் வரும்! (நம்மூர் இயக்குனர்கள் குறித்துக் கொள்க!)

"இ.வி வெற்றிக்குக் கதைதான் காரணம். நல்ல கதை இருந்தா பெரிய பெரிய ஸ்டார்கள் இல்லைன்னாலும் படம் ஓடுங்கறதுக்கு, இந்தப் படமும் ஓர் உதாரணம்.

"நான் மாடலிங் துறையில் இருந்து வந்தவ. எனக்குன்னு எந்த சினிமா பின்புலமும் இல்லை. விளம்பரத்துல என்னைப் பார்த்த சில இயக்குனர்கள் சினிமாவுக்குக் கூப்பிட்டாங்க. என் மேல நம்பிக்கை இருந்தது. வந்துட்டேன். சினிமா இன்னைக்குப் புகழ் உச்சியில தூக்கி நிறுத்தும். நாளைக்குப் பாதாளத்துல தூக்கி வீசும்னு எனக்குத் தெரியும்.



அம்ரிதா அலை!



அம்ரிதா ராவ்தான் பாலிவுட்டின் தற்போதைய ட்ரீம் கேர்ள்!

இவர் நடித்த 'இஷ்க் விஷ்க் (Ishq vishk) 'புஷ்க் பஷ்க்'கென்று அனைத்துத் தியேட்டர்களிலும் பணத்தை அள்ள, அம்ரிதாவுக்கு அமோக அலை! அமிதாப்புடன் 'தீவார்' ஷாருக்குடன் 'மைன் ஹூன் னா' என்று ஏகப்பட்ட பட புக்கிங்!

"இஷ்க் விஷ்க்" இளமையான கதை. என் வயசுக்கேற்ற மாதிரியான ரோல். இன்னைய ட்ரெண்ட்டுக்கு இளமைக் கதைதான் நிற்கும். நாற்பது வயசு ஹீரோ டூயட் பாடிட்டு வர்ற மாதிரியும், முப்பது வயசு ஹீரோ காலேஜ் போய்ட்டு வர்ற மாதிரியும் படத்துல அதனால எப்பவுமே ஒரே மாதிரியா இருக்கணும்னு நினைக்கிறேன்.


"கவர்ச்சியான கேரக்டர்கள் மேல எனக்கு நம்பிக்கையில்ல. எந்த நேரத்துலயும் அப்படியொரு பாத்திரத்துல நடிக்க மாட்டேன்."


முன்னோர்கள் சொன்னதையே தாமும் மூச்சு விடாமல் சொல்கிறார். "பெண்களை மதிக்கிற நல்ல மனித உணர்வுள்ள மனிதரைத்தான் காதலிப்பாராம்!"

- அப்பு


முரசொலி மாறன் சிகிச்சை பற்றி சர்ச்சை கிளம்பியிருக்கிறது. செயற்கையாகப் பொருத்தப்பட்ட இதய வால்வில் பூஞ்சைக் காளான் பூப்பது சாத்தியம்தானா? என்று பிரபல இதயநோய் நிபுணரும் ஹார்வி ஹாரட் ஹாஸ்பிடல் தலைவருமான டாக்டர் நரேஷ் குமாரிடம் கேட்டோம்; அவர் அளித்த விளக்கத்தின் சுருக்கம், இதோ :

இதயத்தில் நான்கு அறைகள் இருக்கின்றன. வலப்புற மேலறைக்கும், கீழறைக்கும் இடையே வால்வு ஒன்று உண்டு. இந்த வால்வு கீழ்ப்பக்கம் மட்டுமே திறக்கும் கதவு போன்றது. இடப்புற இதயத்தின் மேலறைக்கும் கீழறைக்கும் இடையேயும் ஒரு வால்வு உண்டு. இந்த வால்வுகள் இருப்பதால்தான், இரத்தம் மேல் அறைகளிலிருந்து கீழ் அறைகளுக்குச் செல்லுகிறது. கீழ் அறைகளிலிருந்து மேல் அறைகளுக்குச் செல்லுவதில்லை.





இதய வால்வுகளின் பங்கு மிக முக்கியம். அவை மிகச் சன்னமானவை. அவை தடித்துப் போய், வளையும் தன்மையை இழந்துவிட்டால், சரியாக இயங்க முடியாது. அதனால் மேலறையில் இருந்து கீழறைக்குப் போக இரத்தத்திற்குத் தடை ஏற்படும். அல்லது இரத்தம் மேலறைக்கே திரும்பச் சென்றுவிடும். இப்படிப்பட்ட நோயாளிதான் வால்வு சம்பந்தமான நோயால் பாதிக்கப்பட்டவர்.



வால்வுகள் பிறவியிலேயோ, அல்லது பின்னர் நோயால் பாதிக்கப்பட்டோ தடித்து, அல்லது குறுகிப் போகலாம் அல்லது கசியத் தொடங்கலாம். இந் நிலையில் இதயத்துக்குச் சீரான இரத்த ஓட்டம் தடைப்படுகிறது. சாதாரணமாக, வால்வுகள் பாதிக்கப்படுவதை, ருமாட்டிக் டிஸீஸ் என்போம். இதை வாத நோய் என்பார்கள்.

சில சமயம், பாக்டீரியா அல்லது பூஞ்சைக் காளான் இரத்த ஓட்டத்தில் கலந்துவிட்டால், அது வால்வில் போய்த் தங்கி விடுகிறது. அதன் காரணமாக டிஷ்யூ பாதிப்படைந்து, இரத்தம் அதிகமாகக் கசியத் தொடங்குகிறது. கசியும் இரத்தம் நுரையீரலுக்குப் போனால், உடம்பு வீங்கத் தொடங்குகிறது. 'வால்வுலர் ரிகர்ஜிடேஷன்' என்பார்கள். வால்வு இப்படிப் பாழடைந்து விடும் நிலைமை 'என்டோ கார்டைடிஸ்' என்பார்கள். இது அசாதாரணமானது.

எப்போது இந்த மாதிரி நிலை ஏற்படுகிறது தெரியுமா? ஏற்கெனவே வால்வு பழுதடைந்திருந்தால், அல்லது மெக்கானிகல் (செயற்கை) வால்வு பொருத்தப்பட்டிருந்தால், இந்த நிலை உருவாகும்.

இந்தப் பூஞ்சான பாதிப்பு பாக்டீரியாவினால் உண்டாகிறது. இது உடலுக்கு உள்ளிருந்தே ஏற்படுகிறதா அல்லது, வெளியிலிருந்து ஏற்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். பல சமயங்களில், இந்த பாக்டீரியா பற்களிலிருந்துதான் உருவாகிறது. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும், பற்களைப் பொறுத்தவரை காண்பிக்கப்படும் அலட்சியம் அதிகம். இதில் உருவாகும் பாக்டீரியா, இரத்த ஓட்டத்துடன் கலந்து விடுகிறது. ஏற்கெனவே கிருமித் தொற்று பாதிக்கப்பட்ட இரத்தத்தில், இப்படி உருவாகும் பாக்டீரியா பாதிப்பும் சேரும் பொழுது நிலைமை மோசமாகிறது. இதைத்தான் 'ஆப்பர்சூனிஸ்டிக் பாக்டீரியா' என்பார்



* மாறன்

இதயத்தில் பூஞ்சைக்காளான் சாத்தியமா?

கள். அதாவது, 'எப்போதுடா சாக்குக் கிடைக்கும், நாம் உள்ளே நுழையலாம்' என்று காத்துக் கொண்டிருக்கிற வகை. இது உள்ளிருந்தே பாழாக்கும் பாக்டீரியா.

வெளியே இருந்து வரும் பாக்டீரியா, போதை மருந்து ஊசிகள், இன்ஃபெக்ட் ஆன ஊசிகள், திரவங்கள் வாயிலாக உருவாகிறது. மருத்துவமனையில் தங்கி இருக்கும்போது இவை உருவாகின்றன. இந்த வகை பாக்டீரியா, கொடுக்கப்படுகிற மருந்துகளை எல்லாம் உண்டுவிட்டு, இன்னும் கொழுந்துப் போய், எந்த மருந்துக்கும் கீழ்ப்படியா (ரெஸிஸ்டன்ட்) சக்தியைப் பெற்றுவிடுகின்றன. எந்தவிதக் கோளாறு உருவாகவும் இந்த நிலை இடம் கொடுக்கிறது.

ஃபங்கல் எனப்படும் பூஞ்சைக் காளான் பாதிப்பு, சிறுநீரகம், ஈரல் முதலியவற்றின் செயல்பாடுகளை அழித்து விடுகிறது. இப்படிப்பட்ட, பலவித உறுப்புகள் செயல்படாமை (மல்ட்டி ஆர்கன் டிஸ்ஃபங்ஷன்) இதயத்தை பாதிக்கும்போது, இதயம் இன்ஃபெக்ட் ஆகி, அங்கிருந்து இரத்தம் பெறும் பல உறுப்புகள் பாதிக்கப்படுவது இயற்கை.

உடலில் உள்ள ஃபங்கல் இன்ஃபெக்ஷன் போன பிறகு ஆபரேஷன் செய்யலாம் என்று எப்படி மருத்துவர் காத்திருக்க முடியாதோ, அப்படியே நோயும் காத்திருக்காது. எல்லா என்டோ கார்டைடிஸ் நோய்களும் ஓரே மாதிரியானவை அல்ல. அறுவைச் சிகிச்சைக்கு எது சரியான தருணம் என்று காத்திருக்க, நோயாளிக்கு எந்தவித வாய்ப்பும் இந்த நோய் தருவதில்லை. அதுதான் சிக்கல்.

சிலர் விஷயத்தில் நீண்ட சிகிச்சையோடு, தொடர்ந்த பாதிப்பும் ஏற்பட்டிருக்கலாம். அதனால் நோயாளியின் நிலைமை மோசமடைந்திருக்கலாம்.

ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். இது இரண்டு பேர் சரிசமான நிலையில் இருந்து நடத்தும் போர் அல்ல. நோயின் கை ஓங்கியிருக்க, நோயாளியின் எதிர்ப்புத் திறன் தாழ்ந்து இருக்கிறது. கூடவே, உடலில் ஏற்கெனவே பொருத்தப்பட்டிருக்கும் செயற்கைக் கருவிகள், நோயாளி பலவீனமானவர் என்பதைச் சொல்லி விடுகின்றன.



* டாக்டர் நரேஷ்குமார்

எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒரு சிறந்த மருத்துவ நிபுணர், தன் நோயாளியை எப்படியாவது காப்பாற்றத்தான் முயலுவாரே தவிர, அவர் உயிருக்கும், தன் திறமைக்கும் (அல்லது தான் சார்ந்திருக்கும் மருத்துவமனைக்கும்) கேடு வர என்றைக்கும் நிச்சயம் முயல மாட்டார்.

- எஸ்.வி.என்

நம் இந்திய ராணுவத்தின் ஆறாவது பீரங்கிப் படையில் சுபேதாராகப் பணி புரிகிறேன். டெல்லியிலுள்ள ராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் என் நண்பர் ஹவில்தார் திம்மையாவைப் பார்த்துவிட்டு, அஜ்மல்கான் ரோடு செல்வதற்காக டவுன் பஸ்ஸுக்குக் காத்து நின்றேன்.

ராணுவ ஆஸ்பத்திரிக்குச் செல்லும் பொழுது மேலதிகாரிகளைச் சந்திக்க வேண்டி வரும். எனவே, யூனிபார்ம் அணிந்துதான் செல்ல வேண்டும். ராணுவ உடையில் பஸ் நிறுத்தத்தில் நிற்கும் என்னையே ஒருவர் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அழுக்குப் பைஜாமா, சாயம் போன சட்டை, சோடாபுட்டிக் கண்ணாடி, நோஞ்சான் உருவம். என்னைப் பார்ப்பதும் புருவ நெரிப்போடு சில நிமிடங்கள் யோசிப்பதுமாக இருந்தார். சில நிமிடங்கள் கழித்து மெல்ல என் அருகில் வந்து, "ஐயா, உங்க சட்டையில குத்தியிருக்கிற பிளாஸ்டிக் பட்டையிலே ராஜபாண்டின்னு எழுதியிருக்கு. என்னோடு திருநெல்வேலி ஹிந்து ஹைஸ்கூல்லே ராஜபாண்டின்னு ஒருத்தன் படிச்சான். வாலிபால் பிளேயர். ஒருக்கால் நீங்கதான் அந்த ராஜபாண்டியா இருக்குமோன்னு தோணிச்சு. அவனும் உங்களை மாதிரி உயரமா இருப்பான். தப்பா கேட்டுட்டா என்னை மன்னிக்கணும்" என்றார் பணிவுடன்.

மிகத் துல்லியமாக என்னை அடையாளம் கண்டு விசாரிக்கும் அவரைப் பார்த்து ஒரு கணம் திகைத்து விட்டேன்.

"சார், நான் ராஜபாண்டி. திருநெல்வேலி ஹிந்து ஹைஸ்கூல்லேதான் படிச்சேன். உங்களைத் தெரியலியே..." என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே "ராஜபாண்டி... என்னைத் தெரியலியா? நான்தான் வெங்கட்ராமன். சொங்கி வெங்கின்னு கூப்



எட்டயபுரம் ராஜன்

ஆசீர்வதிக்கப்பட்டவன்



பிடுவியே, அந்த வெங்கட்ராமன்'' என்றார்.

"ஏய், வெங்கி" என்று அப்படியே இழுத்து அணைத்துக் கொண்டேன்.

''ஆஹா... எவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு நாம டெல்லியில சந்திக்கணும்னு இருந்திருக்கு.''

அப்பொழுது ஒரு பஸ் வந்தது. ''அஜ்மல்கான் ரோட்டுல மெட்ராஸ் லாட்ஜுன்னு கேட்டா சொல்லுவாங்க. அங்கதான் தங்கியிருக்கேன். ரூம் நம்பர் நாலு. மானேஜர் மதுரைக்காரர். எப்ப வேணாலும் வந்து பாரு.''

நெல்லையப்பர் கோயிலுக்குப் பின்புறமுள்ள ஒரு சந்தில் அவன் வீடு இருந்தது. எங்கள் வகுப்பிலேயே மூக்குக் கண்ணாடி அவன் மட்டுமே அணிந்திருந்தான். பிழையில்லாமல் அருமையாக ஆங்கிலம் எழுதுவான். கையெழுத்து மணிமணியாய் இருக்கும். மார்க்குகளை வாங்கிக் குவிப்பான். விளையாட்டு மைதானம் பக்கம் தலை வைத்துக்கூட படுக்க மாட்டான். "டேய், சொங்கி, விளையாட வாடா'' என்று நான் கூப்பிட்டால், ''சொங்கின்னு கூப்பிடுறே. சொங்கியால எப்படி விளையாட முடியும்?'' என்று சொல்லிவிட்டு நூலகத்திற்குள் நுழைந்து விடுவான். சரியான புத்தகப் புழு.



அவனைப் புகழாத ஆசிரியர்களே கிடையாது. ஆசிரியர்களின் ஆசீர்வாதம் அவனுக்குத் தினமும் கிடைத்தது.

பள்ளி ஆண்டு விழாவில் தலைமை ஆசிரியர் சோமசுந்தரம், ''சுடர்மிகு அறிவுடைய நம் பள்ளி மாணவன் வெங்கட்ராமனால் நம் தமிழ் நாடே பெருமைப்படப் போகிறது. இதில் என்னளவும் சந்தேகமேயில்லை'' என்று மிக உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்.

அறிவு ஜீவி, திறமைசாலி, ஆசிரியர்களையே பிரமிக்க வைத்தவன். அவர்களால் வாழ்த்தப்பட்டவன். ஏன் இப்படி ஆனான்? என் மனத்தில் திரும்பத் திரும்ப இக்கேள்வி எழுந்தது.

சரியாக ஐந்து மணிக்கு என் விடுதி அறைக்கு வந்தான்.

என் அருகில் நெருக்கமாக அமர்ந்தான். அவன் கையில் வைத்திருந்த அட்டைப் பெட்டியைத் திறந்து "ராஜபாண்டி, இந்தா ஸ்வீட், சுத்தமான நெய்யிலே செஞ்சது. வாயில போட்டா கரையும். நான் சர்வரா வேலை செய்யற ஹோட்டல் மொதலாளி கிட்ட உன்னைப் பத்திச் சொன்னேன். கும்ப கோணத்துக்காரர்... அப்படியே அள்ளி அள்ளி எடுத்துக் கொடுத்தாரு." என்றான்.

அவன் சர்வர் என்று சொன்னதும், அப்படியே திகைத்துப் போய்விட்டேன்.

"சர்வராகவா வேலை செய்யறே?" வாயில் போடப் போன ஸ்வீட்டை அப்படியே பெட்டியில் வைத்துவிட்டுக் கேட்டேன்.

"இங்கே கும்பகோணத்து ராவ் ஹோட்டலில் இருபது வருஷமா சர்வரா வேலை செய்யறேன். நான் சிறகு முளைக்காத கூட்டுப்புழு. வறுமைங்கிற கூடு என்னை இறுக்கமா மூடிருச்சு" என்று சொல்லிவிட்டு விரக்தியாகச் சிரித்தான்.

"ராஜபாண்டி, நம்ம பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வோட முடிவு வெளி வந்த மறுவாரமே அப்பா செத்துட்டாரு. கும்பகோணம் மாமா வீட்டுக்கு அம்மா கூட்டிட்டுப் போனா. மாமாவுக்குப் பெரிய குடும்பம். கல்யாணச் சமையல் கோஷ்டியில் வேலை. ஏற்கெனவே சுமையைத் தாங்க முடியாம திணறிக்கிட்டிருந்தார். நாங்களும் போய் ஏறி உட்கார்ந்ததும் மனுஷன் அல்லாட ஆரம்பிச்சுட்டாரு. வேலைக்காக நாயா அலைஞ்சேன். சர்ட்டிபிகேட்டை யாருமே பாக்கல. சிபாரிசு, பணம் எதுவும் இல்லேன்னா வேலை கிடைக்காதுன்னு தெரிஞ்சுருச்சு... சரியான உணவும், மருத்துவமும் இல்லாம அம்மா செத்தா" என்றவன் இரு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு விம்மி விம்மி அழுதான்.

"ஒருநாள் மத்தியானம் வெறுத்துப் போய் என் சர்ட்டிபிகேட்ஸ் எல்லாம் எடுத்துக்கிட்டு காவேரிக்குப் போனேன். படித்துறையில் உட்கார்ந்து ஒண்ணு ஒண்ணா எடுத்து, சதுரமா கிழிச்சு, கத்திக் கப்பல், யுத்தக் கப்பல், இரட்டைக் கப்பல்னு விதவிதமா செஞ்சு தண்ணியிலே மிதக்க விட்டேன். சில கப்பல் மிதந்துகிட்டே போனது. கடலுக்குக் கூட போயிருக்கலாம். சில, பக்கத்து நாணல் புதர்ல சிக்கி மூழ்கிடுச்சு, என்னை மாதிரி. நான் சர்ட்டிபிகேட்டைக் கிழிச்சுக் கப்பல் விடுறதப் பாத்த ஒருவர், அன்பா வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து காரணம் கேட்டார். அழுதுக்கிட்டே எல்லாம் சொன்னேன். "உன் பசியை போக்க என்னால முடியும். என்னோடு வான்'னு கூட்டிட்டுப் போய் கருணா விலாஸ் ஹோட்டலில் சர்வரா சேர்த்துவிட்டார். என்னைப் பிடிச்சு ஆட்டிய பசிப் பேய் ஓடிருச்சு. அஞ்சு வருஷம் அங்க வேலை பார்த்தேன். ஒருநாள் ஹோட்டல் மொதலாளி என்னைக் கூப்பிட்டு, "டேய், வெங்கட்ராமா, டெல்லியிலே என் தம்பி ஒரு ஹோட்டல் திறக்கப் போறான். நீ போடா"ன்னு சொல்லி ரயில் ஏத்திட்டார். ஆச்சு இருபது வருஷம்... இருபது நிமிஷமா ஓடிருச்சு." அவன் வேதனையோடு சொல்லிவிட்டு நீண்ட பெருமூச்சு விட்டான். சில நிமிடங்கள் எதுவும் பேசாமல்



- வசந்தி வள்ளுவன்

அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

பின், "வெங்கி, உன் குடும்பம் பற்றிச் சொல்லு. மனைவி குழந்தைகள்...?" நான் வார்த்தையை முடிப்பதற்குள் கடகடவென்று சிரித்தான்.

"ராஜபாண்டி, நான் தனிக்கட்டை. கல்யாணமே செய்துக்கல."

"கல்யாணம் செய்துக்கலயா...?"

"ஆமா."

"வெங்கி, படிக்கிற காலத்திலே ஆசிரியர்களால் முழுமையாக நீ ஆசிர்வதிக்கப் பட்டவன். உன் வாழ்க்கை பிரகாசமாயிருக்கும். பேரும், புகழுமாய் வாழ்வாய்னு வாழ்த்தாத வாயே இல்லை. அவங்க வாழ்த்தினது எதுவும் பலிக்கல. நீ ஒரு சர்வர். ஒரு சாதாரண ஹோட்டலுக்குள்ள உன் உலகமே அடங்கிடுச்சு. பேரு, புகழ், பிரகாசம்னு நம்ம ஆசிரியர்கள் அன்னிக்குச் சொன்னது பொய்யாயிடுச்சு. அதை நினைச்சா எனக்கு

"வேதனையாயிருக்கு" என்றேன் மளமள வென்று.

வெங்கட்ராமனின் கண்கள் கூர்மை யாகின. முகம் மாறியது. ஏதோ சொல்ல உதடுகள் துடித்தன. ஆனால் ஒரு நொடியில் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"ராஜபாண்டி, இதை நினைச்சா வேதனைப்படுறே?" என்று மொட்டையாகச் சொல்லிவிட்டு எழுந்தான்.

"என்ன வெங்கி எழுந்திரிச்சுட்டே? நீ, கிளம்பணுமா?' என்று கேட்டேன்.

"எனக்கு ஏழு மணிக்கு டூட்டி. இப்ப போனாத்தான் சரியான நேரத்துக்குப் போய்ச் சேர முடியும்" என்றவன் ஜிப் பாப் பையிலிருந்து ஒரு விஸிட்டிங் கார்டை எடுத்து என்னிடம் நீட்டி, "இது ஹோட்டல் மொதலாளி கார்டு. ஃபோன் நம்பரும் இருக்கு. ஹோட்டல் விலாசமும் இருக்கு. இனிமே டெல்லி வந்தா, எங்க ஹோட்டல்லதான் நீ சாப்பிடம்.. நான் பரிமாறணும். என்னோட நண்பன், அதுவும் தேசத்தைக் காக்கிறவனுக்கு இந்தக் கையால உணவு வழங்க வேண்டாமா" என்றவன், என்னிடமிருந்து விடைபெற்றுச் சென்றான்.



அவன் மனத்தை, பேசத் தெரியாமல் பேசி புண்படுத்தி விட்டதாக உணர்ந்தேன். என் கூர்மையான வார்த்தைகளால்தான் அவன் அவசரமாக என்னிடமிருந்து விடை பெற்றுச் சென்றிருக்கலாம் என்றும் கருதினேன். என் மேலேயே எனக்கு வெறுப்பு ஏற்பட்டது.

அன்றிரவு சாப்பிட்டு விட்டு ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருந்தேன். விடுதி மானேஜர் உள்ளே வந்தார்.

"சார், இன்னிக்குச் சாயங்காலம் ஒருத்தரு உங்களைப் பாக்க வந்தாரே, அவரைத் தெரியுமா? நல்ல பழக்கமா?"

"எங்க ஊர்க்காரர். ராணுவ ஆஸ்பத்திரி வாசல்லே தற்செயலா சந்திச்சோம். ரூமுக்கு வாங்கோன்னு அழைச்சேன். வந்தாரு. ஊரு நடப்புகளைப் பற்றிப் பேசினோம்" என்றேன்.

"அதாவது அவரைப் பற்றி ஏதாவது சொன்னாரா?"

"கும்பகோணத்துக்காரர், ஹோட்டல்லே சர்வர் வேலை செய்யறதாச் சொன்னாரு."

"வேறு எதுவும் சொல்லல?" மானேஜர் மறுபடியும் கேட்டதும் எரிச்சலடைந்தேன்.

"எதுவும் சொல்லலை சார்" என் குரலில் சிறிது உஷ்ணம்.

"எப்படி சார் சொல்லுவார். அவருதான் விளம்பரம் விரும்பாத மகானாச்சே!" என்று மானேஜர் சொன்னதும் திடுக்கிட்டுப் போய்விட்டேன்.

"மகானா? என்ன சார் சொல்லுறீங்க?"

"சார் அவரு சர்வர் மட்டுமல்ல. ஊறுகாய், வத்தல், அப்பளம் போட்டு விற்பாரு. நல்ல வருமானம். ஆனா தனக்காக ஒரு பைசா கூட எடுத்துக்கிட மாட்டாரு. டெல்லியில உள்ள அனாதைப் பள்ளிக்கூடங்கள், முதியோர் இல்லம், ஏழைகள் வாழற இடம், இப்படிப்பட்ட இடங்களுக்குப் போயி அப்படியே கொடுத்திடுவாரு. ஞாயிற்றுக்கிழமை ஸ்கூல் பிள்ளைகளைக் கூட்டிக்கிட்டு சேரி சுத்தம் பண்றது, மரம் நடுறது, மனநிலை சரியில்லாதவங்களைத் தேடிப் பிடிச்சு விடுதிகளில் சேர்க்கிறதுன்னு அலைவார். இவரோட உண்மையான சேவையைக் கேள்விப்பட்ட பல வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள், இவர் மூலம் உதவி செய்யறாங்கன்னா பார்த்துக்கோங்க. இவரு ஒரு ஃபோன் போட்டா மத்திய அமைச்சருங்க ஓடி வருவாங்க. ஆனா, விளம்பரம் விரும்பாத ஜென்மம். ஒரு போட்டோ கூட பேப்பர்ல வர விட மாட்டாரு. பத்திரிக்கைக்காரங்ககிட்ட பேட்டியே கிடையாது. இவரால் நம்ம தமிழ்நாட்டுக்காரங்களுக்குப் பெருமை. 'தமிழர்கள் இரக்கப்படுகிறவர்கள்'னு எல்லா மாநிலத்துக்காரனையும் இந்த டெல்லியிலே பேச வைச்சுட்டாரு. நீங்க ரெண்டு பேரும் ஒரே ஊர்க்காரங்கன்னு சொல்லுறத கேட்டுப் பெருமைப்படுறேன். சார், அடுத்த தடவை அவரு வந்தா, ஒரு போட்டோ எடுத்து நம்ம ஹோட்டல் வரவேற்பு அறையில மாட்டணும். நீங்கதான் அவரைச் சம்மதிக்க வைக்கணும்."

சொற்பொழிவு போல வெங்கட்ராமனின் பெருமைகளைச் சொல்லிவிட்டு அங்கிருந்து சென்றார் மானேஜர். என்னையறியாமலேயே என் கண்களில் நீர் சுரந்தது.

"உன்னால் இந்தத் தமிழ்நாடே பெருமையடையும்". ஆண்டு விழாவன்று தலைமை ஆசிரியர் வெங்கட்ராமனை வாழ்த்தியது என் காதுகளில் ஒலித்தது. ●

சிவகாமியின் சபதம்

பதின்மூன்றாம் அத்தியாயம்

அகக் கண்காட்சி

திகம்பர சமணரால் வழி காட்டப் பெற்று, நெடுமாறன் குகைக்குள்ளே நுழைந்தபோது, உள்ளிருந்து வந்த தூபப் புகையின் வாசனை அவனுடைய தலையை கிறுகிறுக்கச் செய்தது. மெதுவாகச் சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றான். சிறிது தூரம் சென்றதும் தென்பட்ட விசாலமான குகை மண்டபத்தில் ஓர் அபூர்வமான காட்சியைக் கண்டான். தீபஸ்தம்பத்தின் மீதிருந்த பெரிய அகல் விளக்கின் தீபம் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் வைத்திருந்த பாத்திரத்திலிருந்து தூபப் புகை வந்து கொண்டிருந்தது. தீபத்தின் வெளிச்சமும் தூபத்தின் புகையும் சேர்ந்து அங்கே தோன்றிய காட்சியை ஏதோ ஒரு மாயாலோகத்தின் கனவுக் காட்சியாகத் தோன்றும்படி செய்தது. நெடுமாறன் சற்று உற்றுப் பார்த்த பிறகு காட்சி சிறிது தெளிவடைந்து காணப்பட்டது. பத்துப் பன்னிரண்டு திகம்பர சமணர் வட்ட வடிவமாக உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் அனைவரும் ஏதோ ஒரு மந்திரத்தை ஒரே குரலில் ஒரே விதமாக ஜபித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் உடுக்கை போன்ற ஒரு வாத்தியத்தைக் கையிலே வைத்து முழக்கிக் கொண்டிருந்தார். மற்றொருவர் பல தந்திகள் உள்ள ஒரு முழு நீளமுள்ள

அமரர் கல்கி


வீணையைக் கையில் வைத்துக் கொண்டு அதன் நரம்புகளை விரலினால் தட்டிக் கொண்டிருந்தார். இந்த இரண்டு நாதங்களும் சேர்ந்துதான் 'தரிரிம்' 'தரிரிம்' என்ற ஒலியைக் கிளப்பி நெடுமாறன் உடம்பிலுள்ள நரம்புகளையெல்லாம் புடைத்தெழச் செய்தன.

வட்ட வடிவமாக உட்கார்ந்திருந்த சமணர்களுக்கு நடுவில் ஏறக்குறைய பதினாறு வயதுள்ள ஒரு சிறுவன் காணப்பட்டான். மேற்படி மந்திர உச்சாரணத்துக்கும் வாத்தியங்களின் ஒலிக்கும் இசைய, அவனுடைய தேகம் இலேசாக ஆடிக் கொண்டிருந்தது. அவனுடைய கண்களோ முக்கால் பங்கு மூடியிருந்தன. கண்கள் திறந்திருந்த அளவில் வெள்ளை விழி மட்டும் தெரிந்தபடியால் முகம் பயங்கரத் தோற்றத்தை அளித்தது.

நெடுமாறனை அழைத்து வந்த சமண முனிவர் அவனை நோக்கிச் சமிக்ஞை செய்து, எதுவும் பேச வேண்டாமென்றும், சப்தம் செய்யாமல் உட்கார வேண்டுமென்றும் தெரிவித்தார்.

நெடுமாறன் அவ்விதமே சப்தம் செய்யாமல் உட்கார்ந்திருந்





தான்.

மந்திர உச்சாரணம், வாத்திய முழக்கம் ஆகியவற்றின் வேகம் வரவர அதிகரித்து வந்தது. திகம்பர மண்டலத்துக்கு மத்தியிலிருந்த சிறுவனுடைய உடம்பின் ஆட்டமும் விரைவாகிக் கொண்டு வந்தது.

திடீரென்று மந்திர உச்சாரணமும், வாத்திய முழக்கமும் நின்றன.

சிறுவன் 'வீல்' என்று சப்தமிட்டுக் கொண்டு தரையிலே சாய்ந்தான்.

சற்று நேரம் அந்தக் குகை மண்டபத்தில் ஒரு பயங்கர நிசப்தம் குடி கொண்டிருந்தது.

கட்டையைப் போல் கீழே கிடந்த சிறுவனின் கண்ணிமைகளும் உதடுகளும் இலேசாகத் துடித்தன.

கையில் வீணை வைத்துக் கொண்டிருந்த சமணர் அதன் ஒற்றை நரம்பை இலேசாகத் தட்டிவிட்டு, "தம்பி! என் குரல் உனக்குக் கேட்கிறதா?" என்று வினவினார்.

"கேட்கிறது சுவாமி!" என்று அந்தச் சிறுவனின் உதடுகள் முணுமுணுத்தன.

"அப்படியானால் நான் கேட்கிற கேள்விகளுக்கு விடை சொல். சற்று முன்னால் நீ இருந்த இடத்துக்கும் இப்போதுள்ள இடத்துக்கும் ஏதேனும் வித்தியாசம் தெரிகிறதா?"

"சற்று முன்னால் நான் மலைக் குகையில் தரையில் கிடந்தேன். இப்போது ஆகாச வெளியில் மிதந்து கொண்டிருக்கிறேன். ஆகாச வெளியில் நினைத்த இடத்துக்கெல்லாம் போகக் கூடியவனாயிருக்கிறேன்."

"நீ மிதக்கும் இடத்தில் உன்னைச் சுற்றி என்ன பார்க்கிறாய்?"

"என்னைச் சுற்றிலும் திரள் திரளாகப் புகை மண்டலங்கள் காணப்படுகின்றன. அந்தப் புகை மண்டலங்களுக்குள்ளே எத்தனை எத்தனையோ உருவங்கள் மங்கலாகக் காணப்படுகின்றன. அவை மறைந்து தோன்றிக் கொண்டிருக்கின்றன."

"தம்பி! நீ நிற்கும் இடத்திலேயே நிற்க வேண்டுமா? முன்னாலும் பின்னாலும் உன்னால் போகக் கூடுமா?"

"முன்னாலும் பின்னாலும் மேலேயும் கீழேயும் நானா திசைகளிலும் நினைத்தபடியெல்லாம் நான் போகக்கூடியவனாயிருக்கிறேன்."

சிறுவனிடம் மேற்படி கேள்விகளைக் கேட்ட சமணர், நெடுமாறனை நோக்கி, "பாண்டிய குமாரா! இந்தப் பிள்ளை இப்போது ரிஷப தேவரின் அருள் மகிமையில் அகக் காட்சி பெற்றிருக்கிறான். இதற்கு முன் இருபதாயிரம் ஆண்டுக் காலத்தில் நடந்தவைகளையும், இனிமேல் இருபதினாயிரம் ஆண்டுக் காலத்தில் நடக்கப் போகும் சம்பவங்களையும் இவனால் நேருக்கு நேர் கண்டு சொல்ல முடியும்! தங்களுக்கு ஏதாவது தெரிந்து கொள்ள வேண்டுமா?"


நெடுமாறன் சற்றுத் தயங்கினான். வருங்காலத்தை மறைத்துக் கொண்டிருக்கும் மேகத் திரையை விலக்கிக் கொண்டு எதிர்காலச் சம்பவங்களை, தான் பார்க்க வேண்டியது அவசியந்தானா? அப்படிப் பார்ப்பதனால் ஏதேனும் விபரீதம் ஏற்படுமோ? ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் அந்த மந்திரக் குகையிலிருந்து உடனே எழுந்து போய் விடலாமா?

மனத்தில் இப்படி நெடுமாறன் எண்ணினானே தவிர, அவனை அங்கிருந்து எழுந்து போக விடாமல், ஏதோ ஒரு சக்தி தடுத்து அவனை அங்கேயே பலமாக இருத்திக் கொண்டிருந்தது.

"ஆம், அடிகளே! வாதாபி யுத்த முடிவைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்" என்ற வார்த்தைகள் நெடுமாறன் வாயிலிருந்து தாமே வெளி வந்தன.

உடனே, சமணர் தரையில் கிடந்த சிறுவனை நோக்கி, "தம்பி! கொஞ்சம் வடக்கு நோக்கிப் பிரயாணம் செய்து அங்கே என்ன பார்க்கிறாய் என்று சொல்லு!" என்றார்.






''ஆகட்டும், சுவாமி! இதோ வட திசை நோக்கிப் போகிறேன்!'' என்றான் சிறுவன். சற்றுப் பொறுத்து, ''ஆ! என்ன பயங்கரம்!'' என்றான்.

''தம்பி! அங்கே என்ன பயங்கரமான காட்சியை நீ பார்க்கிறாய்?'' என்று சமணர் கேட்டார்.

''ஆகா! மிகப் பயங்கரமான யுத்தம் நடக்கிறது.



கணக்கிலடங்காத வீரர்கள் வாட்களாலும் வேல்களாலும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு செத்து விழுகிறார்கள். எங்கே பார்த்தாலும் இரத்த வெள்ளம் ஆறாக ஓடுகிறது. பெரிய பெரிய பிரம்மாண்டமான யானைகள் பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு ஒன்றையொன்று தாக்குகின்றன. யுத்தம் ஒரு பெரிய பிரம்மாண்டமான கோட்டை மதிலுக்குப் பக்கத்தில் நடக்கிறது. கோட்டையின் பிரதான வாசலில் ஒரு பெரிய கொடி பறக்கிறது. அந்தக் கொடியில் வராகத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆகா! கோட்டைக் கதவு இதோ திறக்கிறது! கணக்கற்ற வீரர்கள் கோட்டைக்குள்ளேயிருந்து வெளியே வருகிறார்கள். ஆ! யுத்தம் இன்னும் கோரமாக நடக்கிறது. சாவுக்குக் கணக்கேயில்லை, கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பிணக்காடு, அம்மம்மா! பார்க்கவே முடியவில்லை!''

சிறுவனுடைய கண்ணிமைகள் அப்போது இலேசாகத் துடித்ததைப் பார்த்த சமண குரு. ''தம்பி! பயப்படாதே! உனக்கு ஒன்றும் நேராது. இன்னும் சிறிது உற்றுப் பார். போர்க்களம் முழுவதும் பார்த்து, மிகவும் நெருக்கமான சண்டை எங்கே நடக்கிறதென்று கவனி!'' என்றார்.


''ஆம், ஆம்! அதோ ஓரிடத்தில் பிரமாதமான கைகலந்த சண்டை நடக்கிறது. குதிரை மேல் ஏறிய வீரன் ஒருவன் இரண்டு கைகளிலும் இரண்டு வாட்கள் ஏந்திப் பயங்கரப் போர் புரிகிறான். அவனைச் சுற்றிலும் எதிரிகள் சூழ்ந்து கொண்டு தாக்குகிறார்கள். அவன் தன்னந்தனியாக நின்று அவ்வளவு பேரையும் திருப்பித் தாக்குகிறான். அவனுடைய கைவாட்கள் அடிக்கடி மின்னலைப் போல் ஜொலிக்கின்றன. ஒவ்வொரு வாள் வீச்சுக்கும் ஒரு தலை உருளுகிறது. ஆகா! இதோ அந்த வீரனுக்குத் துணையாக இன்னும் சில வீரர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு நடுவில் மீனக்கொடி பறக்கிறது. 'நெடுமாற பாண்டியர் வாழ்க! வாதாபிப் புலிகேசி வீழ்க!' என்று அவர்கள் கர்ஜித்துக் கொண்டு எதிரிகள் மீது பாய்கிறார்கள்.''


இப்படி அந்தச் சிறுவன் சொன்னபோது, இதுவரை சிறிது அலட்சிய பாவத்துடனேயே கேட்டுக் கொண்டு வந்த நெடுமாறன் திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தான். மேலே என்ன நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்வதில் அவனுக்கு அப்போது அளவில்லாத பரபரப்பு உண்டாயிற்று.

மறுபடியும் சிறிது நேரம் சிறுவன் பேசாதிருந்தான். சமண குரு மீண்டும் அவனைத் தூண்டினார். மேலே என்ன நடக்கிறது என்று நன்றாகப் பார்த்துக் கூறும்படி ஆக்ஞாபித்தார்.

''ஆகா! சண்டை முடிந்துவிட்டது. எதிரிகள் எல்லாரும் செத்து விழுந்துவிட்டார்கள். வெற்றியடைந்த வீரர்கள் அந்த அஸகாய சூரனைச் சூழ்ந்து கொண்டு, 'மீன்கொடி வாழ்க! நெடுமாற பாண்டியர் நீடூழி வாழ்க!' என்று கோஷிக்கிறார்கள். ஆகா! அவர்களுடைய கோஷமும் ஜயபேரிகைகளின் முழக்கமும் சேர்ந்து காது செவிடுபடச் செய்கின்றன!''

''அதோ இன்னொரு வீரர் கும்பல் வருகிறது. அந்தக் கும்பலின் நடுவில் ஒரு ரதம் காணப்படுகிறது. ரதத்தின் மேல் ரிஷபக் கொடி பறக்கிறது. ரதத்தில் கம்பீர வடிவமுள்ள ஒருவர் வீற்றிருக்கிறார். அவருடைய முகத்தில் குரோதம் கொதித்துக் கொண்டிருக்கிறது. இந்த இரதத்தைச் சூழ்ந்து வரும் வீரர்கள் 'மாமல்ல சக்கரவர்த்தி வாழ்க!' என்று கோஷம் செய்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கோஷத்தில் அவ்வளவு சக்தி இல்லை. இரண்டு கூட்டமும் சந்திக்கிறது. ரதத்தில் வந்தவரும் குதிரை மேலிருந்த





வரும் ஒருவரையொருவர் பார்க்கிறார்கள். இரண்டு பேரும் கீழே இறங்குகிறார்கள். சமீபத்தில் வருகிறார்கள். மீனக் கொடிக்குரிய வீரர், ரிஷபக் கொடிக்கு உரியவரைப் பார்த்து, ''மாமல்லரே! பகைவர்கள் ஒழிந்தார்கள்; புலிகேசி இறந்தான்; வாதாபிக் கோட்டை நம் வசமாகிவிட்டது. இனிமேல் தங்கள் காரியம். நான் போக விடை கொடுங்கள்!' என்று கேட்கிறார். ஐயோ! ரிஷபக் கொடியாரின் முகத்தில் குரோதம் தாண்டவமாடுகிறது. அவர், 'அடே பாண்டியப் பதரே! எனக்கு வர வேண்டிய புகழையெல்லாம் நீ கொண்டுபோய் விட்டாயல்லவா?'' என்று சொல்லிக் கொண்டே உடைவாளை உருவுகிறார். மீனக் கொடியார், ''வேண்டாம் சக்கரவர்த்தி! வேண்டாம்! நமக்குள் எதற்காகச் சண்டை?' என்கிறார். ரிஷபக் கொடியார் அதைக் கேட்காமல் உடைவாளை வீசுகிறார், ஐயையோ!''

கேட்டவர்களின் ரோமம் சிலிர்க்கச் செய்த 'வீல்' சப்தத்துடன் இத்தனை நேரமும் தரையில் படுத்துக் கிடந்த சிறுவன் எழுந்து உட்கார்ந்தான். பீதியும் வெருட்சியும் நிறைந்த கண்களை அகலமாகத் திறந்து சுற்றிலும் பார்த்துத் திருதிரு வென்று விழித்தான்.

நெடுமாற பாண்டியன் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. சமண முனிவரைப் பார்த்து, ''அப்புறம் நடந்ததைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? முக்கியமான தருணத்தில் எழுந்து விட்டானே?'' என்றான்.

''இளவரசே! இன்றைக்கு இவ்வளவுதான். மறுபடி இன்றிரவு இவனை அகக் காட்சி காணும்படி செய்ய முடியாது. பிறகு நடந்ததைத் தெரிந்து கொள்ள விரும்பினால் நாளைக்குத் தாங்கள் திரும்பவும் இவ்விடத்துக்கு வந்தாக வேண்டும்!'' என்றார்.

பதினான்காம் அத்தியாயம்

படை கிளம்பல்

மறுநாள் விஜயதசமி அன்று காலையில் வழக்கம் போல் கீழ்த் திசையில் உதயமான சூரியன், காஞ்சி மாநகரம் அன்றளித்த அசாதாரணக் காட்சியைக் கண்டு சற்றுத் திகைத்துப் போய் நின்ற இடத்திலேயே

அருள்வாக்கு!

வார்த்தைகளை உபயோகிக்கும் போது, ஒரு சொல் கூட அதிகமாகக் கூடாது. அளவாக, கணக்காகப் பேச வேண்டும். அதனால் நமக்கும் சரி, நம் பேச்சைக் கேட்கிறவர்களுக்கும் சரி, பொழுது மிச்சமாகும். வழவழவென்றும் பேசாமல், சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்று பழக்கிக் கொண்டாலே, புத்தியில் ஒரு தீட்சண்யமும், வாக்கில் ஒரு பிரகாசமும்கூட உண்டாகும். சக்தியும் (energy) வீண் (waste) ஆகாமல் இருக்கும். எத்தனையோ சண்டை சாடிகளும் மிச்சமாகும். 'கொட்டி விடலாம்; வாரிவிட முடியுமா?' என்று பாமர ஜனங்கள் கூடக் கேட்கிறார்கள். திருவள்ளுவரும் எதைக் காக்காவிட்டாலும் நாக்கைக் கட்டுப்படுத்திக் காப்பாற்ற வேண்டும் என்கிறார். ஆனால் இப்போது லோகம் முழுக்க ஒரே பேச்சு யுகமாகத்தான் ஆகியிருக்கிறது. நியூஸ் பேப்பர்களெல்லாம் 'அவர் பிரசங்கம்', 'இவர் பிரசங்கம்' என்றுதான் போட்டு நிரப்புகின்றன. காரியத்தில் ஏதாவது நடக்கிறதா என்றால், ஸைபர் தான். அநேகமாக, காரியத்தில் நடக்கவில்லை என்பது தெரியாமலிருப்பதற்கே சண்டப் பிரசண்டமாகப் பேசி, ஏதோ பெரிதாகச் சாதித்துவிட்ட மாதிரி பிரமையை உண்டு பண்ணி வருகிறார்கள்.



ஒரு சமயத்தில் எந்தத் தொத்து வியாதி ரொம்பவும் உக்கிரமாகப் பரவியிருக்கிறதோ அதற்குத்தானே முக்கியமாக சிகித்சை செய்ய வேண்டும்? இன்று பேச்சுத்தான் ரொம்ப உக்கிரமாகப் பரவியிருக்கிறது. நம் நீதி நூல்களில் 'மௌனம் கலக நாஸ்தி' என்றார்கள். பேச்சு குறைந்தால் சண்டையும் குறையும். மேல்நாட்டில் கூட, பேச்சு வெள்ளி என்றால், மௌனம்தான் தங்கம். (Speech is silver; silence is golden)' என்கிறார்கள் - ஆத்ம சிரேயஸுக்கு ரொம்பவும் வற்புறுத்தப்பட்ட விஷயம் இது. 'மோனம் என்பது ஞான வரம்பு' என்றார்கள். அந்த வரம்புக்குப் போய், ஒரே மௌனமாயிருக்க நம்மால் முடியாவிட்டாலும், நாம் பேச்சை ரொம்பவும் குறைத்துக் கொள்ளப் பாடுபட வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

நின்றதாகக் காணப்பட்டது.

பூர்வீகப் பெருமை வாய்ந்த பல்லவ அரண்மனை வாசலில் நின்று மாமல்ல சக்கரவர்த்தி யாத்ராதானம், கிரகப் ப்ரீதி ஆகிய சடங்குகளைச் செய்துவிட்டு, குல குரு ருத்ராச்சாரியார் முதலிய பெரியோர்களின் ஆசி பெற்று, தாயார் புவனமகாதேவியிடமும் விடைபெற்றுக் கொண்டு பட்டத்துப் போர் யானையின் மீது ஏறிப் போர் முனைக்குப் புறப்பட்டார். அப்போது காஞ்சி நகரத்தின் மாடமாளிகைகளெல்லாம் அதிரும்படியாகவும், மண்டபங்களிலேயெல்லாம் எதிரொலி கிளம்பும்படியாகவும் அநேகம் போர் முரசுகளும் எக்காளங்களும் ஆர்த்து முழங்கின.

சக்கரவர்த்தி ஏறிய பட்டத்து யானைக்கு முன்னாலும் பின்னாலும் அணி அணியாக நின்ற யானைகளும் குதிரைகளும் ரதங்களும் ஏக காலத்தில் நகரத் தொடங்கிக் காஞ்சி நகரின் வடக்குக் கோட்டை வாசலை நோக்கிச் செல்லத் தொடங்கின.

இந்த ஊர்வலம் காஞ்சியின் இராஜ வீதிகளின் வழியாகச் சென்றபோது இரு புறத்திலும் இருந்த மாளிகை மேல்மாடங்களிலிருந்து பூரண சந்திரனையும் பொன்னிறத் தாமரையையும் ஒத்த

முகங்களையுடைய பெண்மணிகள் பலவகை நறுமலர்களையும் மஞ்சள் கலந்த அட்சதையையும் சக்கரவர்த்தியின் மீது தூவி, 'ஜய விஜயீபவ!' என்று மங்கல வாழ்த்துக் கூறினார்கள்.

இப்படி நகர மாந்தரால் குதூகலமாக வழி அனுப்பப்பட்ட சக்கரவர்த்தியின் போர்க்கோல ஊர்வலம் ஒரு முகூர்த்த காலத்தில் வடக்குக் கோட்டை வாசலை அடைந்தது. நன்றாகத் திறந்திருந்த கோட்டை வாசல் வழியாகப் பார்த்த போது, கோட்டைக்கு வெளியிலே சற்றுத் தூரத்தில் ஆரம்பித்துக் கண்ணுக்கெட்டிய வரை பரவிய ஒரு பெரிய சேனா சமுத்திரம் காணப்பட்டது. அந்த சேனா சமுத்திரத்தின் இடையிடையே கணக்கில்லாத கொடிகள் காற்றிலே பறந்த காட்சியானது, காற்று பலமாய் அடிக்கும் போது சமுத்திரத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வெண்ணுரை எறிந்து பாயும் அலைகளை ஒத்திருந்தது.

வடக்குக் கோட்டை வாசலில், அகழிக்கு அப்புறத்தில் நின்று மாமல்ல சக்கரவர்த்தி கடைசியாக விடைபெற்றுக் கொண்டது, மானவன்மரிடமும் தம் அருமைக் குழந்தைகள் இருவரிடமுந்தான்.

மகேந்திரனையும் குந்தவியையும் தமது இரு கரங்களாலும் வாரி அணைத்துத் தழுவிக் கொண்டபோது, 'இந்தக் குழந்தைகளை இனிமேல் எப்போதாவது காணப் போகிறோமோ, இல்லையோ?' என்ற எண்ணம் தோன்றவும், மாமல்லரின் கண்கள் கலங்கிக் கண்ணீர் ததும்பின. குழந்தைகளைக் கீழே இறக்கிவிட்டு மானவன்மரைப் பார்த்து மாமல்லர் சொன்னார்: "என் அருமை நண்பரே! இந்தக் குழந்தைகளையும் இவர்களுடைய தாயாரையும் பல்லவ இராஜ்யத்தையும் உம்மை நம்பித்தான் ஒப்படைத்து விட்டுப் போகிறேன். நீர்தான் இவர்களைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாத்து நான் திரும்பி வரும்போது ஒப்படைக்க வேண்டும். மானவன்மரே! பரஞ்சோதியின் அபிப்பிராயப்படி திருக்கழுக்குன்றத்தில் திரண்டிருந்த படையில் ஒரு பகுதியை நிறுத்திவிட்டுப் போகிறேன். பாண்டிய குமாரனாலோ, அவனுடைய படையினாலோ காஞ்சிக்கு அபாயம் நேர்வதாயிருந்தால், நம் படையைப் பயன்படுத்தத் தயங்க வேண்டாம்."

"ஆகட்டும், பிரபு! தங்களுக்கு இவ்விடத்துக் கவலை சிறிதும் வேண்டாம்!" என்றான் மானவன்மன்.

"ரொம்ப சந்தோஷம். கடைசி நேரத்தில் எங்கே நீங்களும் வர வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறீர்களோ என்று பயந்து கொண்டிருந்தேன். இதுதான் உண்மையான சிநேகத்துக்கு அழகு!" என்று உள்ளம் உவந்து கூறினார் மாமல்லர்.

அப்போது மகேந்திரன் ஆயிரத்தோராவது தடவையாக, "அப்பா! நானும் வாதாபிப் போருக்கு வருகிறேன். என்னையும் அழைத்துப் போங்கள்!" என்றான்.

புதல்வனைப் பார்த்து மாமல்லர், "மகேந்திரா! இந்த வாதாபி யுத்தம் கிடக்கட்டும். இதைவிடப் பெரிய இலங்கை யுத்தம் வரப் போகிறது. உன் மாமாவின் இராஜ்யத்தை அபகரித்துக் கொண்டவனைப் போரில் கொன்று இராஜ்யத்தைத் திரும்பப் பெற வேண்டும். அந்த யுத்தத்துக்கு நீ போகலாம்!" என்றார்.

இவ்விதம் கூறி விட்டு மாமல்லர் சட்டென்று குழந்தைகளைப் பிரிந்து சென்று போர் யானை மீது ஏறிக் கொண்டார். அவ்வளவுதான்! அந்தப் பெரிய பிரம்மாண்டமான சைனியம் சமுத்திரமே இடம் பெயர்ந்து செல்வது போல் மெதுவாகச் செல்லத் தொடங்கியது. அவ்வளவு பெரிய சைனியம் ஏககாலத்தில் நகரும்போது கிளம்பிய புழுதிப் படலமானது வானத்தையும் பூமியையும் ஒருங்கே மறைத்தது. அந்தப் புழுதிப் படலத்தில் பல்லவ சைனியம் அடியோடு மறைந்து போகும் வரையில் மானவன்மரும், மகேந்திரனும், குந்தவியும் கோட்டை வாசலில் நின்று கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

சரணடையாத மீரா!

பேட்டி வேண்டுமெனக் கேட்ட அடுத்த வினாடி, உடனே ஓ.கே சொல்கிற புண்ணியவதிகள் யாரென்றால், அறிமுகப் படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் அரிச்சுவடி நடிகைகள் தான். அப்படியொரு புண்ணியவதி மீரா வாசுதேவன். அவரது செல்லிடத் தொலைபேசியில், அதாவது செல்ஃபோனில் பிடித்தோம். "நாளைக்குக் காத்தாலே ஃபைவ் டு செவன் எலியட்ஸ் பீச்சிலே ஷூட்டிங். அங்கே வந்துடுங்க. ப்ளீஸ்...! லேட்டா வராதீங்க, அப்புறம் பேக்-அப் பண்ணிடுவோம்'' என்று அப்பாயின்மெண்ட் கொடுத்தார். சூரிய உதயக் காட்சியை சினிமாவிலும், டி.வி.யிலும் பார்த்துப் பழக்கப்பட்ட நமக்கு, அதிகாலை பள்ளியெழுச்சி என்பது சோதனை முயற்சி. இருப்பினும் ஒரு தேவதை அழைத்துவிட்ட பிறகு எப்படித் தூங்க? விழித்துக் கொண்டு கடற்கரைக்கு விரைந்தோம். இரத்தத்தில் கூடிப் போன சர்க்கரையின் அளவைக் குறைக்க அங்கே ஓடிக் கொண்டிருந்த மனிதர்களுக்கு மத்தியில், சர்க்கரைப் புன்னகையுடன் ஓடிக் கொண்டிருந்தார் மீரா. அவரின் பாதச் சுவடுகளில் துல்லியமாக அடிவைத்து பத்தடி இடைவெளியில் அவரைப் பின் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தனர் இரண்டு இளைஞர்கள். ஒருவர் பின்னணிப் பாடகர் எஸ்.பி.பி.யின் மகன் சரண். இன்னொருவர் இசையமைப்பாளர் கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு. சில



• மீரா வாசுதேவன்

நொடிகளில் மீரா, தடுக்கி விழ, இருவரும் ஓடிப் போய்க் கைகளை நீட்டுகிறார்கள். ஆனால் யாருடைய கையையும் பிடிக்காமல், தானே சுயமாய்க் கையை ஊன்றி மீரா எழுந்து கொள்ள... 'கட்' சொன்னார் அறிமுக இயக்குனர் சமுத்திரக்கனி. எஸ்.பி.பி. சரண் தயாரிக்கும் 'உன்னைச் சரணடைந்தேன்' படத்தின் கிளைமாக்ஸ் காட்சி.

"முப்பத்தியோரு நாட்கள்ல முழுப் படத்தையும் எடுத்து முடிச்சிட்டாங்க! துளிக்கூட ஆபாசம் இல்லாத படத்துல நடிச்ச திருப்தியோடு மும்பை புறப்படுகிறேன். அதுக்கு முன்னாடி கல்கிக்கு என்னோட முதல் பேட்டியைத் தர்றதுலே ரொம்ப சந்தோஷப்படறேன். ஏன்னா, எங்க வீட்லே அப்பா, அம்மா, நான், தங்கை, தாத்தா, பாட்டி எல்லோரும் கல்கி வாசிக்கிறோம். மும்பை மசாலா ரொம்பப் பிடிக்கும்" என்றபடி பேச ஆரம்பித்தார் மீரா.



• எஸ்.பி.பி. சரண் - வெங்கட் பிரபு

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியை நேரடியாக ஒளிபரப்பிய 'செட் மாக்ஸ்' சேனலின் 'கிரிக்கெட்டாய நமஹ' விளம்பரத்தில் பாந்தமான பட்டுப்புடைவையில், தோன்றிய அதே மீரா வாசுதேவன். "அந்த விளம்பரத்தில் வர்ற கிரிக்கெட் கோலம் நானே போட்டது, தெரியுமா?" என்றவரிடம், "தமிழ் சினிமாவில் ஹீரோயின் வாய்ப்புப் பெறுவதற்காக, மும்பையில் குடியேறிய குடும்பமா?" என்றதும் மீராவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரவில்லை. மாறாக, பளீரென்று சிரித்தார். "அந்த மாதிரி அவசியம் எனக்கு ஏற்படலை. சென்னை பூர்விகம்ன்னாலும் பிறந்தது வளர்ந்தெல்லாம் மும்பையிலே தான். ஸ்கூலிங், கொரேகா விவேக் வித்யாலயால. எங்க உடம்பின் ஒவ்வொரு அணுவிலும் தமிழ் கலாசாரம் இருக்கணும்கிறதுக்காக, அம்மா ஹேமலதா எங்களுக்குத் தமிழ் எழுதப் படிக்கக் கத்துக் கொடுத்தாங்க. நாங்க மும்பையிலே செட்டிலான தமிழ்க் குடும்பம்" என்ற மீரா வாசுதேவன், இளங்கலை உளவியல் பட்டதாரி.

"காலேஜ் முடிச்சதும், மாடலிங் பண்ணணும்னு ஆசை. அம்மா, அப்பாகிட்டே சொன்னதும், ஆசிஷ் சோம்பூராகிட்டே அப்பாயிண்மெண்ட் வாங்கினாங்க. சோம்பூரா மும்பை சிட்டிலே பெரிய போட்டோ கிராஃபர். அவர் எடுத்துக் கொடுத்த என்னோட போட்டோக்களை, மாடல் கோ - ஆர்டினேட்டர்கள் கிட்டே கொடுத்தேன். ஒரே வாரத்தில் செட் மாக்ஸ் சேனல் விளம்பரத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அடுத்து ஃபேர் அண்ட் லவ்லி விளம்பரம். இந்த விளம்பரங்களைப் பார்த்துட்டு உடனே பாலிவுட்டிலிருந்து கூப்பிட்டாங்க. 'நடிக்கட்டுமா'ன்னு கேட்டதும், 'ஏன் தயங்குறே'ன்னு அப்பாவும், அம்மாவும் பச்சைக் கொடி காட்டினாங்க! அப்புறமென்ன! 'ரூல்ஸ் ப்யார் கா சூப்பர்ஹிட் ஃபார்முலா' படத்துலே ஹீரோயினா கலக்கினேன். சூப்பர் மாடல், மிலிந்த் சோமன் படம். நடிக்க நல்ல ஸ்கோப் இருந்தது. இந்த ஹிந்திப் படத்தைப் பார்த்துட்டுத்தான் 'உன்னைச் சரணடைந்தேன்' வாய்ப்பு வந்

நெல்லையைத் திரும்பிப் பார்த்தேன்!



கிராமத்து மனிதர்களின் அப்பாவித்தனத்தையும் நகரத்து மனிதர்களின் குறுக்குப் புத்தியையும் அவர்களது நிஜ சம்பாஷணைகள் மூலம் மிக அழகாகச் செதுக்கியிருந்தார் தாமரை மணாளன்.

- ஆர்.நாகராஜன், சென்னை

எங்கள் திருநெல்வேலிச் சீமையை மறுபடி திரும்பிப் பார்த்தேன் இத்தொடர் மூலம். வட்டார வழக்குப் பேச்சின் சுவை குன்றாமல் இறுதி வரை இனித்தது சில்லுக் கருப்பட்டி.

- என்.கேசவரி, பெங்களூர்

'சில்லுக்கருப்பட்டி' ஒரு நல்ல குடும்பக் கதைக்கு இலக்கணமாய் அமைந்தது. தொடரின் பாதியிலேயே மறைந்துவிட்ட அந்த நல்ல உள்ளம் அமைதி பெறட்டும்.

- கு. பிரசாத், சேலம்

செண்பகம் போன்ற கிராமத்துப் பெண்களிடம் இருக்கும் கூர்ந்த அறிவையும் தொலைநோக்குப் பார்வையையும், தாய் தந்தையிடம் கொண்ட பாசத்தையும் கண்டு பூரித்துப் போனேன். பலவேசமுத்து, தண்டபாணி, சொகுசு அக்கா போன்ற புதுப் பணக்காரர்கள், கொள்கைப் பிடிப்பில்லாத அரசியல்வாதிகள் இவர்களின் சாயமும் வெளுத்துப் போயிற்று. ஜெயராஜின் ஓவியங்களும் அருமை.

- வி. திலகம், திருநெல்வேலி

தது. பாலசந்தர் சாரோட உதவி இயக்குனர் சமுத்திரக்கனி எங்கிட்டே வந்து, 'கதை சொல்வேன், கேட்கும்போது உங்ககிட்ட குறிப்பா ஒரு ரியாக்ஷனை எதிர்பார்க்கிறேன். அது வரலேன்னா நீங்க இந்தக் கதையிலே நடிச்சுப் பயன் இல்லே'ன்னு சொல்லிட்டுத்தான் கதை சொல்ல ஆரம்பிச்சார். இரண்டு மணி நேரம் கேட்டேன். பதினாலு இடத்துலே அழுதுட்டேன். நான் எந்த ரியாக்ஷனை எதிர்பார்த்தேனோ... அது உங்ககிட்டே கிடைச்சிடுச்சி. நீங்கதான் ஹீரோயின்னு அப்பவே அட்வான்ஸ் கொடுத்துட்டார். நான் அழாமப் போயிருந்தா இந்த வாய்ப்பு மிஸ்சாகி இருக்கும்" என்று சிரித்துக்கொண்டே சொல்லும் மீரா, "இது நட்பைப் பற்றிய கதை. நண்பனுக்கும் காதலிக்கும் நடுவில் சிக்கித் தவிக்கிற காதலன் தான் படத்துல ஹீரோ. சூழ்நிலை தான் வில்லன். தொடர்ந்து இது மாதிரி நல்ல கதை கிடைச்சா நடிப்பேன், இல்லேன்னா மாடலிங் இருக்கு" என்கிறார் தீர்க்கமாய்.

"மும்பையில் உங்களுக்குப் பிடித்தது பானி பூரியா, பேல் பூரியா" என்றால், "இரண்டுமேயில்லை" என்கிறார் கலபத்தில் சரணடையாத மீரா! "தலால் தெரு பங்குச்சந்தையும், தாராவி குடிசைப் பகுதியும்" என்று தொடர்ந்து அதிர்ச்சி தருகிறார்.

"ஒருமுறை அப்பாவோடு, பங்கு மார்க்கெட்டின் டிரேட் ஹாலில் வியாபாரம் நடைபெறுவதைப் பார்க்கப் போயிருந்தேன். கம்ப்யூட்டர், இன்டர்நெட் என நவீன வசதிகள் ஆயிரம் இருக்க, பெரிய பெரிய கம்பெனி பங்குகளைக் கூவி விற்கும் ஷேர் புரோக்கர்களையும், பங்குகளைக் கைப்பற்ற அவர்களை நோக்கி ஓடும் முதலீட்டாளர்களையும் பார்த்தபோது, தமிழ்நாட்டில் பார்த்த மாட்டுச் சந்தை நினைவுக்கு வந்துவிட்டது. அதேபோல, ஆசியாவிலேயே மிகப் பெரிய குடிசைப் பகுதியான தாராவியில் வெறும் ஐந்தடி அகலத்தில் வாழ்கிற தமிழ்க்குடும்பங்களைப் பார்க்கிறபோதெல்லாம் ஆச்சரியமாகவும், பரிதாபமாகவும் இருக்கும். 'தாராவி இல்லை என்றால் மும்பை இல்லை'ன்னு அப்பா சொல்வார்" என்ற மீராவிடம் தாராவியைப் பற்றி ஒரு செய்திப் படம் தயாரிக்கும் திட்டமிருக்கிறதாம்!

- ஜெய்

அட்டை, படங்கள் :
'உன்னைச் சரணடைந்தேன்'

எங்க ஊரு சங்கதி :

103 வயது எழுத்தாளர்!



நூற்றுமூன்று வயது ஏ.என். மூர்த்தி, கன்னட எழுத்தாளர். தற்போது பெங்களூரில் இருக்கிறார். அவர் சொல்வதைக் கேளுங்கள்:

''நான் 1900ல் பிறந்தேன். சிறு வயதில் மைசூர் நகரிலிருந்து எங்கள் அக்கிகொப்பல் கிராமத்துக்கு நாற்பது மைல் நடந்தே வந்தேன்! வந்து கொஞ்சம் டிபன் சாப்பிட்டுவிட்டு நீச்சலடிக்கப் போய் விட்டேன். என்னுடைய பத்தொன்பதாவது வயதில் எனக்குக் கல்யாணம். என் மனைவிக்கு அப்போது பத்து வயசு! ஐந்து நாள் கல்யாணம். பிறகு ஆறு வருஷங்கள் வரை என் மனைவியுடன் பேச அனுமதி கிடைக்கவில்லை! மைசூரிலுள்ள மகாராஜா கல்லூரியில் நான் பி.ஏ. படித்தேன். நமது முன்னாள் ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் எனக்கு நவீன தத்துவ வரலாறு பற்றி பாடம் எடுத்தார். வகுப்பில் முதல் பதினைந்து நிமிஷங்கள் நாட்டு நடப்புகள் பற்றி எங்களுக்குச் சொல்லுவார். பின்பு அது பற்றி விவாதம் பண்ணச் சொல்லுவார். பிறகுதான் பாடம் ஆரம்பமாகும்! கடைசி பத்து நிமிஷங்கள் அவர் அன்று சொல்லிக் கொடுத்த பாடத்தைப் பற்றி நோட்ஸ் டிக்டேட் பண்ணுவார். எப்போதும் ஆங்கிலத்திலும் தத்துவத்திலும் நான் முதல் மாணவனாக இருப்பேன். பின்பு நான் படித்த மகாராஜா கல்லூரியிலேயே ஆசிரியரானேன். அங்கிருந்த ஆசிரியர்களில் நான்தான் முதன்முதல் வேஷ்டி கட்டிக் கொண்டவன்.

நான் எதற்கும் உணர்ச்சிவசப்பட மாட்டேன். மிக மிக அபூர்வமாகத்தான் எனக்குக் கோபம் வரும். நான் அசைவம் சாப்பிட மாட்டேன். ஸ்பெஷல் சாப்பாடு எதுவும் கிடையாது. தினமும் ஒரு மணி நேரம் நடக்கிறேன். அதனால்தான் நூற்று மூன்று வயசு வரை வாழ்வதாக நினைக்கிறேன்.''

- அனிதா ராமச்சந்திரன்,

நன்றி: 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

அடிகளாக மாறிய ரயில் டிரைவர்!



மதுரை, திருப்பரங்குன்றத்தையொட்டியுள்ள பாம்பன் சுவாமிகள் கோயிலை உருவாக்கியவர் இராமச்சந்திர அடிகள். கல்விக் கூடங்களும், ஏழைகளுக்கு உதவும் அமைப்பும், கோயில் பெற்ற புகழும் இராமச்சந்திரனை ஸ்ரீலஸ்ரீ இராமச் சந்திர அடிகளாக்கி விட்டது.

இவர், மதுரை - இராமேஸ்வரம் ரயிலில் பல ஆண்டுகள் எஞ்சின் டிரைவராக வேலை பார்த்தவர். பாம்பன் சுவாமிகள் மீதுள்ள பற்றுதலால் வேலையை விட்டு விட்டு, திருப்பரங்குன்றம் அருகில் கோயிலை உருவாக்கினார்.

இவருக்கு, மலேசியாவிலுள்ள பிரபலமான தமிழர்களும், சீனர்களும் இப்போது நிறைய உதவுகின்றனர்!

- அனுப்பானடி இரா. கல்யாணசுந்தரம்

வாஜ்பாய் ஓய்வு பெறுவது பா.ஜ.க.வுக்கு நல்லதா?

● என். சுஜாதா, சென்னை - 61

? இலவச திருமணங்கள் சாதித்தது என்ன...?

! 1053 + 1053 வோட்டுக்களைச் சம்பாதித்தது!

● ஜே.டி. ஆனந்தன், மதுரை - 50

? மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு யார் காரணம்? பெற்றோரா? ஆசிரியர்களா? சமுதாயமா?

! பரீட்சையில் வெற்றிக்கு இந்த மூன்று பிரிவினரும் அளிக்கும் அளவுகடந்த முக்கியத்துவம்தான் காரணம்.

● முகவை முத்துசாமி, தொண்டி

? தேசிய அரசியலில் அ.தி.மு.க.வின் பலம் என்ன? பலவீனம் என்ன?

! பலம் : தமிழக நாடாளுமன்றத் தொகுதிகளில் உள்ள செல்வாக்கு, (செல்வம் + வாக்கு சாதுர்யம்). பலவீனம் : தமிழகத்தைத் தாண்டி அதன் செல்வாக்கு நீடிக்காத நிலைமை.

● டி.சந்திரா சிவகுரு, கருப்புக்கட்டி *

? முரசொலி மாறனுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என கலைஞர் கூறுவது எதைக் காட்டுகிறது?

! விசாரணை வேண்டும் என்றது குறுகிய மனம்; மாறன் குடும்பமே சிகிச்சை செலவுகள் அனைத்தையும் ஏற்கும் என்றது விசால மனம்.

● க.நா. இராமேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

? கமல் 'சண்டியர்' படத்தின் பெயரை மாற்ற முடிவு செய்திருப்பது பற்றி...?

! அது கிடக்கு, இலவச பப்ளிசிடி எவ்ளோ



* நேசமும்...



* ... துவேஷமும்!

கிடைச்சுது... அதை நினைச்சுப் பாருங்க!

● பொன்விழி, அன்னூர்

? மனிதன் தோன்றியதிலிருந்து இன்னும் அவனிடம் மாறாதது எது?

! அவனுடைய மனம் என்கிற அற்புத ஆயுதம்.

● ஆர். கிரிதரன், கும்பகோணம்

? தலைவர் - செயல் தலைவர் - வேறு

* ... முடிவும்!



* மதிப்பும்...



* தகுதியும்...



* ... தோல்வியும்



* மாற்றமும் லாபமும்...

பாடு என்ன..?

! கோபித்துக் கொண்டு நிகழ்ச்சிகளை ரத்து செய்தால் தலைவர்; டெல்லிக்குக் காவடி தூக்கினால் செயல் தலைவர்!

● எம். மாரிமுத்து, மதுரை - 21

? ஒரு பேட்டியில், "பிரதமர் ஆவதற்குரிய தகுதிகள் ஜெய லலிதாவிடம் இருக்கின்றன" என்று இல. கணேசன் (பி.ஜே.பி.) கூறியது பற்றி..?

! வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பி.ஜே.பி. தேறாது என்று முடிவுக்கு வந்துவிட்டார் போல!

● ஆர். பிரகாஷ், பொன்மலை

? 'பாக். நான்காவது தோல்விக்குத் தயாராகிறது' என்று பிரதமர் பேசியிருக்கிறாரே?

! நேசக்கரம் என்று வலது கையை நீட்டுவதும் கூடவே இடது கையால் எதிராளியைக் குட்டுவதும் இரு தரப்பினருக்கும் சகஜமாகிவிட்டது.

● ப. காளிதாசன், வேட்டவலம்

? வாஜ்பாய் ஓய்வு பெறுவது பா.ஜ.க.வுக்கு நல்லதா?

! அத்வானிக்கு நல்லது.

● டி.எஸ்.டி. ராயன், நல்லத்துக்குடி

? டி.ஆர்., அ.தி.மு.க.வில்



* புகாரும் பண்பாடும்...

சேர வாய்ப்பு உள்ளதா?

! அங்கே போனால் இப்போதுபோல் மனம் விட்டுப் புலம்பக்கூட முடியாதே! பதவி கொடுத்தாலும் பறித்தாலும் அடுக்கு மொழியும் அடர்தாடியும் அடங்கியிருக்குமானால் வாய்ப்பு உண்டு.

● லெ. நா. சிவகுமார், சென்னை - 33

? மதிப்புக்குரிய நடிகை ரேவதிகூட விவாகரத்து செய்துள்ளாரே?

! கேள்வியே சரியில்லையே! 'மதிப்புக்குரியவர்கள் விவாகரத்து செய்யக் கூடாது; விவாகரத்து செய்பவர்கள் மதிப்புக்குரியவர்கள் அல்ல' என்பது போன்ற அர்த்தம் தொனிக்கிறதே..! நிற்க, இது ரேவதி - சுரேஷ் தனிப்பட்ட பிரச்னை. அதுல நாம எதுக்கு மூக்கை நுழைக்கணும்?

● கே. துரைசாமி, மங்களப்பட்டி

? மேகங்களில் பல ரகங்கள் உண்டாமே..?

! இருக்கலாம், இருக்கலாம்.. ஆனால், சென்னை வாசிகளுக்குத் தெரிந்ததெல்லாம் ஒரே ஒரு ரகம்தான். 'பெப்பே' ரகம்!

● கே.ஏ. ராஜேஸ்வரி, காட்டுக்காஞூர்

? அரசியலிலும் 'சுகமான சுமை' உள்ளதா?

! தேர்தல் நிதிக்காக கட்சிகள் உண்டியல் குலுக்க ஆரம்பித்துள்ள நேரத்தில் 'டாபிகலான' கேள்விதான்! சுமை, சுகமா இல்லையா என்பது நேர்மையான கலெக்‌ஷனா இல்லையா என்பதைப் பொறுத்திருக்கிறது!

● ஆர். செந்தில் முருகன், நல்லூர்

? கடன் வாங்கி வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பவர்களைப் பற்றி...?

! 'கடன் வாங்கித்தான் வாழ்க்கை நடத்தறேன்'னு நடிகர் ராமராஜன் சொன்னால் பிரச்னை தீர வாய்ப்பிருக்கு; நல்லூர் செந்தில் முருகனுக்கெல்லாம் அப்படி வசதி கிடைக்காது; ஜாக்கிரதை!

● க. விண்ணவன், கடலூர்

? கடவுள் பற்றிய ஓர் அபூர்வமான கதையை, ஹாலிவுட்டுக்கு அவசரமாகத் தெரியப்படுத்துவது எப்படி?

! இன்டர்நெட்டீஸ்வரனை வழிபட்டால் வரம் கிடைக்குமோ கிடைக்காதோ, பாதை புலப்படும்.

● க. தியாகராசன், குடந்தை

? வேதனையின் விளிம்புக்கே சென்ற கண்ணகி, மதுரையை எரித்ததுபோல், சீதை இலங்கையை எரிக்காதது ஏன்..?

! கண்ணகி மதுரையை எரித்தபோது கோவலன் கொலை செய்யப்பட்டுவிட்டான். அதனால் அவளே பழி தீர்த்துக் கொண்டாள். ஆனால் சீதையின் நிலைமை வேறு. "என்னுடைய கற்பு என்னும் ஜுவாலையில் இலங்கை முழுவதையும் பொசுக்கி விடுவேன். ஆனால் ஸ்ரீ ராமனின் வீரத்துக்கு அது அழகல்ல" என்று சுந்தர காண்டத்தில் சீதையே சொல்கிறாள். சிலம்பு - ஹீரோயின் சப்ஜெக்ட்; ராமாயணம் - ஹீரோ சப்ஜெக்ட்!

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
ஜே.டி. ஆனந்தன்,
2/67, டீ, சரஸ்வதி நகர்,
கைத்தறி நகர், மதுரை - 625 005.

* ரூ.50 பரிசு பெறுபவர் :
டி.சந்திரா சிவகுரு,
பச்சமால், மாயநேரி,
கருப்புக்கட்டி (அஞ்சல்) - 627 151



வயது முதிர்ந்த, பால் வற்றிய, நோயுற்ற பசுக்களைப் பாதுகாக்க, உங்கள் அன்பு காணிக்கையை கனிவுடன் மனமுவந்து தாரீர் ! பசுவைப் பாதுகாத்து பராமரிக்க பசுமடத்திற்கு கோதானம் செய்து புண்ணியம் பெறுவீர்.

- அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பிறந்த நாள், பண்டிகை நாட்கள் முன்னோர்கள் திதி நாட்கள் என தங்களுக்கு உகந்த நாட்களின் போது கோதானம் செய்து, பசுக்களின் பராமரிப்பிற்கு நன்கொடை அளித்து சமஸ்த தேவதா ஸ்வரூபியான ஸ்ரீகோமாதாவின் பூஜையால் சகல ஐஸ்வர்யங்களையும் பெறலாம்.
- நமது முன்னோர்களுக்கு உணவு அளிக்க விரும்பினால் பசுவிற்கு கொடுத்தால் போதும் அது நம் முன்னோர்களுக்கு சென்று அடையும்.
- ஆபிசார தோஷம் நீங்கி, முன்னோர்களின் அருளாசி பெற பசுக்களை போற்றி பரந்தாமனின் அருளைப்பெறுவோம்!
- முப்பத்து முக்கோடி தேவர்களும், அனைத்து புண்ணிய தீர்த்தங்களும் குடிகொண்டுள்ள பசுவிற்கு பூஜை செய்வதால் இறைவன் நமக்கு வேண்டிய வரங்களைத் தருவார்



பசுமடத்தில் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள்...

பசு மடத்தில் உள்ள பசுக்களில் ஒரு பசுவை பராமரிக்க

ஒரு நாளுக்கு............ரூ : 15.00
ஒரு வாரத்திற்கு........ரூ : 105.00
ஒரு மாதத்திற்கு........ரூ : 465.00
ஒரு வருடத்திற்கு.....ரூ : 5400.00

தேவைப்படுகிறது

தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ரூ.500- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஆறு மாதத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000- அனுப்பும் அன்பர்களுக்கு, ஆன்மீகம் மாத இதழ் ஒரு வருடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5400- அனுப்பும் அன்பர்களுக்கு, பசுவும் கன்றும் சேர்ந்த விக்ரகமும், "ஆன்மீகம் மாத இதழ்" ஆறு வருடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பசுவை பாதுகாக்கும் திருப்பணியில் பங்குகொள்ளும் அன்பர்கள் விரும்பும் நாட்களில் கோபூஜை செய்து பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். அன்றாடம் நடைபெறும் கோபூஜையில் அன்பர்கள் கலந்து கொள்ளலாம்.



தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque / D. D/ M. O. மூலமாக Shri Ghosala Seva Trust என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு.

பசு மடம்

பசுக்கள் பாதுகாப்பு இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P. O), சென்னை - 600 077.
TEL : 2495 9302. E-mail:siva siva @ vsnl.net



கோமாதா சேவை கோடி புண்ணியம் !

2

மெல்லினம்

அற்புதங்கள் எப்போதாவதுதான் நடக்கின்றன. மிக அழகாக, கவித்துவம் ததும்ப, உள்ளம் ஜில்லென்று சந்தோஷத்தை அப்பிக்கொண்டு நிற்கிற விதமாக.

குமார், அந்தப் பட்டை வீறும் வெயிலில், தி.நகர் நெரிசலில், மாலுவைக் கூட்டத்தில் ஒருத்தியாகச் சந்திக்க நேரும் என்று எதிர்பார்க்கவேயில்லை.

சனிக்கிழமை என்பதால் அவனது பத்திரிகை அலுவலகத்துக்கு அரைநாள் தான் செயல்பாடு. மதியத்துக்கு மேல், தேவன் இறங்கி வந்துவிட்டாலும் செய்தியாளர்களுக்கு அவை செய்தியாகாது. மறுநாள் செய்தித்தாளில், நேற்று மாலை மூன்று மணியளவில் தேவன் இறங்கி வந்ததைச் சென்னை மக்கள் கண்டு களித்தார்கள், என்று எழுதி விட்டால் போதும். யாராவது தன்னார்வப் புகைப்பட நிபுணர்கள் படம் எடுத்திருந்தால் நிச்சயம் கொண்டு வந்து கொடுப்பார்கள். முதல் பக்கத்தில் படமும், மூன்றாவது பக்கத்தில் செய்தியுமாக தேவனுக்கு ஒரு தினம் பொறுத்து செய்தி மோட்சம் கிடைக்கும்.

ஒரு தினசரிப் பத்திரிகையின் குணம் நிச்சயம் பொதுவாக இருக்க முடியாது. இருக்கக் கூடாது. ஆனால் அவனது பத்திரிகையின் முதலாளி மனத்தளவில் ஓர் அரசாங்கப் பிரஜையாக இருந்தார். துடைக்கும் விதமாகவே தூசிகள் இருந்தாலும் அவையும் இருக்கப் பணிக்கப்பட்டவை. அற்ப நிர்ப்பந்தங்களுக்கு அவர் ஒரு போதும் செவி சாய்த்ததில்லை. அவரது பாட்டனார் காலத்து வழக்கம். சனிக்கிழமை அரைநாள். இருந்துவிட்டுப் போகட்டுமே? மேலும் நாம் பணியாற்றும்பொழுது உண்டாகாத செய்திகள், செய்திகளே அல்ல. நாம் அளிப்பது மட்டுமே செய்தி. யாரோடும் ஒப்பிடாதீர்கள். அவரவர் பாதைகளின் இலகுவும் சிரமங்களும் அவரவருக்கே உரியன. சனிக்கிழமை முற்பகல் வரை உங்கள் நேர்மையையும், கடும் உழைப்பையும், சிறந்த செய்திகளையும் முதலீடு செய்யுங்கள். பிறகு ஓய்வெடுக்கப் போய் விடலாம். பயிற்சி நிலைப் பத்திரிகையாளர்கள் ஞாயிற்றுக் கிழமையை கவனித்துக் கொள்வார்கள். நீங்கள் மறுபடியும் புத்துணர்ச்சியுடன் திங்கள் வந்தால் போதும்.

ஹிந்து அல்லது இந்தியன் எக்ஸ்பிரஸில் பணியாற்ற விரும்பி, வாய்ப்புக் கிடைக்காதவர்கள் தான் பெரும்பாலும் அந்த தினசரியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதலாளிக்கும் ஆசிரியருக்கும் அது தெரியும். யாராவது ராஜிநாமா செய்தால் முதல் கேள்வியாக 'ஹிந்துவா?' என்று கேட்பதுதான் அங்கு வழக்கம்.

ரேஸ் டிப்ஸையும், ஷேர் உலகையும், வரி விளம்பரங்களையும் நம்பி இயங்கிக் கொண்டிருந்த மாலை தினசரி அது. எப்போதும் ஆளும் கட்சியின் ஆசீர்வாதம் இருக்கும் என்பதால், சில விளம்பர வருமானங்கள் பூமி உள்ள அளவும் அவர்களுக்குக் கிடைக்கும். மேலும், அவ்வப்போது சிறப்பு மலர்கள், சீரிய ஆட்சி குறித்த சிறப்பு அலசல்கள், சிறப்பு இணைப்புகள். செயல்பாடுகளில் சிறப்பு என்பதைக் காட்டிலும், செயல்பட்டுக் கொண்டிருப்பதே சிறப்பு என்னும் சித்தாந்தத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருந்த நாளிதழ் அது.

குமார் அங்கு குற்றச் செய்தியாளனாகச் சேர்ந்து ஆறு வருடங்கள் ஆகியிருந்தன. காவல் நிலையங்களில் அவனுக்கான செய்திகள் தயாராகும். இன்ஸ்பெக்டர்களும் கமிஷனர்களும் நட்புமுறையில் உடன் வந்து ஒரு காப்பி சாப்பிடக் கூடியவர்கள் என்பதால், பகுதியில் அவனுக்குக் குறைந்தபட்ச செல்வாக்கு என்பதாக ஒன்று உண்டாகியிருந்தது.

"சம்பளம் இன்னும் இருக்கலாம்" என்று எப்போதும் மாலு சொல்லுவான்.

நிருபர்களின் சம்பளம் பொதுவாக மனைவிகள் சிலாகிக்கும்படி எப்போதும் இருந்ததில்லை. திறமை மிக்க குடும்பத்

பா. ராகவன்



தலைவியாக இருந்துவிடும் பட்சத்தில் அது ஒரு பொருட்டில்லைதான். ஆயினும் இரண்டு சம்பளம் என்பது காலத்தின் கட்டாயமாகி விட்டது.

மாலு, தனியார் அழகு சாதன நிறுவனம் ஒன்றில் அக்கவுண்டண்டாகப் போய்க் கொண்டிருந்தாள். வருகிற சம்பளத்தில் தபால் மூலம் மேல் படிப்புக்குக் கொஞ்சம் நிறுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. சி.ஏ. கஷ்டம் என்றாலும், ஐ.சி.டபிள்யு. ஏவாவது முடித்து விட வேண்டும்.

ஒளிமயமான எதிர்காலம் குறித்து அவ்வளவாக நம்பிக்கை இல்லாவிட்டாலும், கனவுகள் இன்னும் வெளிச்சத்துடன் தான் இருக்கின்றன. என்றாவது ஒரு நாள் நினைத்து மகிழும்படி வங்கிக் கணக்கில் ஒரு பெரும் தொகை சேராமல் போகாது. நீண்ட நாள் கனவான தங்கத்தில் கொலுசு, அப்போது சாத்தியமாகிவிடும்.

"ஜக்கு படிச்சி, சம்பாதிச்சாத்தான் உண்டு போல இருக்கு" என்று மாலு சொன்னாள்.

குமார் பதிலேதும் சொல்லாமல் தி.நகரின்

கும்பலைத் துருவிக் கொண்டு முன்னேறும் முனைப்புடனும், அவனைத் தவறவிடக் கூடாத கவனத்துடனும் நடந்து கொண்டிருந்தான்.

"நீ எங்க திடீர்னு இந்தப் பக்கம் வந்தே?"

"அரை நாள் லீவ் போட்டேன். சரியான தலை வலி. அப்புறம், கொஞ்சம் பர்ச்சேஸ் இருக்கு. ஒரு வாரத்துக்குக் காய்கறி வாங்கணும். மஸ்தான்ல ரெண்டு ப்ளவுஸ் தைக்கக் கொடுத்திருந்தேன். அதை வாங்கணும். ஜக்கு பார்க்கர் பேனா கேட்டான். அடுத்த வாரம் அவனுக்குப் பிறந்த நாள் வருது..."

"ஆறாங்கிளாஸ் பையன் பார்க்கர் கேக்கறான்!"

குமாருக்கு ஆச்சர்யமாகவும் பெருமிதமாகவும் இருந்தது. தன் கவனம் தாண்டித் தன் மகன் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறான் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான். ஆயினும் பல சமயங்களில் ஜக்கு கேட்டதாக மாலு சொல்லும் சில கேள்விகள், அவனை அதிர்ச்சியும் வியப்பும் ஒருங்கே அடையச் செய்யக் கூடியவையாகவே இருந்தன.

குழந்தை தெரிந்துகொள்ள விரும்பும் ஒரு விஷயத்தை எப்படித் தெரிந்து கொள்ளும் விதத்தில் தெரியப்படுத்துவது? அதுதான் பெரும்பாலும் தெரியவில்லை. விளக்கிச் சொல்வதில் ஒரு தவறும் இருப்பதாக அவர்கள் இரண்டு பேருமே நினைக்கவில்லை.

ஓய்வு பெற்ற குமாரின் அப்பாவுக்கு ஜக்குவின் உலகத்தில் நுழைந்து விளையாடப் பெரிதும் ஆசை இருந்தது. அவரது மனைவியும் அதற்காகவே ஏங்கிக் கொண்டிருந்தாள்.

பேரனுக்கு வயதுக்கேற்பச் சொல்வதற்கென்று ஏராளமான கதைகளை அவர்கள் உருவாக்கி வைத்திருந்தார்கள். மேலும் உட்கார்ந்த இடத்தில் விளையாடக் கூடிய சில பல ஆட்டங்கள், கதைப் பாடல்கள், மிருதங்க கிளாஸ், சுலோகங்கள், தன் காலத்தைய நிகழ்வுகள். கோவணத்திலிருந்து வேட்டிக்கும் வேட்டியிலிருந்து பேண்ட்டுக்குமாக மாறிய காலத்தின் பரிணாம வளர்ச்சி. மேலும் பாடங்கள், அதன் அடர்த்தியும் நீட்சியும். அந்தக் காலத்து பி.யு.சி. கணக்கு, இப்போதைய எட்டாங் கிளாஸ் கணக்கை விடச் சுலபம் என்கிற வியப்பு கலந்த உண்மைகள். உலகமும் நாடுகளும், நதிகளும் நாகரிகங்களும்...

ஜக்குவுக்கு தாத்தா, பாட்டியுடன் நேரம் செலவிடுவதில் விருப்பம் தான். ஆனால் அவனது விருப்பங்கள் பெரும்பாலும் அவர்களுடன் ஒத்துப் போவதில்லை.

எல்லாவற்றிலும், எதைத் தொட்டாலும் அவனுக்குக் கேள்விகள் இருக்கின்றன. தேசங்கள் குறித்து ஒரு முறை தாத்தா சொல்லிக் கொண்டிருந்தார். அருமையான விஷயங்கள். ஆசியாவில் எத்தனை தேசங்கள்! ஆனால் ஆஸ்திரேலியா என்னுமொரு கண்டம் ஒரே தேசமாம். ஒரு சின்ன ஊரான ரோம், ஒரு தனி தேசம் என்கிறார் தாத்தா. மேப்பில் புள்ளியாக இருக்கிற சில இடமும் நாடு, பெரிய கோன் ஐஸ் மாதிரி இருக்கிற தென் அமெரிக்காவில் பதினாறு நாடுகள். அதே வட அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் ஒரே நாடு. எந்த ஊர் நியாயம் இது?

அது சரி, தேசத்தின் எல்லை என்பதை எப்படி வரையறுக்கிறார்கள்? கோடு போட்டா? கயிறு கட்டியா? காம்பவுண்ட் சுவர் எழுப்பியா? எனில், அவை ஏன் ஒரே சீராக, நேராக இல்லை? ஏன் வளைந்து வளைந்து இருக்கின்றன, மேப்பில்?



"தாத்தாக்கு முட்டி வலிக்கிறது. போய் அந்த வாதவேங்கைத் தைலம் எடுத்துண்டு வா" என்று அனுப்பினார் குமாரின் அப்பா.

ஜக்குவுக்குத் தெரியும். பதில் சொல்ல முடியாத போதெல்லாம் தாத்தாவுக்கு முட்டிவலி வந்துவிடுகிறது. தைலம் கொண்டு வந்து தந்தவுடன், "போ, போய் விளையாடு" என்று சொல்லிவிடுவார்.

சின்ன வயதில் பள்ளியில் தாத்தா ஒழுங்காகப் படித்திருக்கமாட்டார் என்று ஜக்கு நினைத்துக் கொள்வான். ஆனால் எப்படியோ ஒரு அரசாங்க உத்தியோகமும் பார்த்து, ஓய்வும் பெற்றுவிட்டார். பென்ஷன் வருகிறது. அப்பாவும் அம்மாவும் போடுகிற பட்ஜெட்டில் குறைகிற தொகையை தாத்தாவின் பென்ஷன்தான் தீர்த்து வைக்கிறது. ஜக்குவின் அவ்வப்போதைய ஆராய்ச்சிகளுக்கு சாக்பீஸ், ரெட் இங்க், ட்வைன் நூல், பிளாஸ்டிக் பந்துகள், பிளாஸ்டிக் டப்பாக்கள் இவையும் தாத்தாவால் தான் கிடைக்கின்றன.


"நல்லா படிக்கணும்டா ஜக்கு. பெரிய கவர்மெண்டு ஆபீசரா வரணும். அது தான் காலத்துக்கும் உபயோகம். உங்கப்பனை இஞ்சினியரிங் படிக்க வெச்சேன். எங்க படிச்சான்? பத்திரிகை, பத்திரிகைன்னு

அலைஞ்சான். இப்பப்பாரு, மாசம் ஏழாயிரம் கூட வரதில்லை."

"இஞ்சியனீரிங் படிக்கற எல்லாருமே ஏழாயிரத்துக்கு மேல சம்பாதிப்பாளா தாத்தா?" என்று கேட்டான் ஜக்கு.

"ஆமா? பின்னே?"

"அப்ப மத்த எல்லா படிப்பையும் நிறுத்திட்டு அதை மட்டுமே ஏன் கவர்மெண்ட் வெச்சிக்கக் கூடாது? இப்ப நான் எதுக்கு கொன்றை வேந்தன், அவ்வையார்லேருந்து



- நாமக்கல் பாலு

எல்லாம் படிக்கணும்?"

தாத்தாவுக்கு மீண்டும் முட்டி வலித்தது.

மாலு சிரித்தாள். "உங்கப்பா பாவம். அவன் கேக்கற பல கேள்விகளுக்கு அவரால பதில் சொல்ல முடியறதில்லை."

"நம்மாலயும்தான்" என்றான் குமார்.

மணி பிற்பகல் இரண்டரையாகியிருந்தது.

"சாப்டியா?" என்று குமார் கேட்டான்.

"ஆச்சு. நீங்க?"

"ம்... ரெண்டு ரொட்டி சாப்டேன், ஆபீஸ் கேன்டீன்ல... வரியா, ஒரு சினிமாவுக்குப் போகலாம்?"

அவள் சட்டென்று அவனை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள். எத்தனை வருடங்கள்! ஜக்கு பிறப்பதற்கு முன் அவர்கள் வாரம் ஒரு படத்துக்குப் போவது வழக்கம்.

பிறகு அந்த வழக்கம் அனிச்சையாக நின்று போனது. வீட்டில் டி.வி. வந்ததும் திரைப்படங்களுக்காக வெளியே போவதென்னும் வழக்கமே விட்டொழிந்தது.

குழந்தையுடன் எப்போதாவது கடற்கரை, கபாலீசுவரர் கோயில், உயிரியல் பூங்கா என்று போவதுண்டு. அத்தருணங்களில் பெரும்பாலும் ஜக்குவின் குதூகலமே அனுபவிக்க வேண்டிய பொருளாக இருக்கும். சொந்த சந்தோஷம் என்பது நிச்சயம் குழந்தைக்கு அப்பாலும் இருக்கத்தான் வேண்டும் என்று மாலுவுக்குத் தோன்றியது. பரீட்சித்துப் பார்த்துவிடலாமே?

"ஜக்கு எப்படியும் நாலு மணிக்குத் தான் வருவான்."

"வந்தாலும் அம்மா இருக்கா. காப்பி குடுத்து விளையாட அனுப்பிச்சுடுவா."

"நாம சினிமா போய் எத்தனை வருஷம் ஆறது!"

"இன்னிக்குப் போவோம்."

அவன் தன் பர்ஸை எடுத்துப் பார்த்துக் கொண்டான். "சினிமா போறோங்கறதுதான் முக்கியம். எந்தப் படம், எந்த தியேட்டர்ங்கறது முக்கியமில்லை. ரைட்?"

அவள் புன்னகை செய்தாள்.

கிருஷ்ணவேணியில் பழைய சிவாஜி படம் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. ரெண்டு பேரும் காற்றாடிய பால்கனியில் சந்தோஷமாகப் போய் உட்கார்ந்தார்கள். அரை மணி ஓடியதும் மாலு உறங்கிவிட்டாள். குமார், திங்கள் கிழமை பி த்ரீ ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டரிடம் பேசவேண்டிய விஷயங்கள் குறித்துச் சிந்திக்கத் தொடங்கினான்.

டைம்ஸ் ஆஃப் இந்தியா சென்னைப் பதிப்பு கொண்டு வருவதாக ஒரு வதந்தி வந்து கொண்டிருந்தது. அதில் தனக்கு வாய்ப்பு இருக்குமா, யாரைப் போய்ப் பார்க்கலாம் என்று யோசித்தான். தனக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள் அனைவரையும் ஒரு முறை மனத்துக்குள் கொண்டு வந்து நிறுத்தி, யார் உதவக் கூடும் என்று எண்ணிப் பார்த்தான்.

இடைவேளையில் இருவரும் வெளியே வந்து காப்பி சாப்பிட்டார்கள். ஒரு பாப்கார்ன் பாக்கெட் வாங்கிப் பகிர்ந்து கொண்டார்கள். படம் முடிய இன்னும் அரை மணி இருக்கும்போதே மாலு வீட்டுக்குப் போகலாம் என்று சொன்னாள்.

"பாவம் குழந்தை தனியா இருக்கும்."

"நானும் அதான் நினைச்சேன். சரி, வா" என்று எழுந்தார்கள்.

ரங்கநாதன் தெருவரை நடந்து ஒரு வாரத்துக்கான காய்கறிகளை வாங்கிக் கொண்டார்கள். ரயிலில் நின்றபடி பயணம் செய்து வீட்டை அடைந்தபோதுதான் ஜக்குவுக்கு ஏதாவது வாங்கி வந்திருக்கலாம் என்று தோன்றியது.

"அடடா, பார்க்கர் பேனாவை மறந்துட்டேனே?" என்று வருத்தப்பட்டாள் மாலு.

(தொடரும்)



• விடாலியுடன் லூயி

குத்து மதிப்பாக ஒரு தீர்ப்பு!



• லூயி

சென்ற முறை உலக சாம்பியன் என்று பட்டம் பெற்றவர் இந்த முறையும் அந்தப் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டால் அவருக்கு என்ன கிடைக்கும்? புகழ்? பாராட்டு? இல்லை. "சரியான மச்சம் அந்த ஆளுக்கு. ஏதோ அதிர்ஷ்டம். சாம்பியனாயிட்டார்" என்பது போன்ற ஏளனமான விமர்சனங்களுக்குதான் உள்ளாகியிருக்கிறார் பிரபல குத்துச்சண்டை வீரர் லெனாக்ஸ் லூயி.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் கடந்த 45 வருடங்களாக அப்படி ஒரு விறுவிறுப்பான குத்துச்சண்டைப் போட்டியைப் பார்த்ததில்லை. இரு வாரங்களுக்கு முன் நடைபெற்ற இந்தப் போட்டியில், லெனாக்ஸ் லூயியும் விடாலி க்ளிஷ்கோவும் மோதினார்கள். முதல் சுற்று, இரண்டாவது சுற்று இரண்டிலுமே முன்னணியில் இருந்தவர் விடாலிதான். மூன்றாவது சுற்றிலும் அவரே முன்னணியை வகித்தார் (58 - 56 என்று காட்டியது ஸ்கோர்போர்ட்)

அந்த சமயத்தில் டாக்டர் பால் வேலஸ் என்பவர் போட்டியின் நடுவரை அழைத்தார். காதுகளில் ஏதோ கிசுகிசுத்தார். நடுவர் விடாலியை உற்றுப் பார்த்தார். அவரது இடது கண்ணிற்கு மேல் ஒரு பெரும் காயம் ஏற்பட்டு (லூயியின் உபயம் தான்) ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. சில கணங்கள் யோசித்துவிட்டு போட்டி ரத்தாகி விட்டதாக அறிவித்தார் நடுவர். சென்ற முறை மைக் டைசனை வென்று சாம்பியன் பட்டத்தைப் பெற்றவர் லெனாக்ஸ் லூயி. போட்டியின் விதிகளின்படி, இறுதிச் சுற்று வெற்றி தோல்வியின்றி இது போல் முடிவடைந்தால், சென்றமுறை சாம்பியனே இம்முறையும் அந்த விருதைத் தக்க வைத்துக் கொண்டதாகக் கருதப்படும். அதன்படி மீண்டும் ஹெவி வெயிட் பிரிவில் உலக சாம்பியனாக அறிவிக்கப்பட்டார் லெனாக்ஸ் லூயி.

உக்ரைனைச் சேர்ந்த விடாலி கொதித்துப் போயிருக்கிறார். "நடுவரின் தீர்ப்பால் என் வருங்காலமே பாழாகிவிட்டது. என்றாலும் அடுத்தமுறை நிச்சயம் உலக சாம்பியனாவேன். தவிர, இப்போதே மக்களின் தீர்ப்புப்படி நான்தான் உலக சாம்பியன்" என்கிறார்.

ஆனால் லெனாக்ஸ் லூயி வேறுவிதமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். "எவ்வளவோ தடவை பின்பாதியில் சிறப்பாக விளையாடியே வெற்றிக்கனியைத் தட்டியவன் நான். நடுவர், பந்தயத்தை ரத்து செய்தது, விடாலியின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறது" என்று கர்ஜிக்கிறார்.

தீவிர குத்துச்சண்டை ரசிகர்களுக்கு உள்ள ஆதங்கம் இதுதான்: "ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரு மிகச் சிறந்த பாக்ஸிங் சூப்பர் ஸ்டார் இருந்து கொண்டே இருப்பார். முகமது அலி, ஜார்ஜ் ஃபோர்மேன், மைக் டைசன் இப்படி. ஓரளவு இந்த வரிசையில் லெனாக்ஸ் லூயியைச் சேர்க்கலாம். அவரும் ஓய்வு பெற்றுவிட்டால் சூப்பர் ஸ்டார்களின் ராஜாங்கம் முடிவடைந்துவிடும்.

- ஜி.எஸ்.எஸ்.



இன்னமும்...

ஜனனி


கொமராகியும் பயமின்றி
பேச்சியும் தங்கமும்
மந்திதோப்பு மலைக்கு
போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்
இன்னமும்...

தூக்கம் கலையாமல்
பித்தளைத் தூக்கு வாளிக் கஞ்சியோடு
கிராமத்துப் பிள்ளைகள்
தீப்பெட்டி ஆபீசுக்குப்
போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்
இன்னமும்...

ஊர்க்கட்டு மீறி
குடித்துவிட்டு கலாட்டா செய்த
புருஷனை ஜாமீனில் மீட்க
தாலியை அடகு வைக்கும்
மனைவிமார்கள்
இருக்கத்தான் செய்கிறார்கள்
இன்னமும்...

பெருநகர
ஏ.சி. அறை
சாஃப்ட்வேர் கம்பெனியில்
கைநிறைய சம்பாதித்தாலும்
எங்கோ இருந்து ஒலிக்கும்
கும்மியும் குலவையும்
இழுத்துத்தான் போகிறது
இன்னமும் ஊருக்கு...

வரதட்சிணைத் தடைச் சட்டத்தின் மறுபுறம்!




சிவகைலாஷ் அணியும் 'டை'யின் விலை ஐந்நூறுக்குக் குறையாது. அலுவலகத்தில் மிஸ்டர் 'க்ளீன் ஷேவ்' என்ற பட்டம் கூட உண்டு. குளியல் சோப் மற்றும் பற்பசை கம்பெனியில் சாதாரண விற்பனைப் பிரதிநிதியாக வாழ்க்கையைத் தொடங்கியவர். சேர்ந்த ஐந்தே வருடங்களில் 'மார்கெட்டிங் சூபர்வைசர்', மாதம் இருபதாயிரம் ஊதியம். கம்பெனிக் கார் என உயர்ந்தவர். போட்டி நிறுவனங்கள் எப்படியாவது இவரை அமுக்கிப் போட்டுவிட முயற்சி செய்தன. அப்பேர்ப்பட்ட கைலாஷ் இன்று முகம் நிறைய தாடியோடு, மாதம் மூவாயிரம் ரூபாய் சம்பளத்திற்கு டேட்டா என்ட்ரி ஆபரேட்டராக வாழ்க்கையைப் முடக்கிக் கொண்டிருக்கிறார். "நம்ம கைலாஷ்தானா இப்படி ஆகிப் போயிட்டான்!" என்று வருத்தப்பட நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆனால் கைலாஷ் தனது வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ளப் பல வருடங்கள் ஆகலாம்! அப்படி என்னதான் நிகழ்ந்தது அவருக்கு?

திருமணத்திற்கு முன்பு வேறொரு பெண்ணுடன் இருந்த தகாத உறவு, மீண்டும் தொடர்வதைக் கண்டுபிடித்துவிட்ட அவரது மனைவி, விவாகரத்துக் கோரிய வழக்குத் தொடுத்ததோடு நிறுத்தியிருந்தால் பரவாயில்லை. வரதட்சிணைக்காக துன்புறுத்துதல் என்று சொல்லி, ஐ.பி.சி. பிரிவு 498-ஏ-யின் கீழ் ஒரு கிரிமினல் புகாரையும் பதிவு செய்ய, கைலாஷுக்கு ஜாமீன் கிடைக்கவே ஒன்றரை ஆண்டுகளானது. அதன்பிறகு கோர்ட்டுக்கு அவர் மட்டும் நடந்திருந்தால் பரவாயில்லை. அவரது பெற்றோர், மும்பையில் பணியாற்றிக் கொண்டிருந்த அவரது தம்பியின் மீதும் கூட சட்டம் பாய்ந்ததில், குடும்பமே கைலாஷை ஒதுக்கி வைத்துவிட்டது. இப்போது முன்னாள் கணவனுக்காக வரதட்சிணைத் துன்புறுத்தல் வழக்கை வாபஸ் பெற மனைவி முன் வந்தபோது, அதைச் சட்டம் அனுமதிக்கவில்லை! 1983ல் அறிமுகப்படுத்தப்பட்டது அந்தச் சட்டம். தங்களுக்குச் சாதகமாக அதை வளைக்க நினைக்கிறவர்களுக்கு வசதியானதாகவே இருக்கிறது.

'வடக்கே நிஷாவையும், தெற்கே வித்யாவையும் வரதட்சிணை எதிர்ப்பு வீராங்கனைகளாகச் சித்திரித்து ஒருவழியாக மீடியா ஓய்ந்துவிட்டது. ஆனால் வரதட்சிணை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடுக்கிறவர்களுக்கும், சிக்கிக் கொள்கிறவர்களுக்கும் வாழ்க்கை எப்படி திசைமாறிப் போய்விடுகிறது என்பது பற்றிய படிப்பினைகளை, மீடியா வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதில்லை. பாதிக்கப்பட்டவர்களின் உண்மைக் கதைகளைச் சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும்போது, அவர்களது முகங்களை வெளிச்சமிட்டுக் காட்டி, பரபரப்பாக்காமல் வெளியிட்டாலே பாதி வரதட்சிணைக் கொடுமைகள் குறையும்'' என்கிறார், சென்னை உயர் நீதிமன்றத்தில் திருமணம் மற்றும் வரதட்சிணை தொடர்பான வழக்குகளில் அதிக கவனம் செலுத்திவரும் வழக்கறிஞர் ஏ. நடராஜன். நீங்கள் படித்த கைலாஷின் கதையும் கூட நடராஜன் சொன்னதுதான். (சம்பந்தப்பட்டவர்களின் ஊர், பெயர் மாற்றப்பட்டுள்ளது). இன்னும் அவரிடம் நிறையவே உண்மைக் கதைகள் இருக்கின்றன. மேலும், அவர் சில மாறுபட்ட வரதட்சிணை வழக்குகளைப் பற்றிச் சொல்லும் முன், 'வரதட்சிணை ஒழிய மாப்பிள்ளை வீட்டார் மட்டும் மனம் வைத்





* நடராஜன்

தால் போதாது, பெண் வீட்டார் கொடுக்க முன் வருவதை நிறுத்த வேண்டும்' என்று கடுமையாகச் சாடுகிறார்.

"வரதட்சிணை கொடுக்கவில்லையென்றால் எங்கள் பெண்ணை யார் கட்டிக் கொண்டு போவார்கள், என்று பயந்து நடுங்குகிறவர்களாக நமது இந்தியப் பெற்றோர் இருக்கிறார்கள். பெண்ணைப் பெற்று படிக்க வைத்து, வேலையும் வாங்கிக் கொடுத்து தன்னம்பிக்கை தருகிறவர்கள், வரதட்சிணை கொடுக்க மாட்டோம் என்று மறுக்கத் தயங்குகிறார்கள். அதைவிடக் கொடுமை, காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் செய்து கொள்கிற திருமணங்களையும்கூட வரதட்சிணையை விட்டு வைப்பதில்லை. இப்படி வரதட்சிணையை ஒரு ஜாக்பாட் போல உருவகப்படுத்திவிட்டதால், வரதட்சிணை ஒழிப்பு சட்டம் என்ற ஒன்று இருக்கிறது, அதன்கீழ் கடுமையான தண்டனைகள் உண்டு என்பதுபற்றி, வாங்குகிறவர், கொடுக்கிறவர், வற்புறுத்துகிறவர்கள் யாருக்குமே பயம் இல்லாமல் போய் விட்டது" எனும் நடராஜன் வரதட்சிணை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் தொடுக்கப்படும் வழக்குகளில் எது மாதிரியான தண்டனைகள் தரப்படுகின்றன என்பதைப் பற்றி சுருக்கமாகச் சொல்கிறார்:

"வரதட்சிணை கொடுத்தல், வாங்குதல், அதற்கு உடந்தையாக இருத்தல் ஆகிய குற்றங்களுக்கு ஐந்தாண்டுச் சிறையும் பதினைந்தாயிரம் அபராதமும் உண்டு. வரதட்சிணை கோரினால் மட்டும் இரண்டாண்டுச் சிறை. மணமான ஏழு வருடத்திற்குள் வரதட்சிணை வாங்கி வரச் சொல்லி உடல்ரீதியாகவோ, மன ரீதியாவோ துன்புறுத்தினால் மூன்றாண்டுச் சிறை. இதில் பிரிவு 498-ஏ-யின் கீழ், எது மன ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகிறதோ, அந்தச் செயலுக்குத் தண்டனை உண்டு. ஆனால் மன ரீதியான பாதிப்பு எது என்பதை நிர்ணயிக்க முடியாததால், இடைநிலை ஆசிரியர் பாஸ்கரின் இப்போதைய நிலையைப் பாருங்கள்:

"பேசியபடி எஞ்சிய வரதட்சிணைத் தொகையையும், கால தாமதமானதால் அதற்கான வட்டியையும் சேர்த்து, உனது வீட்டார் தரும் வரை நமக்குள் தாம்பத்திய உறவு கிடையாது" என்று இரண்டாண்டுக் காலம் தனித்தே உறங்கி வந்த பாஸ்கரால் மனைவிக்கு மன நல பாதிப்பு ஏற்பட்டுவிட்டது. பெண்ணின் பெற்றோர் இதை, சிகிச்சை அளித்த டாக்டரின் உதவியோடு நிறுவியதில், பாஸ்கருக்கு மூன்றாண்டுச் சிறையும் உறுதியானது. அதோடு அரசு வேலை போனது மட்டுமில்லை, சமாதானம் பேசி வாழ நினைத்த அவருக்குச் சட்டம் வழி விடவில்லை. சிறையிலிருந்து வெளியே வந்தும் அவரால் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை. மனைவிக்கு மனநலம் பாதிக்கப்பட, தாம்பத்தியம் மறுக்கப் பட்டதே காரணம் என்பதைச் சட்டம் ஏற்றுக் கொண்டது. திருமணமாக வேண்டிய அவரது தங்கையின் வாழ்க்கையும் இப்போது கேள்விக் குறியாகி நிற்கிறது.

"ஒரு கிரிமினல் குற்றத்தைச் சமூகம் எப்படிப் பார்க்கிறதோ, அப்படித்தான் வரதட்சிணைக் குற்றத்தையும் பார்க்கிறது. வரதட்சிணை வழக்குகளில் குற்றம் சாட்டப்படுகிறவர்களின் சமூக அந்தஸ்தின் மீது முதல் அடி விழுகிறது. பணி புரியும் இடத்தில் அவரது செல்வாக்கு சரிந்து, வீட்டுக்கு அனுப்பப் படுகிறார் அல்லது பதவி விலகும்படி கோரப்படுகிறார். இன்று தமிழகத்தில் மட்டும் இருபதாயிரம் வரதட்சிணை வழக்குகளில் இரண்டு லட்சம் பேர் சிக்கி, வாழ்க்கையே நசுங்கிக் கிடக்கிறார்கள்" என்று சொல்லும் இவர், வரதட்சிணை ஒழிப்புச் சட்டம் பற்றிய பாடத்தை உயர்நிலைப் பள்ளியிலேயே கட்டாய சமூகக் கல்வியாகக் கற்பிக்க வேண்டும் என்கிறார். பாடத்தில் கட்டாயம் படிப்பினையான வழக்குகளைப் பற்றிய 'கேஸ் ஸ்டடி'யும் இடம் பெறச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.

- ஜெய்

படம் : ராஜன்

“செக்கடிப் பள்ளிக்கூட மைதானத்தில் இன்று மாலை நான்கு மணியளவில் மயிர்க்கூச்செரியும் வித்தைகள், ரிக்கார்டு டான்ஸ் நிகழ்ச்சி, சைக்கிள் சாகச நிகழ்ச்சி நடைபெறுகிறது. நுழைவுக் கட்டணம் ஒரு ரூபாய். மூன்று நாள் மட்டுமே உங்கள் ஊரில் நடைபெற இருப்பதால், தவறாமல் அனைவரும் கண்டு களிக்க வேண்டுகிறோம்.”

- மைக்கில் இப்படி அறிவிப்பு ரெடியானதுமே கருத்தப்பிள்ளையூர் அல்லோலகல்லோலப்பட்டது.

கருவை முட்களும் பலருக்கான எருக்குழிகளுமாகக் காட்சியளித்த செக்கடிப் பள்ளிக்கூட மைதானம் துப்புரவாக்கப்பட்டிருந்தது. வட்டவடிவமான அந்த மைதானத்தைச் சுற்றித் துணிகளாலான மறைப்பு ரெடியாகியிருந்தது. உள்ளே சின்ன மேடை.

குருவிக்கூடு ஸ்டைலில் தலைமுடியை வைத்துக் கொண்டிருந்த ஓர் இளைஞனும், அவனோடு இரண்டு இளம் பெண்கள் மற்றும் இரண்டு நடுத்தர வயதுக்காரர்களும், கீழே தாறுமாறுமாகக் கிடக்கும் கற்களைப் பொறுக்குவது, மறைப்புகளில் ஊக்கு குத்துவது என்று சுறுசுறுப்பாக இருந்தனர். கருங்கற்களாகக் காட்சியளித்த அந்தத் தரை இப்போது சுத்தமாக்கப்பட்டிருந்தது.

மூக்காண்டி டீக்கடையில் கதை பேசிக் கொண்டிருந்த பண்டாரத்துக்குத்தான் இருப்புக் கொள்ளவில்லை. வருடத்துக்கொருமுறை வடப் பக்க மாவட்டங்களிலிருந்து இப்படி ஊர் ஊராக வந்து நிகழ்ச்சி நடத்துவது சகஜம்தான். அவ்வாறு வருபவர்களிடம் எதையாவது கதையளந்து அவர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டு ஓசியில் நிகழ்ச்சியைப் பார்ப்பது பண்டாரத்துக்கு வழக்கம்.

வித்தை



அதன் பொருட்டு செக்கடிக்குச் செல்ல எழுந்தான். கடைக்குள்ளிருந்த தம்புசாமி, “என்ன பண்டாரம்ண்ணே, உனக்கு வேண்டியவங்க வந்திருக்காங்க, போலயா?” என்றான்.

“வேண்டியவங்களா?”

“ஆமா. நீதான் இப்படி வாரவங்ககிட்ட பேசி அவங்களைப் பத்தி எங்ககிட்ட கதை சொல்லுவே. இன்னைக்கு இன்னும் போலயா?” என்றான்.

“கால்ல முள்ளு குத்தி சரியான வலி. ரெண்டு நாளா, வீட்டை விட்டு வெளிய வரலை. அதான் ஊருக்

குள்ள என்ன நடக்குன்னே தெரியல. இப்பப் போய் விசாரிச்சிருதேன்" என்று கிளம்பிய பண்டாரத்திடம் "நீ என்னத்த போயி விசாரிக்கப் போற? எல்லாத்தையும் நான் கேட்டுட்டேன். உட்காரு" என்றான் கொம்பையா.

"எந்த ஊராம்?"

டீக்கடையில் இருந்தவர்களது காதுகள் கூர்மையாயின.

"செவகங்கைப் பக்கத்துல என்னமோ ஊராம். ஊர் ஊரா இப்படி நிகழ்ச்சி பண்ணிட்டு வாராங்க."

"சரி. செவப்பா கெண்டக் கால் வர முடி வளத்துட்டு இருக்காளே... அவ யாரு பொண்டாட்டியாம்?"

பண்டாரம்தான் கேட்டது.

"வாரியல எடுத்து அடி. ஏல, வந்தவனுவகிட்ட ஊரத்தான் கேட்க முடியும்; இது யாரு பொண்டாட்டி, யாருக்கு வப்பாட்டின்னா கேட்க முடியும்? கேக்காம் பாரு, உனக்கெல்லாம் கால்ல முள் குத்தி தலைக்கு வெளிய வந்தாலும் கொழுப்பு இறங்காதுன்னுதான் நெனக்கேன்."

"இப்ப என்னடே கேட்டுட்டேன். அவ யாருன்னு கேட்டதுல என்ன குத்தம்?"

"அது சரிதான். நேரா அவட்



டயே போயி கேளேன். உன் வீட்டுக் காரிட்ட சொன்னாத்தான் நீ சரிப்படுவே''


"அவள ஏம்ல வம்புக்கு இழுக்கே, கூறு கெட்டவனே!''

''ஆமா... பின்ன இங்க இருக்கவன் யாராவது அவனைப் பத்திக் கேட்டானா? நீதான் கேக்க. அப்பம் உனக்கு கொழுப்பு கொஞ்சமா இருக்கு?''

"யப்பப்பா... ஒரு வார்த்தைய சொல்ல விட மாட்டங்கியடே! என்னமோ ரொம்ப யோக்கியனுவ மாதிரி, குச்சூட்டு சொவத்த ஏறிக் குதிச்சது தெரியாது பாரு."

"யே... பாவி. ஜென்மத்துக்கும் இத மறக்க மாட்ட போலுக்கு. உங்கிட்ட நான் பேசலப்பா. ஆள விடு!''

"ஆங்... தனக்குன்னா மட்டும் பொத்து தலா... அது மாதிரிதாம்ல அடுத்த வனுக்கும் இருக்கும்."



- நாமக்கல் பாலு

அறிவிக்கப்பட்டிருந்த மாலை நான்கு மணியளவில் கூட்டம் திரண்டிருந்தது. வாசல் மாதிரி தயார் செய்யப்பட்ட இடத்தில் அந்தச் சிவப்பான பெண் நின்று கொண்டிருந்தாள். எண்கள் எழுதப்பட்ட சிகரெட் அட்டையைக் கொடுத்து (டிக்கெட்) ஒரு ரூபாய் வசூலித்து விட்டு பார்வையாளர்களை உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தாள். 'நான் செத்துப் பிழைச்சவன்டா' பாடல் குழாயில் ஒலித்துக்கொண்டிருந்தது.

ஓரளவுக்கு லாபகரமான வசூல் வந்ததும், அந்தச் சிவப்பானவள் உள்ளேயிருந்த குருவிக்கூடு பார்ட்டிக்குச் சைகையால் சிக்னல் கொடுத்தாள்.

ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம். சில இளவட்டங்கள் தங்கள் நாயகிகளிடம், கூட்டத்தின் ஓரமாக நின்றுகொண்டு சைகைகளில் ஏதேதோ காதல் சொல்லிக் கொண்டிருந்தனர்.

பண்டாரத்தின் மகள் மாரியம்மாளைக் காதலிக்கும் பொருட்டு, தெற்குத் தெரு அருணாச்சலம், கூட்டத்தைச் சாக்காக வைத்து அவள் பின்னால் அமர்ந்து அவளையே பார்ப்பதும், கேலி பேசுவதுமாக இருந்தான். அடிக்கடி அவளும் அவனைத் திரும்பிப் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தாள்.

குருவிக்கூடு பார்ட்டி சைக்கிளை காலாலும் முன்பக்க டயரை மட்டும் கைகளால் பிடித்துக் கொண்டும், சீட்டில் படுத்தவாறுமாக ஓட்டி, விதவிதமாக வித்தைக் காட்டிக் கொண்டிருந்தான்.

இந்த சைக்கிள் வித்தை அரைமணி நேரத்தில் முடிந்ததும் அவனுக்கான எடுபிடி ஒருவன் பார்வையாளர்களைக் கைதட்டச் சொன்னான். தட்டினார்கள். பிறகு ப்யூஸ் போன நான்கு டியூப் லைட்டுகளை ஒவ்வொன்றாக எடுத்து நெஞ்சில் அடித்து உடைத்தான். டப் பென்ற சப்தத்தில் அது தெறித்து நொறுங்கியது. ஒவ்வொரு உடைப்புக்கும் பெண்கள் பக்கமிருந்து 'உச்' சப்தம்.

பின்னர், உடைந்த டியூப் லைட்டுகளின் துண்டுகளைத் தரையில் பரப்பி, அதன் மேல் மல்லாந்து படுத்தான் அவன். இப்போது அவனது நெஞ்சில் ஒரு பெரிய ஆட்டுரல் ஏற்றப்பட்டது. 'தம்' கட்டி சிறிது நேரம் அப்படியே படுத்திருந்தான். பிறகு எழுந்தான். முதலில் சின்ன சின்ன கண்ணாடித் துண்டுகள் கிழித்து, இரத்தம் கசிந்தது. அடிக்கடி இவ்வாறு ரத்தம் கசிந்து கசிந்து அவனது முதுகு காய்த்துப் போயிருந்தது. சிவப்பானவளும், அந்த எடுபிடியும் ஈரத் துணியால் அவனது முதுகை ஒற்றி எடுத்தனர். இப்போதும் பெண்கள் பக்கமிருந்து உச்!

அடுத்துதான் ரிக்கார்ட் டான்ஸ். முதலில் ஒரு பக்திப்பாடல். அது முடிந்ததும் ஆபாச அங்க அசைவுகள் கொண்ட பாடல்கள் வலம் வர ஆரம்பித்தன. சைக்கிள் வித்தைக் காட்டிய அந்தக் குருவிக்கூடு முடிக்காரன், எம்.ஜி.ஆர், சிவாஜியாகவும், கமல், ரஜினியாகவும் வந்து பாடல்களுக்கு

ஆடிக் கொண்டிருந்தான். அந்தச் சிவப்பி சரோஜாதேவியிலிருந்து குஷ்பு வரை அவதாரம் எடுத்தாள். ஒவ்வொரு பாடல் முடிந்ததும் கைதட்டல். இதில் ஒரு சில குறும்புக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய ஆபாசமான பாடல்களுக்கு ஆட ஒரு துண்டுச் சீட்டும், கூடவே இரண்டு ரூபாயையும் மேடைக்கு அனுப்பினர். உடனேயே அந்தப் பாடலுக்கான நடனம்.

மாரியம்மாளின் மனத்தில் இடம் பிடிக்க அருணாச்சலமும் ஒரு காதல் பாடலின் நடனத்துக்கு எழுதிக் கொடுக்க, பாவம் அது முடியாமல் போய்விட்டது. இவன் எழுதிக் கொடுத்த பாடல் 'மெலோடி'யாம். அதுக்கு டான்ஸ் ஆடினால் எடுபடாது என்று பதில் வந்தது. காதலுக்காக இரண்டு ரூபாயை இழந்ததுதான் மிச்சம்.

பத்து, பதினொரு மணி வரை நிகழ்ச்சிகள் நடக்கும். பிறகு மறுநாள். இதைச் சாக்காக வைத்துக் கொண்டு காதல் வளர்க்கும் இளைஞர்களுக்கு அந்த மூன்றாவது நாள் ஒரு சோக களமாக மாறிவிடும். ஏக்கமாகப் பார்ப்பதும், சிரிப்பதும், இனி எந்தக் கூத்தில் இப்படி வசதியாகச் சந்திப்போமோ என்ற எண்ணமும் அவர்களை உந்தும்.

வழக்கம் போலவே மூன்றாவது நாளும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. பண்டாரம் அந்த வித்தைக்காரர்களிடம் கொஞ்சம் அதிகமாகவே நெருக்கமாகியிருந்தான். நெருக்கத்தின் பொருட்டு டிக்கெட் கொடுக்கும் பொறுப்பை பண்டாரமே ஏற்றுக் கொண்டிருந்தான். ஒலிபெருக்கி தொடர்ந்து, 'இன்றே கடைசி'யை ஒலி பரப்பியதால் நல்ல கூட்டம். மக்களைக் கவர தீக்குள் பாய்வது, வாயில் தீயை வர வைப்பது போன்ற புதிய வித்தைகள் சேர்க்கப்பட்டிருந்தன. இதனால் முதல்நாள் கூட்டத்தை விட இன்று அதிகம்.

நான்காவது நாள் காலையில் பிள்ளையார் கோயில் முக்கில் ஊரே கூடியிருந்தது.

"பண்டாரம் மவ மாரியம்மாவ யாரோ கூட்டிட்டுப் போய்ட்டானாம்!"

"யாரோலாமில்ல. அந்தக் குருவிக்கூடு தலைமுடிக்காரன்தான்!"

அருணாச்சலம் தனது நண்பன் கேசரியிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

"அதெப்படில, மூணே நாளுல ஒருத்திய மயக்கி கூட்டிட்டுப் போய்ட்டான்!" ●

சீரியல் சினிமா!

சூப்பர்குட் பிலிம்ஸ் ஆர்.பி. சௌத்ரியின் மகன் ஜீவாவுக்கு தமிழ்நாடு முழுக்க, ஆயிரம் ரசிகர் மன்றங்களைத் தொடங்கி விட்டார்களாம்.

எல்லா ரசிகர் மன்றங்களையும் ஒருங்கிணைத்து, சென்னை தி.நகரில் தலைமை ரசிகர் மன்றத்தை நிறுவி, அதற்குத் தலைமைப் பொறுப்பேற்றிருக்கும் முப்பது வயது இளைஞர் முருகமணி, வேலை இல்லாத வெட்டி ஆபீசரோ என்று நினைத்தால் ஏமாந்து போவீர்கள். காரணம், அவர் ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டராம்!

'6-டீன்ஸ்' என்றொரு படத்தை எடுத்து முடித்து அதை சென்சாருக்குக் கூட அனுப்பாமல் முதலில் தமது பதினாறு வயது மகளுக்குப் போட்டுக் காட்டியிருக்கிறார் கல்பனா. பிறகு பதினாறு வயதுடைய மாணவ, மாணவிகளை, அழைத்து வந்து படத்தைத் திரையிட்டுக் காட்டி, அவர்கள் சொன்ன திருத்தங்களையும் செய்திருக்கிறார். யாரிந்த கல்பனா? தமிழ்த் திரையுலகில் தயாரிப்பாளராக நுழைந்திருக்கும் முதல் ஆந்திரப் பெண்மணி. இவரது அப்பா பாபுராவ் ஐதராபாத்தில் பெரிய தயாரிப்பாளராம். "அப்பா கடைசிக் கட்டத்தில் தயாரித்த படங்கள் எல்லாம் தோல்வியைத் தழுவ, குடும்பமே நடுரோட்டுக்கு வந்துவிட்டது. ரிஸப்ஷனிஸ்ட் வேலை செய்து குடும்பத்தைக் காப்பாற்றினேன். ஆனால் அப்பாவை வீழ்த்திய அதே சினிமாவில் ஜெயித்தே தீருவது என்ற தாகத்தோடு மெல்ல மெல்ல உழைத்து முன்னேறியிருக்கிறேன்" என்கிறார் கல்பனா.



• ஊரு உத்திரப் பிரதேசம் ஆனால் தமிழ்க் கோலம் போடுவேன் - இஷிதா ஜோஷி

"பொம்பளைக்கு எதுக்குப் படிப்புன்னு கேட்கற ஒரு கிராமத்துக் குடும்பத்துலேயிருந்து போராடி, படிச்சு, முன்னுக்கு வரும் கதாநாயகி. சென்னை வாழ்க்கை. அங்கே அவள் சந்திக்கிற பெண்களைப் பார்க்கிறப்போ, பெண்ணை எவ்வளவு அடிமையா

வெச்சிருக்காங்கன்னு புரியுது. துணிச்சலா அவளே காதலிச்சு, கல்யாணம் பண்ணியபிறகு நான் படிச்சவள், சுயமா



• '6-டீன்ஸ்' - படமா? பாடமா?



• ரசிகர் மன்றம் ஜீவாவுக்கு 'தித்திக்குதே(ர)'



• கல்பனா



• 'கையோடு கை' பிடிக்கும் சோனா, அரவிந்த்

சம்பாதிக்கிறேன் என்ற பிரச்னை வருது. அதை எப்படி சமாளிக்கிறாள் என்பதை ஜாலியா மட்டுமில்லாம கொஞ்சம், 'சீரியல் ரகத்துல பண்ணியிருக்கிறோம்'' என்கிறார், 'கையோடு கை' படத்தை இயக்கிக் கொண்டிருக்கும் அறிமுக இயக்குனர் ராஜன் சர்மா.

''கடவுளே! சினிமாவை சீரியல் மாதிரி எடுக்கறீங்களா?'' என்று பதறினால், ''நான் என்ன சார் பண்றது, ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் படிச்சிட்டு, பதினேழு வருஷம் டி.வி.யிலேயே இருந்துட்டேன். இப்போ சினிமா வாய்ப்பு கிடைச்சுட்டுதுங்கிறதுக்காக தாய்வீட்டை மறந்துட முடியுமா?'' ராஜன் சர்மாவின் நன்றியுணர்ச்சி, மெட்டி ஒலி ரேஞ்சுக்குக் கண்களைக் கலக்கிவிட்டது.

கோடம்பாக்கத்துக்குள் புதிதாக நுழைந்திருக்கும் லேட்டஸ்ட் தேவதைகளில் 'டச்' பட நாயகி இஷிதா ஜோஷி பற்றி, ''அவர் மேக்கப் போட வேண்டிய அவசியமேயில்லை'' என்கிற ரேஞ்சுக்கு புகழ்ந்து தள்ளுகிறார்கள். வடக்கிலிருந்து ராய்கள், சென்கள், பட்டேல்கள், முகர்ஜிக்கள், சிங்குகள் என்று சமுதாய இட ஒதுக்கீடு போல நடிக்க வந்துவிட்டதில், ஜோஷிக்களின் பிரதிநிதியாக இந்த நாற்பது கிலோ தாஜ்மஹால் வந்துசேர்ந்திருக்கிறது.

'ரன்' இயக்குனர் லிங்குசாமி தமது, உதவி இயக்குனர் போஸுக்குத் திருமணப் பரிசாக ஒரு காஸ்ட்லி அபார்ட்மெண்ட் வாங்கிக் கொடுத்துள்ளார்! அந்த உதவி இயக்குனர், லிங்குசாமியின் சொந்தத் தம்பி.

ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்து 'பக்' (pug) வகை நாய்க்குட்டி ஒன்றை வாங்கி கொஞ்சத் தொடங்கியிருக்கிறார் நடிகர் ஸ்ரீகாந்த்.

— ரவுண்ட்ஸ் பாய்

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வெட்டவெளி மைதானத்தில் மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது அந்தக் கார். கார் ஓடும் அழகை, கைகளால் ஏதோ கணக்குப் போட்டபடி கவனித்துக் கொண்டிருந்தார் அந்த மனிதர். ஓடிக் களைத்த கார் ஆரம்பித்த இடத்துக்கே திரும்பி வர, காரில் இருந்தவரிடம் 'பத்து மிஸ்டேக்பா' என்றார்.

'அப்படியென்ன மிஸ்டேக்?" என்று நாம் காதைத் தீட்ட, அவர் சொன்ன எதுவுமே புரியவில்லை.

"கார் ரேஸுங்கறது சாதாரண விஷயமில்லை. நிறைய

• அஜீத்



• குமார்


கார் ரேஸ் பணக்கார

கவனம் வேணும். எவ்வளவு வேகம் போறோமோ, அவ்வளவு விவேகமும் வேணும்" என்றார் அந்த மனிதரான கே.இ.குமார். தமிழக முன்னாள் கார் ரேஸ் சாம்பியன்.

ஸ்ரீ பெரும்புதூரில் 'புரோ ரேஸிங் ஸ்கூல்' (pro racing school) நடத்தி வரும் இவரிடம் படித்த சில 'ரேஸ்'காரர்கள் அமெரிக்கா, லண்டன் என்று சென்று கார் ரேஸில் கலந்து கொள்கிறார்களாம்!

"இப்ப சீஸன் இல்ல. மே மாசம் வந்திங்கன்னா நிறையப் பேர் பயிற்சி எடுத்திட்டிருப்பாங்க" என்றவரிடம், "இது பணக்காரங்க சமாசாரம்ங்கறாங்களே" என்றோம்.

"அப்படியெல்லாம் இல்லை. கொஞ்சம் செலவு அதிகம் தான். நரேன் கார்த்திகேயன் ஆரம்பத்துல அவரோட சொந்த செலவுலதான் பயிற்சி எடுத்தார். அவர் சக்ஸஸ்புல்லா வந்த பிறகு, ஸ்பான்ஸர்கள் நிறையப் பேர் தேடி வர்றாங்க. ஆரம்பத்திலே அவர் செலவழித்த தொகையைவிட, இன்னைக்குப் பலமடங்கு அவருக்குக் கிடைக்குது. செலவு பண்ணாம எந்த விஷயமும் கிடைக்காது. இருந்தாகூட





மனசுல ஒரு தீவிரம் வேணும். பணம் உள்ள நிறையப் பேர் கார் ரேஸ்ல கலந்துக்கிட்டு எடுபடாமப் போயிருக்காங்க. இன்னொரு விஷயம் ஸ்பான்ஸர்ஸ். அதிகமான டயர் கம்பெனிங்க, கார் கம்பெனிங்க, புதுசா வர்றவங்களுக்கு ஸ்பான்ஸர் பண்ணணும். ஸ்பான்ஸர்கள் அதிகமானாதான் நிறையப்



பேர் இதுல கலந்துக்க ஆர்வமா வருவாங்க. பத்து லட்சம் பேர் இருக்கிற தமிழகத்துல, ஒரே ஒரு நரேன் கார்த்திகேயன் மட்டும்தான் வரமுடியுதுன்னா, அதுக்கு ஸ்பான்ஸர்கள் இல்லாமைதான் காரணம்! இன்னும் அஞ்சு ஆறு வருஷத்துல பாருங்களேன், கிரிக்கெட், டென்னிஸுக்கு இருக்கிற மாதிரி கார் ரேஸுக்கும் நிறைய ரசிகர்கள் வந்திருவாங்க" என்கிறார்.

"சின்ன ஆக்ஸிடெண்ட் ஆனாலும் பெரிய ஆபத்திருக்கே இதுல..."

"அதெல்லாம் அப்போ. இப்ப இல்லை. டெக்னாலஜி ரொம்ப முன்னேறிட்டுது. நல்ல ஹெல்மெட், உடைகள் கண்டிப்பா வேணும். இப்பல்லாம் ஒரு கார் இன்னொரு கார்ல எந்தப் பகுதியில் மோதுதோ, அந்தப் பகுதி மட்டும் உடையற மாதிரி பண்ணியிருக்காங்க. இதனால ஆபத்துங்கறதுக்கான வாய்ப்பு ரொம்பக் குறைச்சல்தான்" என்கிற குமார், நடிகர் அஜித்குமாருக்கு கார் ரேஸில் முதல் கட்ட பயிற்சியளித்தவர்.

"அஜித்துக்குச் சின்ன வயசுல இருந்தே கார் ரேஸ்ல ஆர்வம் உண்டு. அவர் கார் ஓட்டத் தெரியும்னு ரேஸ்ல வந்து கலந்துக்கல்ல, ரேஸுக்காக நிறைய உழைச்சிருக்காரு. மாநகராட்சிக் கவுன்ஸிலர் வெற்றிவேல் ரேஸ்ல கலந்துக்க பயிற்சி எடுத்தார். இதுக்காக பத்துப் பதினைந்து நாட்கள்ல தமது உடல் எடையைக் குறைச்சார். அந்த டெடிகேஷன் இதுல கண்டிப்பா வேணும்.

"ஆறு வயசுலேயிருந்து கார் ரேஸ் பயிற்சிக்கு வரலாம். கார் ஓட்டறதுக்கு முன்னால gokart-ங்கற வாகனத்துல பயிற்சி எடுக்கணும். இது இன்னைக்கு அடிப்படை. இதுல ஓட்டக் கத்துக்கிட்டு ரேஸ்ல கலந்துக்கறது ரொம்ப ஈஸி. நாங்களே காரைத் தயாரிச்சு பயிற்சி கொடுக்கறதால, டெக்னிக்கலான பல விஷயங்களைத் தெளிவா விளக்கித் தர்றோம். மூணு மாசப் பயிற்சி. ஒரு வகுப்பில் பத்துப் பேருக்குத்தான் அனுமதி. ரேஸுக்கு மட்டுமில்லாம 'ஜாலி ரைட்' மற்றும் வாடகைக்கும் கார் கொடுக்கிறோம்" என்கிறார் குமார்.

என்ன செலவாகும் இதற்கு...?

பன்னிரெண்டு நாள் பயிற்சிக்கு ஒரு லட்சம் ரூபாயாம். வாடகைக்கு இங்கு கார் கிடைக்குமாம். ஒரு வார வாடகைக்கு நாற்பதாயிரம் ரூபாய்! வேகத்துக்கேற்ற விலைதான்!

\- அப்பு



ஜீவநதி

(கண்ணன், அறையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறான். அந்த நேரம் பார்த்து, வேணு வருகிறார். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது சுசிலா அமைதியாக வந்து நிற்கிறாள்)

கண்ணன் : (பெருக்கியபடி) வாங்க வேணு சார். உக்காருங்க.

வேணு : இருக்கட்டும். (படுக்கையில் அமர்கிறார்) என்ன இப்படிப் பண்ணிட்டீங்க, சார்?

கண்ணன் : (தொடர்ந்து சுத்தம் செய்தபடி) என்ன சொல்றீங்க?

பிரபஞ்சன்

வேணு : என் பெண்ணுக்கும் சேதுவுக்கும் கல்யாணம் பண்ணி வச்சிருக்கீங்க.

கண்ணன் : கல்யாணம்தான் நடந்திருக்கு. வேறு தப்பு எதுவும் நடக்கலையே. அதோடு, நான் பண்ணியும் வைக்கலை, சார். அவங்க விரும்பினாங்க. அவங்களே நடத்திக்கிட்டாங்க. ஒரு நண்பன் என்கிற முறையில நான் செய்ய வேண்டியதைச் செய்தேன்.

வேணு : எனக்கு ஏற்பட்ட அவமானத்தை நினைச்சுப் பார்த்தீங்களா?

கண்ணன் : கௌரவமா, நீங்களே முன்னே நின்னு, நடத்தி வச்சிருக்கலாம். அதுக்கான சந்தர்ப்பங்களை சேது கொடுத்தார்.

வேணு : (குரல் வலிமையாக) சார், உங்களுக்கு ஒரு தங்கை இருந்து, சேது மாதிரி ஆளுக்குத் தருவீங்களா? சொல்லுங்க.

கண்ணன் : என் தங்கை இருந்து, அவளை சேது விரும்பினா, சேதுவை இவளும் விரும்பினா, அதைப் பெரிய திருவிழாவா கொண்டாடி இருப்பேன், சார்.

உங்க மாதிரி கோபப்பட்டிருக்க மாட்டேன்.

வேணு : மோசமான பொம்பிளை சகவாசம் உள்ளவன் சார் அவன்.

கண்ணன் : ரேணு, இப்ப ஒரு பெரிய மனுஷன் கிட்ட செட்டில் ஆகிட்டது. அப்பவும், இப்பவும் அது மோசமான பெண் இல்லை. சேதுவும், நானும் ரேணுகாவுக்கு நண்பர்கள். மற்றபடி வேறு மாதிரி எதுவும் இல்லை.

வேணு : சினேகம், அந்த மாதிரி பெண்ணோடயா?

கண்ணன் : சார், ஏழு கிணறு பகுதியில, உங்களுக்கு ஒரு பெண்ணோட தொடர்பு இருக்கிறது எனக்குத் தெரியும். அந்தப் பெண்ணையே எனக்குத் தெரியும் சார். ஒரு மாதிரிப் பெண்ணோட சினேகிதனா இருக்கிறதே தப்புன்னா, அது மாதிரிப் பெண்ணோட காதலர் வீட்டில பெண் எடுப்பது, கௌரவம்தானா, சார்?

வேணு : *(திடுக்கிடுகிறார். சமாதானமாகப் பேசுகிறார்)* நாம் எப்படி இருந்தாலும், நம்ம குழந்தைகள் நல்லா இருக்கணும்னு நினைக்கிறதில்லையா?

கண்ணன் : கவலையே படாதீங்க, வேணு சார். சரோஜாவுக்கு அருமையான கணவன் கிடைச்சிருக்கான். கஷ்டத்துல சரோஜா ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டாக் கூட, நியாயம் கேக்கிற முதல் ஆளா நான் இருப்பேன். சார், சேது, என்னைவிட நல்லவன் சார்.

வேணு : என் சொந்தக்காரங்க, போலீஸுக்குப் போயிட்டாங்க.

கண்ணன் : அதனால என்ன? இதுல போலீஸுக்கு என்ன வேலை? பெண்ணுக்கு இருபத்தியிரண்டு வயசு. பையனுக்கு இருபத்துயேழு வயசு. எடுத்துக்கிட்டு ஓடிட, நீங்க ஒண்ணும் நகை போட்டு வச்சிருக்கலை, உங்க பெண்ணுக்கு. அடுத்த முறை, போலீஸுக்குப் போனா, கள்ளச் சாராயக்காரன், பெண்கள் செயினை அறுக்கிறவன், கொத்துக் கொத்தா கொலை பண்றவன், பெரிய பெரிய விடுதியில விபசாரம் பண்ற ஆம்பிளைகள் இவர்களையெல்லாம் எப்போ பிடிக்கப் போறீங்கன்னு கேளுங்க...

வேணு : எல்லாம் போகட்டும் சார். மாப்பிள்ளை, பெண்ணை வரச் சொல்லுங்க.

கண்ணன் : இப்ப சொன்னதுதான் சரி.

சுசீலா : *(அமைதியாக வந்து நின்றவள் வேணுவிடம்)* வான்னா, வந்துடுவாங்களா? ஒரு நல்ல நாள் பாருங்க... உங்க வசதிக்கு ஏற்ப, ஒரு கல்யாண மண்டபத்தில உங்க சொந்த பந்தங்களை அழைச்சு வரவேற்புக் கொடுங்க. அப்படியே பொண்ணு மாப்பிள்ளையை உங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போங்க...

வேணு : நீங்க சொல்றதுதாங்க, சரி. அப்படியே செய்யறேன். வரேன் சார்.. நீங்க தான் கிட்ட இருந்து, நடத்தி வைக்கணும்.

கண்ணன் : கண்டிப்பா. இதைவிடப் பெரிய வேலை என்ன சார் இருக்கு எனக்கு?



வேணு : நீங்களும் கட்டாயம் வரணும்மா.


சுசீலா : ஆகட்டும். அவசியம் வர்றேன். (வேணு போகிறார்)

சுசீலா : *(கண்ணனிடம்)* இதான் பெரிய வேலையாச்சா உனக்கு?

கண்ணன் : இருக்கட்டும்க்கா. ரெண்டு பேர் சந்தோஷத்துக்கு வாழறதும், உழைக்கிறதும் பெரிய விசேஷம்தானேக்கா?

சுசீலா : உன் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலையா?

கண்ணன் : *(வானத்தைக் காட்டி)* அங்க இருக்கிறது, யார்?



சுசீலா : *(மேலே பார்த்துக் கொண்டு)* நிலா.

கண்ணன் : *(நாடக பாவத்துடன்)* அவள் ஒருநாள் இறங்கி வருவாள். நட்சத்திரத் தோழிகளோடு, என் நிலாத் தலைவி இறங்கி வரும்போது, சகோதரி, அவளைக் கரம் பிடிப்பேன், நான். இந்த மண் மேல், என் மனம் கவர்ந்த மாதரசி யாரும் இல்லையே, என்ன பண்ணட்டும், அக்கா! *(சுசீலா சிரிக்கிறாள்)*

(காட்சி மாற்றம்)

சிவதாணு, கீதா, சரோஜா, சேது எல்லோரும் மகிழ்ச்சியான மன நிலையில் இருக்கிறார்கள்.

கீதா : அப்புறம், என்ன, உங்க பிரச்னை தீர்ந்திடுச்சு. உங்க வீட்டுக்கே நீங்க போகலாமே, சரோஜா.

சரோஜா: வேணாம்கா. இவர்கூட, இவர் விரும்பற வீட்டுலயே இருக்கேன். புது வாழ்க்கை, புது வீட்டிலயே இருக்கட்டுமே...

சிவதாணு : அதுவும் சரிதான். நாளைக்கே புது வீட்டை முடிப்போம்.

காட்சி : 42
காலை/வீடு. வெளியிலிருந்து உள்ளுக்கு.

காலையின் அமைதியைக் குலைத்துக் கொண்டு, ஆட்டோ ஒன்று அந்தத் தெருவில் வந்து நிற்கிறது. எங்கிருந்தோ, கோவிலில் இருந்து ஒலிக்கும் சுப்ரபாதத்தை விடவும், தூக்கலாக, ஆட்டோ சப்தம். ஆட்டோவில் இருந்து சுமார் ஐம்பது ஐம்பத்தைந்து வயதுடைய கௌரி அம்மா இறங்குகிறார். ஆட்டோவைப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு, வீட்டுப் படி ஏறுகிறார். ஆட்டோ சப்தம், தன் வீட்டு வாசலில் ஒலித்ததால், எட்டிப் பார்க்கிறாள் சுசீலா.

சுசீலா : வாங்கம்மா, வாங்க... வாங்க... *(கௌரி அம்மாளிடம் இருந்து பெட்டியை வாங்கிக் கொள்கிறாள். மாடிப்படி வாசலில் இருந்த அழைப்பு மணியை ஒலித்து..)* கண்ணா... உங்க அம்மா வந்திருக்காங்க... என்று சொல்லியபடி படியேறுகிறாள். கௌரி அம்மாள் பின் தொடர்கிறார். இடுப்பில் டவல், ஷாம்பு தேய்த்த தலையோடு வந்த கண்ணன்,

கண்ணன் : வாம்மா... போன் பண்ணி இருந்தா, பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருப்பேனே.

சுசீலா : இப்போல்லாம், நீ பொதுத் தொண்டு செய்யற தலைவனாயிட்டே... பஸ் ஸ்டாண்டுக்கு வர நேரம் இருக்குமோ என்னவோன்னுதான் அம்மா, அவங்களாகவே வந்துட்டாங்க.

கௌரி அம்மா : நீ குளிச்சிட்டு வாடா... *(கட்டிலில் அமர்கிறார். கண்ணன்*

குளியல் அறைக்குள் நுழைகிறான்.) எப்படி வச்சிருக்கான் பாரு, அறையை. குழந்தைங்க சாப்பிட்ட இலை மாதிரி, கசமுசான்னு...

சுசிலா : அறைதாம்மா கசமுசா. ஆள், ரொம்ப நல்ல பையன்.

கௌரி அம்மா : அதுல என்ன சந்தேகம்? ஒரு நாளும் தப்பு வழியில போகவே மாட்டான் என் பிள்ளை. அது இருக்கட்டும். உன் விஷயம் என்ன ஆச்சு? உன் புருஷனுக்கு இன்னும் புத்தி வரல்லையா? உன்னை அழைச்சுக்கிட்டுப் போகணும்னு தோணலை?

சுசிலா : வரச் சொல்லிக் கடிதமும் போடறார். இன்னொரு பக்கம், வேற பெண் பார்க்கவும் செய்றார். ஸ்திர புத்தி இல்லாத மனுஷன்.

கௌரி அம்மா : மனைவியைப் புரிஞ்சுக்காத மனுஷன். என்ன மனுஷன்?

சுசிலா: பாவம். அவர் தன்னையே புரிஞ்சுக்கலை.

(சட்டை பட்டன்களைப் போட்டபடியே கண்ணன் வருகிறான். அம்மா எதிரில் நாற்காலியில் அமர்கிறான்.)

கண்ணன் : அதுதானே, நம்ம பிரச்னையே? யாரும் தன்னைத் தோண்டிப் பார்க்கத் தயாரா இல்லை. அது, பெரியவர்கள், ஞானிகள் பிரச்னைன்னு ஒதுங்கி இருக்கோம். அம்மா, நீ எப்படி இருக்கே. அப்பா எப்படி இருக்காங்க? சுமதி சௌக்யமா இருக்கா? கடிதம் போட்டுதா?

அம்மா : எல்லாம் சௌக்யம்தான். சுமதி, அண்ணாவைப் பார்த்தே பல வருஷம் ஆச்சுன்னு எழுதி இருந்துச்சி. ஒரு நடை போய்ட்டு வா... அப்புறம்...

சுசிலா : நீங்க பேசிட்டு இருங்க. காபி கொண்டு வரேன். முடிச்சுட்டு, நீங்க குளிக்கப் போகலாம். அதுக்குள்ள, நான் டிபன் தயார் பண்ணிடறேன். உனக்கும்தான், கண்ணா...

(போகிறாள்... அவளைப் பார்த்தபடி)

அம்மா : தங்கமான பொண்ணு...

கண்ணன் : நிம்மதியா இருந்துச்சு, அந்த அக்கா, தங்கம்னு இப்ப சொல்றாங்க, எல்லாரும். நல்ல தகரமா பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சாங்க, பெரியவங்க... தகரத்தோட எப்படித் தங்கம் சேரும்? இப்போ, என்ன இருந்தாலும், புருஷன் வீடுதானே பொம்பிளைக்கு நிரந்தரம்னு பேசறாங்க. என்ன நியாயம்னு புரியலை.

அம்மா : என்ன பண்றதுடா? கல்யாணமே, சூதாட்டமாப் போச்சு.

கண்ணன் : நேத்துதான் கல்யாணம் சூதாட்டமாப் போச்சா? முந்தாநாள், அது நல்லா இருந்துச்சா? சுமதியோட வாழ்க்கை, சந்தோஷமாத்தான் இருக்கா?

அம்மா, தலை கவிழ்ந்துகொண்டு, கண் கலங்குகிறாள்.



- கிரிஜா மணாளன்

காட்சி : 43

மாலை/பூங்கா

பாத்திரங்கள்: கண்ணன், கீதா.

(பூங்கா மாதிரியான ஒரு சூழல். நடந்தபடியும், அமர்ந்தபடியும், உரையாடுகிறார்கள் கண்ணனும், கீதாவும்.)

கண்ணன் : என் தங்கை சுமதி விஷய

மாத்தான் அம்மா வந்திருந்தாங்க, அதே பிரச்சனைதான். வெறும் வரதட்சணை பிரச்னைன்னு இதைக் குறுக்கிடவும் முடியாது. அவ, கணவர் மகேஷ், மோசமானவர்னும் சொல்ல முடியாது. என்னவோ, அவர் தொட்டது எதுவும் துலங்கலை. நல்லாப் படிச்சவர். அரசாங்க வேலைக்குப் போக விரும்பலை. அது நல்ல முடிவுதான். நல்லதோ, கெட்டதோ, அது அவர் முடிவு. ஏதோ ஒரு 'பிஸ்கட்' ஏஜென்சி எடுத்தார். அப்பாதான் பணம் கொடுத்தார். அது தப்பில்லை. வியாபாரம் சரியா ஆகலை. இரண்டாவது முறையாக, மெடிக்கல் ஸ்டோர் வச்சார். ஏதோ சிக்கல். கடையை மூடிட்டார். இதுக்கும் அப்பாதான் பணம் கொடுக்க நேர்ந்துச்சி. இப்போ, 'ரெஸ்டாரெண்ட்' நடத்தணும்னு நினைக்கிறார். சுமதி ரொம்ப மன வருத்தத்தோடு இருக்கு. இனியும் அப்பாகிட்டே கேட்கக்கூடாதுன்னு நினைக்குது. அம்மா, அதுக்குத்தான் வந்திருக்காங்க, கீதா.

கீதா : அம்மா, என்ன சொல்றாங்க?

கண்ணன் : வாய் திறந்து சொல்லலை. ஆனா, என்ன நினைக்கிறாங்கன்னு தெரியுது.

கீதா : என்ன?

கண்ணன் : அப்பா, எனக்குன்னு ஒரு தென்னந்தோப்பு வாங்கி வச்சிருக்கார். என் பேரிலே பத்திரம்கூட பதிவாகி இருக்கு. அதைப் பத்திப் பேச வந்திருப்பாங்களோன்னு தோணுது.

கீதா : உங்களுக்குச் சொத்து ஆசை இருக்கா, கண்ணன்?

கண்ணன் : இல்லை.

கீதா : அப்புறம் என்ன கண்ணன். சுமதி சந்தோஷம்தானே, நமக்கு சந்தோஷம். ஒருக்கால், இந்த வியாபாரத்துல அவங்க ஜெயிக்கலாம், இல்லையா? அம்மா, வாய் திறந்து கேட்கக் கஷ்டப்படறதாச் சொல்றீங்க. கேட்கிற வரைக்கும், அவங்களுக்கு மன சஞ்சலம்தானே? அதை நீங்க அனுமதிக்கலாமா? பாவம் இல்லையா? நீங்களே, அதைப் பேசுங்க. என் தென்னந்தோப்பை வித்து தங்கைக்குக் கொடுக்கலாமேம்மான்னு, நீங்களே சொல்லிடுங்க. அம்மாவோட சங்கடம் தீர்ந்துடும். சுமதியோட பிரச்னையும் தீர்ந்திடும்.


கண்ணன் : ரொம்ப சரியா சொன்னே, கீதா, நானும் அதைத்தான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். எனக்கு என் தங்கச்சி சந்தோஷம்தான் முக்கியம். இந்த சொத்து சுகம் எல்லாம் ரெண்டாம்பட்சம் அல்ல... நாலாம் பட்சம்தான்.

கீதா : சொத்து சுகம்னுதான் சொல்றாங்க. சுகத்தைக் கொடுக்கத்தான் சொத்து. யாராவது, பயன் அடையும்போதுதான், சொத்துக்கு மரியாதை.

கண்ணன் : அம்மாகிட்ட, நானே பேசிடறேன். பாவம், நாலு நாளா, எப்படிச் சொல்றதுன்னு சங்கடப்பட்டுக்கிட்டு இருக்காங்க... கீதா, முடிஞ்சா வீட்டுக்கு வாயேன்... அம்மா, உன்னைப் பார்த்தா சந்தோஷப்படுவாங்க.

கீதா : ஆகட்டும்.

(தொடரும்)





நாகதோஷம், தடைப்பட்ட திருமணம் கைகூட, கூறுமை நீங்க,
கடன் தொல்லை அகல, நோய் நொடி இல்லாத வாழ்க்கை அமைய,
லக்ஷக்கணக்கான வாசகர்களின் நலன் கருதி லோக க்ஷேமார்த்தமாக

திருமலைக்காண்டூர் ஸ்ரீகிருஷ்ணமாச்சார்யார் ஸ்வாமி
திருவெண்காடு ஸ்ரீடி.கே. முத்துஸ்வாமி சாஸ்திரி
அருள்சித்தர் ஸ்ரீலஸ்ரீ காயத்ரி ஸ்வாமிகள்

ஆன்மீக - அறிஞர் பெருமக்களின் சீரிய தலைமையில்

மாபெரும் ராகு - கேது பெயர்ச்சி யாகம்!

அன்புடையீர், வணக்கம். **நாள் : 5-9-2003 வெள்ளிக்கிழமை**

ஞானகாரகன், மோக்ஷகாரகன் என்று பெயர் பெறும் சாயாக்கிரகங்களில், ஒன்றான ராகு, ரிஷப ராசியிலிருந்து மேஷ ராசிக்கும், மற்றொன்றான கேது, விருச்சிக ராசியிலிருந்து துலா ராசிக்கும், திருக்கணிதப்படி வருகிற 5-9-2003, வெள்ளிக்கிழமை தசமி திதி மூல நக்ஷத்திரம் அமிர்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் பெயர்ச்சியாவதையொட்டி தோஷ நிவர்த்தி பரிகாரத் தலமான, இராமேஸ்வரத்தில் மாபெரும் ராகு கேதுப் பெயர்ச்சி யாகம் நடைபெறுகிறது.

ராகு-கேது பெயர்ச்சியினால் நாக தோஷம், திருமணம் கை கூடாமை, புத்ர சந்தானமின்மை, தாம்பத்ய ஒற்றுமையின்மை, வியாபார வளர்ச்சியின்மை, கடன்தொல்லை, கோர்ட் வழக்குகள், வறுமை, நோய் நொடிகள் என்று மக்களை வாட்டும் பல பிரச்சனைகளுக்கும் இந்த ராகு - கேது பெயர்ச்சி யாகத்தினால் நல்ல பலன்கள் ஏற்படும். ஜோதிட ரீதியாகப் பன்னிரண்டு ராசிகளில் இராகுப் பெயர்ச்சியினால் பாதிப்படையும் மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீன ராசி நேயர்களும். கேதுப் பெயர்ச்சியினால் பாதிப்படையும் மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீன ராசி நேயர்களும் பரிகாரமும் சங்கல்பமும் செய்து யாகத்தில் பங்கு பெறலாம்.

யாகத்தில் பங்குபெற விரும்பும் அன்பர்கள் தனித்தனியாக தங்கள் பெயர், முகவரி, கோத்திரம், ராசி, நட்சத்திரம் முதலியவற்றை தெளிவாக எழுதி ரூ. 150 M.O. அல்லது D.D. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம். திருமணத் தடையுள்ள ஆண், பெண் அன்பர்கள் தங்கள் ஜாதக நகலை இணைத்து அனுப்பி வைக்கவும். யாகத்தில் கலந்து கொள்ளும் வெளியூர் அன்பர்களுக்கு அவர்கள் சார்பாக தனிப்பட்ட முறையில் சங்கல்பம் செய்து யாகம் முடிந்தவுடன் யாகப் பிரசாதமும் ஸ்ரீ துர்காம்பிகை வெள்ளி டாலரும் லேமினேட் செய்யப்பட்ட ஸ்ரீ இராமநாதசுவாமி படமும் அர்ச்சனைப் பிரசாதமும் தபால் (or) கூரியர் மூலம் அவர்களது இல்ல முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். வெளிமாநில அன்பர்கள் ரூ.20 சேர்த்தும் வெளிநாட்டு அன்பர்கள் ரூ.100 சேர்த்தும் அனுப்பவும்.

D.D. அனுப்பும் அன்பர்கள் "GOPURA DHARISANAM" என்ற பெயரில் எடுத்து அனுப்பவும். யாகம் முடிந்தவுடன் சிறப்பான அன்னதானத்திற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பின்னர் உலகப் புகழ்பெற்ற ஜோதிட அறிஞர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கும் நடைபெற உள்ளது.



D.D. / M.O. அனுப்ப வேண்டிய முகவரி :


கோபுர தரிசனம்
GOPURA DHARISANAM

M-11/F-4, Ragam Apts, I Main Road,
THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI-041.
☎ : 24900603, 24900303, 24416122 Mobile : 9444116300



உரிய கிரகப் பெயர்ச்சிக் காலங்களில் யாகத்தில் பங்கேற்பது மிகச்சிறந்த பலனை அளிக்கும்.

நடக்குமென்பார்; நடக்கும்!




மேஷம் : பிபாரிக, டொனேஷன் எதுவுமில்லாமல் எல்.கே.ஜி. அட்மிஷன் கிடைத்தது போல உற்சாகமான மனநிலையோடு உலா வருவீர்கள். உங்கள் ராசிநாதன் செவ்வாய் 11ல் லாபஸ்தானத்தில் பலம் பெற்று இருப்பதால், இந்தச் சிறப்புச் சலுகை. அலுவலகத்தில்கூட உங்களுக்கு இனிமையான சூழலே வாய்த்திருக்கும். புதிய உத்தியோகம் சம்பந்தமான முயற்சி கூடிவரும். பயணங்களில் அனுகூலம் உண்டாகும். சுய தொழிலில் பொருளாதார மேன்மை உண்டாகும். சனி பகவான் 3ம் இடத்தில் பலமாக இருப்பதால், சொத்து சேர்க்கை ஏற்பட்டு, வளம் பெருகும்.



ரிஷபம் : கர்நாடகத்திலும் கேரளாவிலும் சக்கைப்போடு போடும் மழை, தமிழ்நாட்டில் மட்டும் ஸ்ட்ரைக் செய்வது போல, இந்த வாரம் கிரக சாரங்கள் கொஞ்சம் ஸ்ட்ரைக் செய்கின்றன. ஆனால் தெய்வ பலம் இருப்பின் சமாளிக்கலாம். ஏழரை இரண்டாவது சுற்று நடைமுறையில் உள்ளவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகள் அனுகூலம் தரும் என்றாலும் ஆழம் தெரியாது காலைவிட வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமை விருத்தியடையும்.



மிதுனம் : ப்ளஸ் டூ சிறப்புத் துணைத் தேர்வுகளில் நடந்த ஹால் டிக்கெட் குளறுபடிகள் போல, இந்த வாரம் தொழில் விஷயத்தில் சிறுசிறு பிரச்னைகள் நேரிடும். கவனமாகப் பார்த்து சமாளியுங்க. வர வேண்டிய பணம் வந்து சேரும். தெய்வ பலம், பிரபு தனவான்களின் ஆதரவு ஆகியவை உண்டாகும். வெளிநாடு செல்ல முயற்சி செய்து வருபவர்களுக்குப் பயணம் சிறப்பாக அமையும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம். ஞானிகள் தரிசனம் நலம் தரும்.



கடகம் : ஏதோ எதிர்பாராதவிதமாய்க் கொஞ்சம் குறைந்து, தாய்மார்களின் பேராதரவைப் பெற்ற தங்கத்தின் விலை போல, உங்கள் கிரக சாரங்களின் நிலைமையும் இணக்கமாய்த் தளர்ந்து, நல்ல நிலைமைக்கு இட்டுச் செல்லும். கட்டுக் கடங்காத செலவு, சிறுசிறு உபாதைகள் என ஏதாவது ஒன்று உறுத்திக் கொண்டேயிருக்கும் என்பதால், சனி கிரகப் ப்ரீதி செய்வது நல்லது. இரண்டாவது ஏழரை சனி, நடைமுறையில் உள்ளவர்களுக்கு எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.



சிம்மம் : மத்திய நிதி அமைச்சர், தமிழக முதல்வரைத் தானாகச் சென்று சந்தித்த வினோதம் போல, இந்த வாரம் உங்களை முக்கியப் பிரமுகர் சந்தித்து பல வகையிலும் உதவுவார். குடும்பத்தில் 11ல் அமைந்துள்ள கிரக பலத்தால் ஒற்றுமை நிறையும். தாமதமாகிவந்த சுப காரியங்கள் சட்டுபுட்டென்று நிறைவேறும். சுபச் செலவுகளுக்கான பண மூட்டையை இப் போதே தயார் செய்து விடுங்கள். மாணவர்கள் உழைப்புக்கேற்ற முன்னேற்றம் அடைவார்கள்.



கன்னி : ஒரு குடம் குடிநீர் தேடிப் போனவருக்கு, ஒரு லாரி நீர் கிடைத்ததுபோல, அடிச்சதய்யா அயனான யோகம். குறிப்பாகப் பெண்களுக்கு, யோக லட்சுமியே விஸிட்டிங் கார்டுடன் கதவைத் தட்டுவார். உத்தியோகம், தொழில், படிப்பு என சகல விதத்திலும் முன்னேற்றமான வாரம்தான். பழைய கடன் தொல்லைகள் மறைந்து, சரளமான பண வசதி உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும்.




இலக்கிய வீதி இனியவனுக்கு (மேஷம்) இந்த வாரம் முழுவதும் இனிமையான சூழல் நிலவுமாமே!




துலாம் : உச்சாணிக் கொம்பில் ஏறிக் கொண்டு இறங்க மாட்டேன் என அடம்பிடிக்கும் காய்கறி விலை போல, உங்கள் புகழ், திறமை, மதிப்பு எல்லாமே சரசரவென மேலே ஏறி திக்குமுக்காட வைக்கும். குறிப்பாக, கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு, சுபிட்சமான காலம். பொன், வெள்ளி, நவரத்தினம், ஆபரணம் முதலியவை ஆதாயம் கொண்டு வரும். மக்களால் மன நிறைவு, எதிர்பார்த்த செய்தி வந்து சேருதல் என அனுகூலமான பலன்கள் நிறையவே இருக்கு.



விருச்சிகம் : "படப்பிடிப்புக்கு வந்தது, தலைப்போடு போச்சே" என்று ஆறுதல் அடைந்த 'சண்டியர்' கமல் மாதிரி, உங்கள் தலைக்கு வந்த பிரச்னைகள், ஹெல்மெட்டோடு போகும். அதற்கு நன்றி சொல்லும் விதமாக, கிரக வழிபாடு, தெய்வ தரிசனம் செய்யவும். குடும்பத்தில் சுபமங்கள காரியங்கள் நடைபெறும். கூட்டுத் தொழில் மிதமான லாபம் கொண்டு வரும். வீடு, மனை, நிலம், ரியல் எஸ்டேட் போன்றவற்றால் ஆதாயம் உண்டு.




தனுசு : தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளராக ப்ரமோஷன் பெற்ற மு.க. ஸ்டாலின் போல, உங்களுக்கும் தடாலடி பதவி உயர்வுகள் காத்திருக்கின்றன. எதிர்ப்புகளையும் எதிரிகளையும் தாண்டி பிரகாசிப்பீர்கள். அதேபோல, புதிய தொழில் முயற்சிகளும் கை கூடி வரும். எதிர்பாராத இடத்திலிருந்து கிடைக்கும் பொருளாதார உதவியால் ஏற்றம் பெறுவீர்கள். பூர்வீக சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட கோர்ட்டு வழக்குகளில் வெற்றி உண்டாகும். உடன் பிறந்தவர்களால் மகிழ்ச்சி உண்டாகும்.



மகரம் : 'சாமி' படத்துக்குப் பிறகு டபுளாகிவிட்ட நடிகை த்ரிஷாவின் சம்பளத் தொகையைப் போல உங்கள் பேங்க் பாலன்ஸும் குடும்ப சந்தோஷமும் இரட்டிப்பாகி, குதூகலம் சேர்க்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும். சொத்து விவகாரங்கள் மனநிறைவுடன் பைசல் ஆகும். பெண்கள் எண்ணியபடியே எல்லாக் காரியங்களும் நிறைவேறும். சாதுக்கள் தரிசனம் கோடி புண்ணியம்!



கும்பம் : அம்மா செய்து வரும் ஆன்மிகப் புரட்சி அளவுக்குப் பெரிய ரேஞ்சில் இல்லாவிட்டாலும், ஏழைக்கு ஏத்த எள்ளுருண்டை போல உங்கள் வசதிக்கு ஏற்ப, புண்ணிய காரியங்கள், தெய்வீக யாத்திரை, குல தெய்வப் பிரார்த்தனைகள் என நிறையச் செய்வீர்கள். தெளிவான சிந்தனை, பணபலம், தெய்வீக ஈடுபாடு, எதிர்பாராத பயணம், முக்கியஸ்தர்கள் ஆதரவு, பிரிந்தவர்கள் ஒன்று சேருதல் என சிறப்பான பலன்களே உண்டாகும். எதிர்பார்த்திருந்த வெளிநாட்டுத் தகவல் இப்போது வந்து சேரும்.



மீனம் : "பிரச்னைகள் தீராவிட்டால் மீண்டும் கார்கில் போர் வரும்" என்று சவடாலாகப் பேசியிருக்கும் முஷாரஃப் போல, நீங்களும் ஏடாகூடமாகப் பேசி, மாட்டிக் கொள்ளாதீர்கள். வீண் பதற்றத்தையும், அனாவசியப் பேச்சையும் தவிர்த்தாலே, தொல்லைகளிலிருந்து தப்பிக்கலாம். உத்தியோகத்தில் மறைமுக நேர்முக எதிர்ப்புகள் யாவும் விலகும் என்றாலும், புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சிலருக்கு வீடு, வாகன யோகம் அமையும். மக்களால் மகிழ்ச்சியும், மனைவியால் பெருமையும் உண்டாகும். பிரார்த்தனை மூலம் மேலும் வாழ்க்கையைச் சிறப்படையச் செய்யலாம்.

அக்னிசர்மா பக்கம்   ஜூலை 2 முதல் 8 வரை

திருவாரூர் பாபு

இதுவும் ஒரு தாஜ்மஹால்!

"உனக்கு இதெல்லாம் தேவையா அம்மாயி?" கோபமாகக் கேட்டேன்.

முந்தானையால் முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு அம்மாயி என்னைப் பார்த்துச் சிரித்தாள். வாயிலிருந்து வெற்றிலைச் சாறு வழிந்தது. என்னைப் பார்த்து, விரக்தியாகப் புன்னகைத்தாள்.

அந்தச் சிரிப்புக்கு எனக்கு அர்த்தம் என்று புரிந்தது. 'வீட்டில் உட்கார்ந்திருந்தால் உன் மாமி, என்னைத் திட்டியே கொன்று விடுவாள்!'

"அம்மா எப்படி இருக்கு?" என்றாள்.

"நல்லாருக்கு... அதுக்கு என்ன... உனக்கு வாய்ச்சது மாதிரி இல்லாம நல்ல மருமகள்... டீவி முன்னால் சுகமா பொழுது போயிட்டு இருக்கு" என்றேன்.

"நல்லாருக்கட்டும்.... லெட்சுமி எப்படி பேராண்டி இருக்கு...? ரெண்டாவதா ஒண்ணு பெத்துக்கலையா?"

"இப்ப வேணாம் அம்மாயி..."

"ஏன் வேணாம்... இதாண்டா வயசு... பயப்படாம பெத்துக்க... ஏன், யாரும் கூடமாட இருந்து அவளைக் கவனிச்சுக்க மாட்டாங்கன்னு யோசிக்கிறியா? நான் வர்றேண்டா..."

அம்மாயியின் பேச்சு உடம்பைச் சிலிர்க்க வைத்தது. வீட்டை எதிர்த்து காதல் திருமணம் செய்துகொண்ட எனக்கு, ஒரே ஆறுதல் இவள்தான்.

"ஏன் அம்மாயி... சாயங்காலம் ஏழு மணிக்கே இந்த ரூமுக்குள்ள இப்படிப் புழுங்குதே... மத்தியான நேரத்துல எப்படி உட்கார்ந்திருக்கே?"

"பழகிட்டுதுடா... ரொம்ப உடம்பு எரிஞ்சா அப்படி ஒத்துக் கொட்டகையில உட்கார்ந்திருப்பேன்..."

வியாபாரம் நன்றாகத்தான் நடந்து கொண்டிருந்தது. ஆட்கள் வருவதும் காசைக் கொடுத்துவிட்டு அவர்களாகவே எடை போட்டு விறகை எடுத்துச் செல்வதுமாக இருந்தார்கள். பக்கத்தில் சைக்கிள் பிடிக்கும் இடம். சைக்கிளைப் போட்டுவிட்டு வந்து காசு கொடுத்து விட்டு, டோக்கன் வாங்கிக் கொண்டு போனார்கள்.

பெரும்பாலும் ஊர்க்காரர்கள். தெரிந்த முகங்கள், பிரச்னை ஏதும் வராது.

தாத்தா உட்கார்ந்து வியாபாரம் பார்த்த இடம். பெரிய மாட்டுத் தொழுவம். கிட்டத்தட்ட ஐம்பது மாடுகள் இரண்டு புறமும் கட்டப்பட்டிருக்கும். இந்தப் பக்கம் பாறை வண்டிகள் மற்றும் விவசாயச் சாமான்கள் குவிந்து கிடக்கும். விடுமுறை நாட்களில் மன்னார்குடியிலிருந்து திருச்சேறைக்கு வந்து விடுவேன். தாத்தாவின் அருகில் அமர்ந்துகொண்டு, அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டு... அங்கேயும் இங்கேயுமாக அலைந்து கொண்டிருப்பேன். அவ்வப்போது அவருக்கு வீட்டிலிருந்து காபி கொண்டு வந்து கொடுப்பேன்.

சாயங்காலமானால் ஏராளமான வேலை ஆட்கள் வேலைகளை முடித்துவிட்டு வருவார்கள். அனைவருக்கும் கூலி கொடுத்து, அடுத்த நாள் வேலை சொல்லிவிட்டு, வீட்டுக்குப் புறப்பட இரவு பத்து மணியாகிவிடும்.

இதெல்லாம் இருபது வருடங்களுக்கு முன், மாமாவுக்குத் திருமணம் ஆனதிலிருந்து வியாபாரம் டல்தான். கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து... அந்தக் கவலையில் தாத்தா இறந்து... பிறகு ஒரேடியாகப் போய்விட்டது. காவிரி பொய்த்துப் போய் விட... தண்ணீர்ப் பிரச்னை... மாமாவுக்கும் விவசாயத்தில் ஆர்வமில்லை. கணிசமான வயல்வெளிகளை விற்றாயிற்று. வீட்டுச் சாப்பாட்டுக்கு மட்டும் ஏதோ கொஞ்சம் நிலம் இருக்கிறது. மாடுகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்து... இப்போது விறகு மற்றும் சைக்கிள் பிடிக்கும் இடம்.

"மகராசி... எங்க அண்ணனுக்குன்னு வந்து வாய்ச்சது பாரு... அப்பாவை அள்ளிக்கிட்டுப் போனா... இப்ப வியாபாரத்தையும் கவுத்துட்டா... இது பாவம். புள்ளை புள்ளைன்னு அங்க உட்கார்ந்துகிட்டு மருமகளுக்குப் புழுக்கை வேலை பார்த்துக்கிட்டு இருக்கு..."


அம்மா அவ்வப்போது புலம்புவாள். சமயத்தில் திடுமென அம்மாயியைப் பார்க்கக் கிளம்பி விடுவாள். திரும்பி வரும்போது முகம் வீங்கியிருக்கும்.

காரணம் புரியும். மாமியோடு சண்டை. பிறகு திருச்சேறைக்கு வருவதை படிப்படியாகக் குறைத்துக்கொண்டாள்.

"ஒரு வாரம் ஊருல வந்து தங்கேன்.. அம்மா உன்கிட்ட கேட்டுட்டு வரச் சொல்லிச்சு."

"இப்ப எதுக்கு? வர்றேன்னு சொல்லு..."

"ஏன் அம்மாயி... உனக்கு எண்பது வய சாச்சு... கடைசிக் காலத்துல வீட்டுல சிவ னேன்னு படுத்துக் கிடக்காம... இதென்ன பிடி வாதம்?" கோபமாகக் கேட்டேன்.



அருகில் நின்று கொண்டிருந்த சுந்தர மூர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தார்.

"உடம்புக்கு ஏதாச்சும் வந்தாக் கூட நான் படுத்துக்க மாட்டேன்... இப்ப நல்லா இருக்கேன்... நேரம் காலம்னு ஒண்ணு வந்தா பொசுக்குன்னு போயிட வேண்டியதுதானே... ஆகாச மாரியம்மன் என்னைப் படுக்கையில போட்டுறக் கூடாது... அதான் தினமும் வேண் டிக்கிட்டு இருக்கேன்... இங்க உட்கார்ந்தபடியே உயிர் போயிடணும்..." என்றாள்.

"அப்படியெல்லாம் பேசாத அம்மாயி... உனக்கு ஒண்ணுன்னா நாங்க சும்மா விட்டுடுவோமா...? தூக்கிக்கிட்டு ஊருக்குப் போயிட மாட்டோம்."

அதெல்லாம் என்னை எங்கே யும் கொண்டு போக வேணாம்... உயிர் திருச்சேறையிலதான் போக ணும்... எனக்கு அதான் பெருமை."

"என்னவோ போ அம்மாயி... மனசு கஷ்டமா இருக்கு"

"எனக்காக கவலைப்படாதடா பேராண்டி... இது உதிர்ந்து போன கட்டை... சந்தோஷமா இருக்க வேண்டிய வயசு உனக்கு... அலட்டிக் காதே..."

"சரி அம்மாயி... நான் புறப்படட்டுமா?"

"இரு, டீ வாங்கி வரச் சொல்றேன்" என் றாள்.

அம்மாயி இப்படிச் சொன்னதுமே சுந்தரமூர்த்தி லோட்டாவை எடுத்துக் கொண்டு வெளியே போனார்.

"அம்மாகிட்ட சொல்லு... கடையில படுத்துக் கிடந்தேன்னு சொல்லு... வியர்க்க விறுவிறுக்க உட்கார்ந்திருந்தேன்னு சொல்லாத... நேத்தி கனாவுல வந்தா...



"வீட்டுலே நான் இருக்கும்போதேதான் சண்டை போட்டுட்டியே... இப்ப ஏன் ஆபீஸ்லே போன்லே கூப்பிட்டு மறுபடியும் வம்பு இழுக்குறே?"

"உங்களை அங்கே நிம்மதியா தூங்க விட்டுட்டு நான் இங்கே சும்மா இருப்பேன்னு நினைச்சீங் களா?"

- தஞ்சை தாமு

'அம்மா'ன்னு அழுதா... நல்லாருக்கேன்... இப்ப எனக்கு ஒண்ணும் ஆகாதுன்னு சொல்லு... முடிஞ்சா... இந்தக் கட்டைய வந்து பார்க்கச் சொல்லு" என்றாள்.

டீ குடித்து முடித்துவிட்டு எழுந்து கொண்டேன். "நான் கிளம்பறேன் அம்மாயி..."

"ம்" என்றாள். சுருக்குப் பையிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

"அந்தப் பொண்ணுகிட்ட கொடு... இன்னொன்று பெத்துக்கச் சொன்னேன்னு சொல்லு.. முடிஞ்சா அடுத்த தடவை அதையும் அழைச்சுக்கிட்டு வா" என்றாள்.

சுருக்குப் பையைப் பிரித்து விபூதி எடுத்து நெற்றி நிறையப் பூசி விட்டாள்.

"ஆண் குழந்தை வேணுமின்னு ஆகாச மாரியம்மன்கிட்ட வேண்டிக்கிட்டுப் போ..." என்றாள்.

"சரி அம்மாயி..."

குனிந்து அவள் காலைத் தொட்டு வணங்கிவிட்டு வெளியே வந்தேன். என்னவோ போல இருந்தது. அம்மாயியைப் பார்த்தது, பேசியது, மகிழ்ச்சியைத் தந்தாலும், இந்த வயதில் இவளுக்கு ஏன் இந்தச் சூழ்நிலை? என்று தோன்றியது. மாமா மாமி மீது கோபம் கொப்பளித்தது.

"என்ன தம்பி?" என்றார் சுந்தரமூர்த்தி. தாத்தா காலத்திலிருந்து இங்கே இருப்பவர்.

"எப்படி இருக்கீங்க?"

"நல்லாருக்கேன் தம்பி..."

"நீங்களாச்சும் பார்த்துச் சொல்லக் கூடாதா...? இந்த வயசுல அம்மாயி இப்படிக் கடைக்கு வந்து வியாபாரம் பார்க்கணுமின்னு தலையெழுத்தா என்ன?" என்றேன். சிரித்தார் அவர்.

"உன் அம்மாயிக்கு உடம்பு வீட்டுல தங்காது தம்பி" என்றார்.

"ஏன்?"

"காதல்."

சுந்தரமூர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தார்.

எனக்கொன்றும் புரியவில்லை. அவரையே உற்றுப் பார்த்தேன்.

"தம்பி... நான் உங்க தாத்தா காலத்துலேந்து இங்க இருக்கேன்... உங்களுக்குத் தெரியும்... ஆத்தாவும், தாத்தாவும் தூரத்துச் சொந்தம்... ஆனா காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக் கிட்டவங்கன்னு உங்களுக்குத் தெரியுமா?"

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. சொந்தக்காரர்கள் என்று தெரியும். ஆனால் காதல் விவகாரம் தெரியாதே! அம்மா சொன்னதில்லையே...!

"அப்படியா?" என்றேன்.

"இப்ப உங்க ஆத்தா உட்கார்ந்து வியாபாரம் பண்ணுது பாருங்க... தினம் ஆத்தாவை பார்க்கிறதுக்காகவே தாத்தா அந்த அறையக் கட்டினாரு... இவங்க பால் வாங்க வருவாங்க... வெளியில உட்கார்ந்திருந்தா ரகசியமா பார்க்க முடியாதுல்ல? அதனால ரூமுக்குள்ள உட்கார்ந் திருப்பாரு உங்க தாத்தா... இப்படியே ரொம்ப நாளு பார்த்துக்கிட்டு இருந்தாரு.. பிறகு தாத்தா மனசைப் புரிஞ்சுகிட்டு ரெண்டு பேரும் பழக ஆரம்பிச்சாங்க... அப்புறமா இந்த ரூமுக் குள்ளதான் உட்கார்ந்து மணிக்கணக்கா பேசிக்கிட்டு இருப்பாங்க... அந்த நினைப்பு... தாத்தா செத்துப் போனதிலிருந்து, இது இங்கதானே முழு நேரமும் உட்கார்ந்திருக்கு... அவர் தனக்காக கட்டின ரூமுக்குள்ளேயே செத்துப் போகணும்னு விரும்புதோ என்னவோ?"

எனக்கொன்றும் பேசத் தோன்றவில்லை. மனத்துக்குள் திடுமென ஒரு திரை விலகி... நிறைய விஷயங்கள் படபடவெனப் புரிந்தன.

கிட்டத்தட்ட அறுபத்தைந்து வருடங்களாக இருந்து வரும் காதல் வேகம் என்னைப் பரவசப்படுத்தியது. வேகம் அல்ல, நினைவு! இளம் வயதிலேயே வாழ்க்கையைத் தவற விட்ட சோகம். மனசுக்குள் ஒரு நெகிழ்வு பரவியது. மகிழ்ச்சியுடன் பேருந்துக்காகக் காத்திருக்கத் தொடங்கினேன். ○

வர்றாரு சிங்கால், ஓடு! ஓடு!

அயோத்தியில் ராமர் கோயில் கட்டப் பலரும் பல யோசனைகள் வழங்கி வருகிறார்கள். நம் கற்பனையில் சிலர் அபாரமான யோசனைகளை அநாயாசமாக எடுத்து வைத்தார்கள். வசதியைப் பொறுத்து, பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

கமல் : அயோத்தியில் ராமர் கோயில் கட்டப் பிறரிடம் அனுமதி கேட்பது, தமிழ் நாட்டில் தமிழ் கற்பிக்க ஆந்திராவிடம் அனுமதி கேட்பது மாதிரி இருக்கிறது. ராமர் இருந்தாரா இல்லையா என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். அயோத்தி, அன்று இருந்த பெயரிலேயே இன்னும் இருப்பதால், ராமரும் இருந்திருக்கலாம். அயோத்தியின் பெயரை, எந்த மிரட்டலுக்கும் அடி பணிந்து யாரும் மாற்றிவிடவில்லை என்பதே மகிழ்ச்சியளிக்கிறது. அது போலவேதான் ராமர் பெயரும். ஆனால், அங்கே கோயில் கட்டுவதற்கு முன்னால், கொஞ்சம் விச்சரிவாள், வெட்டரிவாள்களுடன் சுற்றிலும் பாதுகாப்புக்கு ஆட்களை நிறுத்தி வைத்த பிறகுதான், அதைத் தொடங்க வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க உ.பி. முதலமைச்சரை நேரில் சென்று பார்த்து வேண்டிக் கொண்டால் விஷயம் வெகு எளிதாக முடிந்து விடும். ஒரு வேளை அவர் 'ராமர் பெயரை மாற்றி வைத்தால் பாதுகாப்புத் தருகிறேன்' என்று சொன்னால், மறுக்காமல் ஏற்பதுதான் புத்திசாலித்தனம். மறக்காமல் நன்றி தெரிவித்து பேப்பரில் விளம்பரமும் வர வேண்டும். கோயில் கட்ட வேண்டும் என்பதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும். யாருக்கு என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.



கவுண்டமணி, செந்தில் : இந்த ஸிலிண்டர் தலையன் செந்தில் ஏதாவது உளறினால் அதில் அர்த்தம் இருக்கும். இப்ப இருக்கற இடத்துலயே, தெனம் கொஞ்சமா கோயிலைக் கட்டிக்கிட்டே வந்திருந்தா, இன்னேரம் கோயில் முடிஞ்சிருக்குமேங்கறான்! நெசந்தானே? நான் நேத்து உட்ட ஒதைல, இன்னொரு ஐடியா சொல்றான், அந்தப் பரங்கிக்காத் தலையன். ஒரே ஒரு கோயிலைக் கட்டிட்டு மீதி இடத்தைச் சும்மா உட்டாத் தானே பின்னால் பிரச்னை வரும்? 'அதுக்கு எடமே கொடுக்காம, பிரச்னை இருக்கற நெலம், இல்லாத நெலம், ரெண்டுலயுமே இஞ்ச்கூட விடாம கோயில் கட்டிட்டா?'ன்னு கேக்கறான். 'ஒதை வாங்குறதுக்குன்னே பொறந்தவன்டா நீ, பாதாள கரண்டித் தலையா'ன்னு உட்டேன் இன்னொரு ஒதை! மறுபடி 'இன்னொரு பிரமாத ஐடியா'ன்னு வந்தான். 'இப்பத்தான் கோர்ட்டே தோண்டச் சொல்லிடிச்சே? இன்னொரு ஆயிரம் வருஷத்துக்குத்

தோண்டிக்கிட்டே இருக்கலாமே? ராம ரோட அம்பும் வில்லும் கெடைக்கற வரை தோண்டக் கூடாதா?'ன்னு கேக்கறான் அந்த அனுகுண்டுத் தலையன்.

இயக்குனர் மணிரத்னம் : உடனடியா ரெண்டு 'குரூப்'பையும் சாட்டிஸ்ஃபை பண்ணணும்னா, தோட்டா தரணிய வச்சு ஒரு டெம்பிளும், ஒரு மாஸ்க்கும் நிறைய இடைவெளி விட்டு ஸெட் போட்டுரலாம். லைட்டிங் கம்மியா இருந்தா, ரெண்டு ஸைடு ஆளுங்களும் அந்தப் பக்கமா வரவே பயப்படுவாங்க. இல்லே, வரத்தான் வருவோம்னு வந்தாங்கன்னா, இது 'ஸெட்'தான். நிஜம் இல்லேன்னு அனுப்பிச்சிடலாம். இல்லே ஒரு குரூப், இன்னொரு குரூப்போட ப்ளேஸ் ஆஃப் ஒர்ஷிப்பைத் தகர்த்துட்டாங்கன்னு வந்தாலும், அது வெறும் 'ஸெட்'தான்னு சமாதானம் பண்ணிக்கலாம். இன் ஃபாக்ட், இந்தப் பிரச்னையை வச்சுதான் என்னோட மெட்ராஸ் டாக்கீஸ் படம் ஒண்ணு பண்றதா இருக்கேன். 'சுஜாதா' ஸ்டோரி லைன்கூட ரெடி பண்ணிட்டார். அதுக்கு முன்னாடி இந்த அயோத்திப் பிரச்னை சால்வ் ஆகிடக் கூடாதுங்கறதுதான் என் பிரேயர்.

இசைஞானி இளையராஜா : எங்கேயும் இருப்பவனுக்கு, எங்கே கோயில் இருந்தால் என்ன? இல்லை, கோயிலே இல்லாவிட்டால்தான் என்ன? என்னுடைய சிம்ஃபனியில் ராமரும் இருக்கிறார் பாபரும் இருக்கிறார். உங்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஓ, நீங்கள்தான் அந்த சிம்ஃபனி கேட்கவே இல்லையே! நம்பிக்கை உள்ளவர்களுக்கு அங்கே ராமர் இருந்தால் என்ன, அல்லா இருந்தால் என்ன? பக்குவம் வராதவர்கள்தாம் பாரபட்சத்தோடு பேசுவார்கள். இசைக்கு இளையராஜாவும் ஒன்றுதான், ஏ.ஆர்.ரஹ்மானும் ஒன்றுதான். இசை தெரியாதவர்களுக்குத்தான் இவர்கள் வெவ்வேறு நபர்கள். இசையில் எப்படிக் குழப்பம் கூடாதோ, அப்படியே இறைவனிலும் குழப்பம் காணக் கூடாது. ராம ஜென்ம பூமியை அப்படியே பெரிய மைதானமாக விட்டு வைத்தால், நம் நட்சத்திரங்கள் எல்லாம் துபாய்க்கும், சிங்கப்பூருக்கும் போய் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சி நடத்தாமல், அயோத்திக்கு வந்து விடுவார்கள்! அமைதியில் கற்பனை பொங்கும்! அயோத்தியில் இசைபொங்கும்!



சீதை : *(ராமனிடம்)* என்னங்க, ராமர் இருக்குமிடம்தான் அயோத்தி. அயோத்தியிலே இருந்து நீங்க கிளம்பறேங்கறீங்களே?

ராமர் : ஆமா, என் காலத்துல ஒரே ஒரு ராவணனைத்தான் சமாளிக்க வேண்டியிருந்தது. இப்பப் பாரு, எத்தனை பேரு! அதோ வராரு அசோக் சிங்கால்! நிக்காதே, ஓடு சீதே, ஓடு!

(இருவரும் ஓடி மறைகிறார்கள்)

\- சித்தார்த்



''மன்னா... அரசியாரையும், இளவரசியையும், கொழுப்புச் சத்து நிறைந்த உணவு வகைகளையும், நொறுக்குத் தீனியையும் தவிர்க்கச் சொல்லுங்கள்!''

''ஏன் அமைச்சரே?''

''பல்லக்குத் தூக்கிகள் ரொம்ப சிரமப்படுகிறார்கள்!''

- புளியரை கணேசன்

''என்னது, நடுக்காட்டுல கல்யாணம் நடக்குது?''

''மாப்பிள்ளையோட அப்பா பயங்கரமான உதார் பார்ட்டி... போலீஸ் ஸ்டேஷன்லே இருந்து தள்ளி இருக்க இப்படி ஏற்பாடு பண்ணிட்டார்!''

- வசந்தி வள்ளுவன்





''அவர் ஒரு பெண்ணின் புனை பெயரில் எழுதுகிறார்''

''அதுக்காக புடைவை கட்டிக் கொண்டு வளையல் போட்டுக்கிட்டு எழுதணுமா?''

- எஸ்.மோகன்

''அவர் உறுமி மேளம் அடிப்பாரு...''

''ஏன்... உறுமாம மேளம் அடிக்கத் தெரியாதா?''

- தஞ்சை தாமு



"நீ ஏன் அந்த பாங்கில் கொள்ளையடிச்சே?"

"போலீஸ்காரங்க எல்லாம் மாமூலை ஏத்திட்டாங்க. வீடுகள்ல கொள்ளை அடிச்சா கட்டுப்படி ஆகலே எஜமான்!"

- அதிரை புகாரி



கட்டுப்படி ஆகலை எஜமான்!




"சே! இந்த ஆபிஸ்லே சீனியாரிட்டிக்கு மதிப்பே இல்லாமப் போச்சு."

"ஏன் ஸார் அலுத்துக்கறீங்க...?"

"பின்னே? நேத்து வந்தவங்களெல்லாம் என்னைவிட அதிகமாத் தூங்குறாங்களே!"

- தஞ்சை தாமு



"நம்ம தலைவர் திருட்டு வி.சி.டி.ல புதுப்படங்கள் பார்த்துடறார் போலத் தெரியுது."

"எப்படிச் சொல்றீங்க...?"

"குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும்போது 'த்ரிஷா, கீது, பவன், டெய்ஸி...'ன்னெல்லாம் பேர் வைக்கிறாரே..."

- நாமக்கல் பாலு

பறவை யுத்தம்!

ஜமாய்த்திருக்கிறார் ஜார்ஜ் பெர்னாண்டஸ். ஜூன் 21ம் தேதி, ஒலியைவிட 1.2 மடங்கு வேகத்தில் பறந்து தரையிறங்கியிருக்கிறார்! ரஷ்ய நாட்டின் ஒத்துழைப்புடன் இந்திய விமானப்படைக்காக உருவாக்கப்பட்ட SU 30 MKI என்ற விமானத்தில் பறந்து, அதன் திறனை சுய அனுபவம் மூலம் தெரிந்து கொள்ள, பாதுகாப்பு அமைச்சர் செய்த சாகச முயற்சி இது!

பாகிஸ்தானிடம் வாஜ்பாய் மறுபடியும் நீட்ட முயலும் நேசக் கரத்தின் கதி என்ன என்று உறுதியாகத் தெரியவில்லை. இரு நாட்டு அரசுகளும் தற்காப்பு நடவடிக்கை என்ற பெயரில் செய்து வரும் ஆயத்தங்களில் - பாக், அமெரிக்காவிடம் இருந்து பெற்றுவிட முயலும் F16 விமானங்களுக்கு, இந்தியாவின் பதில்தான் இந்த SU 30 MKI என நம்பப்படுகிறது.

ஒரிஜினலான SU வகை விமானங்கள் ரஷ்ய நாட்டின் SUKHOI என்ற நிறுவனத்தால் Su-27, Su-30, Su-24, Su-25, Su-24M மற்றும் Su-33 என்ற பல மாடல்களில் தயாரிக்கப்படுகின்றன.

SU 30 MK என்பது விமானப்படையின் வார்த்தை ஜாலப்படி, ஒரு மல்டி ஃபங்க்ஷனல் தாக்குதல் விமானம். அதாவது போர்க் காலங்களில் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்த ஏற்றது. குண்டு வீசி அதிரடித் தாக்குதல் நடத்த, தரை இலக்கு மற்றும் விமானங்கள் மீது ஏவுகணை வீசித் தாக்க, வான் எல்லையைக் கண்காணித்து எதிரி ஏவுகணைகளைத் தடுத்திட, எதிரி விமானத்தை மடக்கிப் பிடிக்க, வேவு பார்க்க, இளம் அதிரடிப் படை விமானிகளுக்குப் பயிற்சி அளிக்க, தளவாடங்களை இடம் பெயர்க்க என அடுக்கிக் கொண்டே போகலாம். இத்துடன் நடுவானில் எரிபொருள் நிரப்பிக் கொள்ளும் வசதியும் இதில் உண்டாம். இதனால் தொடர்ந்து போரில் ஈடுபடும் சக்தி இதற்கு உண்டு. இன்று உலகில் வேறு எந்த நாட்டிலும் உள்ள அதி நவீன விமானத்துக்கு இது இணையானது. இத்தகைய விமானத் தயாரிப்புத் தொழில் நுட்பத்தைப் பெற்று, அதனுடன் இந்தியாவின் பிரத்யேக தேவைகளையும் கருத்தில் கொண்டு இந்தியாவின் டி.ஆர்.டி.ஓ (Defence Research and Development Organisation) உதவியுடன் பெங்களூரில்



● பெர்னாண்டஸ்



● சுகாய் - 30

உள்ள HAL நிறுவனம் தயாரிப்பதுதான் SU 30 MKI. அதாவது, இது இந்தியாவின் பிரத்யேக தேவைக்கானது. இந்த விமானத்தில் பயன்படுத்துவதற்காக என்று பிரத்யேக AK31FP என்ஜின் தயாரிக்க, முந்நூற்று இருபது கோடி ரூபாய் முதலீட்டில், பூனா அருகே தொழிற்சாலை ஒன்றும் இந்திய விமானப்படையால் நிறுவப்பட்டுள்

ளது. அடுத்த பதினேழு ஆண்டுகளில் இந்த வகையில் நூற்றி நாற்பது விமானங்களை, இந்தியா தானே தயாரித்துக் கொள்ள ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின்



• எப்-16



நவீன போர் விமானத் தகவல்கள் இது என்றால், பாக். அமெரிக்கா விடம் இருந்து பெற்று விடத் துடிக்கும் விமானம் F-16 நிலையும் கிட்டத்தட்ட ஒப்பிடக் கூடியதுதான்.


விண்ணிலிருந்து விண்ணுக்கு... விண்ணிலிருந்து மண்ணுக்கு... என இருவகைத் தாக்குதல் நடத்தவும் ஏற்றது இந்தப் 'பறவை'. இதனுடன் ஒப்பிடக்கூடிய வேறு எந்த விமானத்தை விடவும் சர்வதேசச் சந்தையில் இது விலை குறைவானது என்கிறார்கள். அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளிடம் உள்ள அதிநவீன போர் விமானங்களில் இது குறிப்பிடத்தக்கது. எந்த மாதிரியான சீதோஷ்ண நிலையிலும், வானிலையிலும், இது எதிரி விமானங்களை அடையாளம் காணும் சக்தி கொண்ட ராடார் கருவிகளைக் கொண்டது. அதனால் இமய மலையின் சியாச்சின் போன்ற பிரதேசங்களிலும் சண்டையிட, இந்தியத் தரப்பில் SU 30 MKIக்கு மாற்றாக பாக். வேண்டுவதுதான் F16 வகை விமானம். தரை இலக்கை ஏவுகணை கொண்டு தவறாமல் தாக்கவும் இதனிடம் சக்தி உண்டு. சுருக்கமாகச் சொன்னால், அமெரிக்கா தனது தேவைக்குத் தேர்ந்தெடுக்கும் நம்பகமான வெகு சில போர் விமானங்களில் இதுவும் ஒன்று. இத்துடன், மற்ற பல விமானங்களைவிட எதிரியின் மீது கண் வைத்து, மேலிருந்தும், இரு பக்கங்களிலிருந்தும் கண்காணிக்க என கூடுதல் திறன் கொண்டது. இதில் பகல்/இரவு என இரு வேளைகளிலும் தாக்குதல் நடத்த ஏற்ற வாய்ப்புகள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இது அமெரிக்கா மற்றும் அதன் பழைய பங்காளிகள் என சொல்லத்தக்க 'நேட்டோ' நாடுகளின் தேவைக்கு என, ஒரு அசாதாரண ஒப்பந்தத்தின்கீழ் தயாரிக்கத் தொடங்கப்பட்டது. அண்மையில் நடந்த ஈராக் தாக்குதலின்போதும், அதற்கு முந்தைய போரான ஆஃப்கானிஸ்தான் விடுவிப்பிலும் அமெரிக்காவுக்கு நம்பகமான நேசனாக விளங்கியது F16. செப் 11 தாக்குதல் நடந்தவுடன் அமெரிக்க நாட்டு வான் எல்லை முழுவதும் கண்காணிப்பில் வைக்கப்பட்டபோது, நம்பகமானதாகக் கருதி பயன்பட்டது இந்த விமானம்தான். இதுவரை நான்காயிரத்து முந்நூறு விமானங்கள் இந்த வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை இருபத்து மூன்று நாடுகளின் விமானப்படைகளை தற்போது அலங்கரிக்கின்றன. இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டு வரை இதன் உற்பத்தி தொடரும். இரண்டாயிரத்து முப்பதாம் ஆண்டு வரை இந்தப் பறவைக்கு மவுசு குறையாதாம்!

- ஆர். சந்திரன்

'சிந்தன் பைடக்'கில் பிஜேபி தலைவர்களெல்லாம் அரசியலை அலசினார்களோ இல்லையோ, சர்வ நிச்சயமாக மசாலா தோசையையும், ஊத்தப்பத்தையும், வடாபாவையும், பேல்பூரியையும், இன்னும் நாவூறச் செய்யும் விதவிதமான அயிட்டங்களையும் மூன்று நாட்களுக்கு ருசியோ ருசி என ருசித்தார்கள். இதில் சோதனை என்னவென்றால், இந்த விருந்தில் வாஜ்பாய், அத்வானி போன்ற பெருந்தலைவர்கள் பங்கெடுத்தனரே தவிர, லோகல் தலைவர்களை எல்லாம் ஒப்புக்குக்கூட அழைக்கவில்லை. இது தெரியாத பொது மக்கள், தங்கள் பி.ஜே.பி. தலைவர்களை எல்லாம் 'என்ன... நீங்க போகலையா?' என்கிற தினுசில் கேள்வி கேட்க ஆரம்பிக்க, சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் குட்டித் தலைவர்களெல்லாம் ஆளாளுக்கு, செல்ஃபோனையும் ஆஃப் செய்துவிட்டு, மாதேரான், லோனாவாலா அல்லது சொந்தக் கிராமம் என்று தலைமறைவாகி விட்டனர். மூன்று நாட்களுக்குப் பின் தலைகாட்டியவர்களிடம், 'என்ன... எப்படி இருந்தது மீட்டிங் எல்லாம்?' என்று ஆளாளுக்கு விசாரிக்க... பாவம்... அவர்கள் நொந்தே போனார்கள்!

பிறக்கும் போதே சில்வர் ஸ்பூன்!

நொந்தே போய் விட்டார் ஊர்மிளா வினோத்குமார் யாதவ் என்ற பத்தொன்பது வயது நிறைமாத கர்ப்பிணி. அவர் குடியிருக்கும் விராரில் எந்த ஆஸ்பத்திரியிலும் அவரை அனுமதிக்க மறுக்க, போரிவிலி சென்று பார்க்கலாம் என்று அம்மா தம்பியுடன் விரார் ஃபாஸ்ட் ரயிலில் ஏறியிருக்கிறார். மீரா ரோட் வருவதற்குள்ளேயே வலி அதிகமாக, தெய்வாதீனமாக அதே ஸ்டேஷனில் ஒரு நர்ஸ் ஏறியிருக்கிறார். சினிமாவில் வருவது போல் யாரோ கத்தரிக் கோலைக் கொடுக்க, அவரவர் வாட்டர் பாட்டில்களிலிருந்து தண்ணீரைக் கொடுக்க, கத்தல் அலறல்களுக்கிடையே ஆரோக்கியமான பெண் குழந்தை பிறந்துவிட்டது! ஒரு பெண்ணின் துப்பட்டா டவலாக, வேறொருத்தி தான் பின்னிக் கொண்டிருந்த ஸ்வெட்டருக்கான கம்பளி நூலையே பஞ்சாகக் கொடுத்து விட்டாள். தஹிசர் வருவதற்குள் குழந்தை பிறந்துவிட, போரிவிலியில் செயின் இழுக்கப்பட்டது. தம்பி, குழந்தையை ஏந்த, பிள்ளை பெற்றவள் இறங்கி நடக்க, நர்ஸ் துணையுடன் எதிரேயிருந்த முனிசிபல் ஆஸ்பத்திரியில் தாயும் சேயும் சேர்க்கப் பட்டார்கள். எப்போதும் பிதுங்கி வழியும் மும்பை ரயில்களையே 'கர்ப்பிணிப் பெண்' என்றுதான் சொல்வார்கள். அதில் மற்றொரு கர்ப்பிணி ஈன்றெடுத்தது இதுவே முதல் தடவை.


• மார்க்கஸ் ஷென்கென்பர்க்

வெஸ்டர்ன் ரயில்வேக்காரர்கள் அன்பளிப்பாக வெள்ளிக்கிண்ணமும் வெள்ளி ஸ்பூனும் பரிசளித்திருக்கிறார்கள். பிறக்கும்போதே 'ஸில்வர் ஸ்பூனுடன்' பிறந்ததாகப் பெருமையடித்துக் கொள்ளலாம்?

பெருமை அடித்துக் கொள்ளவா, அல்லது பொறுமையைச் சோதித்துப் பார்க்கவா என்று தெரியவில்லை... வரவர நூதன முறையில் திருமணம் செய்து கொள்பவர்களின் லூட்டி தாங்க முடியலைடா சாமி! வாஷியில் ஒரு தம்பதி இப்படித்தான், ஸ்விம்மிங் பூலில் தண்ணீருக்குள் மூழ்கியவாறே, தம் பிடித்து தாலி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் திருமண நிச்சயதார்த்தமும் நடுவானில் விமானத்தில் பறந்து கொண்டே நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது! வாழ்க்கை என்றால் பறக்கும் தருணங்களும் இருக்கும்; மூழ்கும் தருணங்களும் இருக்கும் என்பதை சிம்பாலிக்காக உணர்த்துவதற்காகவோ?

உணர்த்துவதற்காகச் சிலர் கஷ்டப்படுகிறார்கள்; உணர்ந்தபின் பலர் கஷ்டப்படுகிறார்களே?... பாருங்களேன்... 'டாப்டென்' படங்கள், பாடங்கள் ஸ்டைலில், 'டாப்



• குழந்தையுடன் ஊர்மிளா

டென்' கையூட்டுப் பெறுபவர்களின் பட்டியலை ஏ.சி.பி. (anti corruption buerau) வெளியிட்டாலும் வெளியிட்டதா? விஷயம் வெளியே வந்தபின் ஒரே டென்ஷன்! பின், நம்பர் ஒன் இடத்தில் காவல் துறை இடம் பெற்றால்! அதுவும் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கும் மும்பை முனிசிபல் கார்ப்பரேஷனைக் காட்டிலும் பத்து மதிப்பெண்கள் அதிகம் பெற்று, முதலிடத்தைப் பெருமையுடன் பிடித்துள்ள சிறுமையை என்ன சொல்ல? இந்த வருடத்தில், இன்று வரை முப்பத்தொன்பது போலீஸ் காரர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டுள்ளார்கள். அதில் நான்கு பேர் ஸீனியர் இன்ஸ்பெக்டர்கள்; முப்பத்திரண்டு பேர் இன்ஸ்பெக்டர், சப் இன்ஸ்பெக்டர் ரேஞ்சில்! சமூகத்துக்கு 'ரோல் மாடல்'களாக இருக்க வேண்டியவர்கள், 'ரோக் மாடல்'களாகி விட்டார்களே?

மாடல்களுக்கெல்லாம், அதுவும் அந்நிய மாடல்களுக்கெல்லாம் திடீரென்று இந்தியா மீது பிரேமை ஏற்பட்டிருக்கிறது. ஃபாஷன் உலகில் இந்தியாதான் இப்போது 'ஹாட் ஸ்பாட்'டாமே? முதலில் இத்தாலியர்கள் மும்பையை முற்றுகையிட்டார்கள்; இப்போது அமெரிக்காவின் 'ஃபாஷன் கிங்' ரால்ஃப் லாரன் வருகிறராமே? அதுவும் உலகின் டாப் ஆண் மாடல்கள் நாலு பேரை அழைத்துக் கொண்டு? ஆறடி மூன்றங்குல சூப்பர் மாடல் மார்க்கஸ் ஷென்கென்பர்க், ஆக்ஸல் ஹெர்மன்,



• தாங்கமுடியலைடா... சாமி!

ரையன் பர்ன்ஸ், ப்ராட் க்ரோனின் எல்லோரையும் காண வேண்டுமென்றால் ஜூலை ஒன்றாம் தேதி மும்பை வாருங்கள்! - இரண்டு மணி நேரத்துக்குத்தான் இந்த தரிசனம் கிட்டும்; அப்புறம் உதய்பூருக்கு பறந்து விடுவார்களே! அந்தப் பாலைவன ஊர்தான் ஷூட்டிங்குக்குச் சோலைவனமாகத் தெரிகிறது!

- ஜெய்ஸ்ரீ ராஜ்


குல்லு மல்லு
–கதிர்
அந்த கிரீன் கலரைக் காமிங்க. அதில்ல... லைட் கிரீன்.
என்னடா ஆச்சு?
கடைக்குள்ள வரும்போது ஃப்ரெஷ்ஷா இருந்தேன். எனக்கு தாடி வளர்றதுக்குள்ளயாவது துணி எடுத்திருவியா?
கொஞ்சம் கோ-ஆப்பரேட் பண்ணுடா.
என்னைக் கடை மாடலா ஆக்கிடுவே போலிருக்கு
நீ பெண்ணா பொறந்திருக்க வேண்டியவன்!
நானும் அதத்தான் சொல்றேன்.
என்ன கிளம்பிட்ட?
இங்க அவ்வளவா கலெக்ஷனே இல்லடா!
அந்தக் கடையப் பாரு... நல்ல கலெக்ஷென்ஸ் இருக்கும்.
அவ்வளவு பெரிய கடையில இல்லாத கலெக்ஷன் இந்தக் கடையில இருக்கா...!
மறுநாள்:
ஏய் குல்லு, காஸ்டியூம் நல்லாயிருக்கே. எங்க எடுத்த?
நேத்துதான் டிரஸ் லேண்ட்ல ஆயிரம் ரூபா குடுத்து எடுத்தேன்.
ஆயிரம் ரூபாயா? அலைச்சலுக்கு ஆன நேரத்தைக் கணக்கு போட்டா பத்தாயிரத்தைத் தாண்டிடும்!

வாழ்வை அளந்து அந்த் அந்த நாட்களில் நடக்க இருக்கும்
அரிய நிகழ்ச்சிகளை அணுகளவும் பிசகின்றி சொல்லும்

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

அன்றைய கால அறிஞர்கள் ஆகாய வெளி கிரகங்களை மையமாக வைத்து உலகின் ஓட்டத்தை அளவை செய்து அதில் பிறவி எடுக்கின்ற மனித வாழ்வை ஒவ்வொரு நாளும் எப்படி இருக்குமென்ற இம்மியளவும் தவறாது கணிதமுறைதான் ஜோதிட சாஸ்திரம்.

சரியான முறையில் பிறவியின் சூழ்நிலையை சரியாக வைத்து இளம்பிராயத்து இனித்த நாட்கள் முதலாய் - எல்லோருக்கும் வாழ்வினை கற்பிக்கும் கிழத்தள்ளாட்டம் வரை ஒரு இஞ்சும் விடாமல் சொல்லிவிட முடியும். அத்தகைய அரிய கலையை உரிய வழியில் கற்றுக்கொள்ள அரிய சந்தர்ப்பம் இது.

சாஸ்திர வழியாக ஜோதிடத்தில் தந்தையாகிய வராகமிகிரர் வழி வந்த வகையினரால் கற்றிடும் இந்த சூழ்நிலை அமைவது கஸ்டம். 250 உதாரண ஜாதகங்களுடன் படிப்பு,பட்டம், பதவி என்று ஜாதகம் எப்படி அமையும், தொழில் வழியில் கோடி தனமீட்டி அனைவரும் வணங்கிடும் நிலையில் அரசனைப்போல் வாழும் ஜாதக அமைப்பு எப்படி இருக்கும்.குடும்ப சூழ்நிலையில் சுகம் காணும் ஜாதகம், அனைவரையும் கட்டிக்காத்திட உரிய அரசு வழி மேன்மை பெறும் ஜாதக அமைப்பு, விரைவில் விவாகம் காணும் ஜாதகம்,நிலை தடுமாறி விவாகமே இல்லாது வேத சாஸ்திரியாய் போகும் ஜாதகம் அரும்பெரும் மக்களைப்பெற்று அகிலம் புகழ வாழும் ஜாதக அமைப்பு, மாட மாளிகை கூட கோபுரம் என்று என்னும் இனிதான வாழ்வில் கனிவாக இருக்கும் ஜாதகம், நோய் நொடியில்லா ஆரோக்கிய நிறைவும், ஆயுள் தீர்க்கமும் பெற்ற ஜாதகம் எது என பார்த்தவுடேனேயே அறிந்திடும்படியான அடையாளங்களை சுட்டிக்காட்டி உதாரண ஜாதகங்கள் வழியாக உண்மைகள் விளக்கப்பட்டிருக்கும்.

63 பாடங்கள் அத்தனையும் அரிதான உபதேசக்கோர்வை. இதனை படித்துவிட்டால், எள்ளளவும் பிசகின்றி ஜாதக பலனை துள்ளிதமாக சொல்லிடும் தீர்க்கவழி மெய்ஞானம் ஏற்படும்.எனவே இதனை கற்றிட விரும்புவோர் **14-08-2003** தேதிக்குள் உங்கள் ஜாதக நகலையும் வைத்து ஜோதிடக்கலை கற்றுத்தேற விரும்புகின்றேன் என்று எழுதி அனுப்புங்கள்.

எவர் ஒருவர் மதுபானம் செய்தல், புகைபிடித்தல், புகையிலை பொடி போடுதல் போன்ற தீய பழக்கம் இல்லாது இருக்கின்றாரோ அவர் மட்டும் மனு செய்து கொள்ள வேண்டும். தீய பழக்கம் உள்ளவர் மனுச்செய்ய வேண்டாம். ஏனெனில் இந்த தெய்வக்கலை வழியான அருள் நிலை வரப்பெறாது.

தீய பழக்கமற்றவர்கள் உரிய தேதிக்குள் ஜாதக நகலுடன் மனுச்செய்து கொள்க.உங்கள் மனு கிடைத்தவுடன் உரிய விபர படிவம் அனுப்புகிறோம். அந்த விபரப்படி செய்து பாடம் வாங்கி முழுமையாக படித்துவிடில் ஒரு பெரிய ஜோதிடர் சொல்லும் அளவிற்கு சற்றும் பிசகின்றி சொல்லும் ஆற்றலை பெற்றிடலாம். அதனை பயின்று கடைசி பாடங்களான 61,62,63 பாடங்களில் கொடுத்திருக்கும் வினாக்களுக்கு சரியான விடை எழுதி அனுப்பின் அதனை பரிசீலித்து மதிப்பெண்ணுடன் சான்றிதழும் 'ஜோதிடக்கலைஞர்' என்ற பட்டமும் தருவோம். ஜாதகப்படி அத்தகைய ஒரு சாஸ்திர அறிவாற்றல் பெறும் 'விதி' அமைப்பு இருப்பவர்களுக்குத்தான் இந்த விளம்பரம் கண்ணில்படும்.உரியபடி செய்து இக்கலையமுதை கற்றுத்தேறி யாவும் பெற்று புகழ் பெறுவர். எமது ஆசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட்எண்: 204, அண்ணாநகர் மதுரை- 625 020 தமிழ்நாடு

(0452)
2533412
2650576

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka



ஆடிக் காத்து! அதிர்ஷ்டக் காத்து!

தி சென்னை சில்க்ஸின் ஆடித் தள்ளுபடி துவங்கி விட்டது. இந்த ஆண்டு ஆடிக் காற்று அதிர்ஷ்டக் காற்றாக மாறி 10% முதல் 50% வரை தள்ளுபடியோடு வீசுகிறது. பட்டு, ரெடிமேட் மற்றும் அனைத்து ஜவுளிகளுக்கும் 10% முதல் 50% வரை தள்ளுபடி பெறுங்கள்.

- தங்கள் வசதிக்கென தனித் தனி பிரிவுகள்.
- ஆடி விற்பனைக்காக சிறப்பு கவுண்ட்டர்கள்.
- எல்லா ஞாயிறும் கடை உண்டு.
- புத்தம் புது ரகங்கள்.

ஆடி தள்ளுபடி 2003

10% - 50%

ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 17 வரை

தி சென்னை சில்க்ஸ்™

தமிழகத்தின் மாபெரும் ஜவுளி சாம்ராஜ்யம்

23, உஸ்மான் ரோடு, தி. நகர், சென்னை - 17. ✆: 24310888

85 A, R.K.V. ரோடு, ஈரோடு - 1. ✆: 2213270

558 - 560, ஒப்பணக்கார வீதி, கோயமுத்தூர் - 1. ✆: 2391555

74, புது மார்க்கெட் வீதி, திருப்பூர் - 4. ✆: 2242888

அனைத்து கிரெடிட் கார்டுகளும், ஃபாரின் கரன்ஸிகளும் ஏற்றுக் கொள்ளப்படும்

Online shopping: www.thechennaisilks.com